ஊற்று: 2 | நதி: 10 | பிப்ரவரி 2020 | திங்களிதழ்
ISSN : 2582-4015

படைப்பு

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “எனக்குள் எப்போதும் ஒரு காடு இருக்கிறதாக உணர்கிறவள் நான்”

- கவிஞர் சக்தி ஜோதியுடனான நேர்காணல்



மதுவிலக்கு விழிப்புணர்வு பரிசுப்போட்டி - 2020
- பரிசு பெற்ற கவிதைகள்



புதுக்கவிதையிலும் புதுவிதக் கவிதைகள்
- தோழன்பிரபா



சற்றே பெரிய நிலக்கரித் துண்டு - ஒரு பார்வை
- ஸ்ரீகா

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி :10 | பிப்ரவரி 2020

**நிர்வாக ஆசிரியர்:**
**ஜின்னா அஸ்மி**

**ஆசிரியர்:**
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தமிழ் தாசன் இரவிக்குமார்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக், திண்டுக்கல்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு – 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** – பக். 04
- **“எனக்குள் எப்போதும் ஒரு காடு இருக்கிறதாக உணர்கிறவள் நான்”**
  – கவிஞர் சக்தி ஜோதியுடனான நேர்காணல் – பக். 05
- **உலக சினிமா ஒரு பார்வை**
  – கவிஜி – பக். 25
- **நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு..**
  – கடிதங்கள் – பக். 31
- **புதுக்கவிதையிலும் புதுவிதக் கவிதைகள்**
  – தோழன்பிரபா – பக். 35
- **ஹெரால்ட்டு பிண்ட்டர்**
  – தா. ஜோ. ஜூலியஸ் – பக். 39
- **மார்க்ஸ் பிறந்தார்**
  – த.திருப்பதி – பக். 42
- **கீழடி - தமிழின் தாய்மடி**
  – கடையநல்லூர் பென்ஸி – பக். 55
- **சற்றே பெரிய நிலக்கரித் துண்டு - ஒரு பார்வை**
  – ஶ்ரீகா – பக். 57
- **தேநீர் சாலை**
  – கரிகாலன் – பக். 59
- **கலைகளின் மகள்**
  – செ.வினோதினி – பக். 63

## சிறுகதைகள்


- **மூன்று வன்முறைகள்**
  – ஆரூர் த இலக்கியன் – பக். 10
- **ரணகீர்த்தி-அமர்கழி**
  – பிரேமபிரபா – பக். 28
- **நடுத்தெரு**
  – முனைவர் பு.இந்திராகாந்தி (நுண்மதி அரசு) – பக். 44


## கவிதைகள்


- **தமிழகக் காவல்துறை & படைப்பு குழுமம் இணைந்து நடத்திய மதுவிலக்கு விழிப்புணர்வு பரிசுப்போட்டி - 2020 - பரிசு பெற்ற கவிதைகள்** – பக். 13
- **ஊர்மிளை**
  – அழ.ரஜினிகாந்தன் – பக். 51
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 17**
  – ஜின்னா அஸ்மி – பக். 62






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' இருபத்திரண்டாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

உலகத்தின் எங்கெங்கோ உள்ளவர்களையெல்லாம் தகவு தமிழின் பெயரால் ஒன்றிணைக்கிறது என்றால் அதற்கான அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு நன்றி கூறியே ஆகவேண்டும். இந்த மாத இருபத்தெட்டாம் நாள் தேசிய அறிவியல் தினம்.

ஓலைச்சுவடிகளில் எழுதி குருகுல முறையில் மனப்பாடம் செய்துதான் மொழியை வளர்க்க முடியும் என்றால் இந்தப் பாய்ச்சலான வளர்ச்சியை எந்த மொழியும் அடைந்திருக்க முடியாது. அச்சு இயந்திரங்களின் அறிமுகத்தால் அழியாத உருவெடுத்த தமிழ் இன்று அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என ஆட்சித் தமிழாய் வலம் வருகிறது.

'தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்' என்றார் பாரதியார். தமிழ் மிகவும் தொன்மையான மொழி. ஆனால் ஆதாரம் இன்றி எதையும் இச்சமூகம் ஏற்காது என்பதால் நமது தமிழின் பழமையை அகழ்வாராய்ச்சிகளின் மூலம் நிரூபிக்கத் தொடங்கியிருக்கிறோம். எத்தனையோ தடங்கல்களுக்குப் பிறகும் கீழடி அகழ்வாராய்ச்சி நம் தொன்மைக்கான சான்றாய் உலகறிய உதவுகிறது. இந்நிரூபணம் 'கரிமத் தேதியிடல்' ஆராய்ச்சி முறைப்படி கீழடி அகழ்வில் கிடைத்த பொருள்களை ஆய்ந்ததின்வழி கிடைத்தது. இதனால் கிமு ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னதாக என் தமிழ் நாகரிகத்தை எந்தத் தடையுமின்றிக் கொண்டு செல்ல முடிகிறது. என் பழமையை நிறுவ உதவிய புத்தம்புது அறிவியல் முறைகளுக்கு எம் நன்றிகள்.

அறிவியலின் அதீத வளர்ச்சி சென்ற நூற்றாண்டிலிருந்துதான் என்றாலும்கூட.. அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகளைச் சரிசெய்யக்கூடிய அறிவியல் கருவிகளைக் கண்டுபிடிக்கத் தொடங்கியிருக்கிறோம். ஒன்றின் விளைவை ஈடுகட்ட மற்றொன்று என்று அறிவியல் கருவிகளின் உலகத்தில் வாழப் பழகிவிட்டோம்.

நம் வாழ்வை எளிதாக்குவதுதான் அக்கண்டுபிடிப்புகளின் தலையாய நோக்கம். ஆனால் அத்தனை எளிதாக இல்லை.. அவற்றை உருவாக்கியோரின் வாழ்க்கை. கதிரியக்க ஆய்வில் ஈடுபட்டவர் மேரி கியூரி. இயற்பியல் மற்றும் வேதியியலுக்கான நோபல் பரிசைப் பெற்றவர். அவர் ஆய்வுக்குட்படுத்திய கதிரியக்கத்தின் தாக்கத்தாலேயே புற்றுநோய்க்கு உள்ளாகி இறந்தார். இப்படிப்பட்ட கடுமையான ஆய்வுகளின் தளத்தில்தான் நமது எளிமையான வாழ்வு எழும்பியிருக்கிறது.

எக்கலையின் வளர்ச்சியிலும் அறிவியலின் பங்கிருக்கிறது.. அறிவியலின் பரவலும் பயனும் கலையைச் சார்ந்துதானிருக்கிறது. அறிவியலின் வீச்சு மேன்மேலும் உயரட்டும்.. அதனால் கலைகள் மேன்மேலும் மிளிரட்டும்.

மதுவால் மதி மயங்கி வாழ்வினைத் தொலைத்து உறவுகளுக்குப் பெருஞ்சுமையாய் வெறுப்பிலும் விரக்தியிலும் அல்லலுறுவோர் பலர். மதுவின் கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தமிழகக் காவல் துறையுடன் இணைந்து படைப்பு குழுமம் நடத்திய கவிதைப் போட்டியின் முடிவுகள் இவ்விதழில் சான்றிதழ்களுடன் வெளியாகியுள்ளன. வெற்றி பெற்றோருக்கு வாழ்த்துக்கள்.

இந்த இதழில் கவிஞர் சக்தி ஜோதியுடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது. மேலும் நூல் விமர்சனங்கள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்**

• அம்பிகாவர்ஷினி



# "எனக்குள் எப்போதும் ஒரு காடு இருக்கிறதாக உணர்கிறவள் நான்"

## - கவிஞர் சக்தி ஜோதியுடனான நேர்காணல்

இயற்கையையும் பெண்களையும் தனது கவிதைகளுக்குள் பொதித்து வைப்பவர் கவிஞர் சக்தி ஜோதி. சிறந்த கவிஞராக, தமிழ் கற்றவராக, ஆய்வாளராக, கட்டுரையாளராகத் தன்னைத் தமிழ்ப் பரப்பில் நிலைநிறுத்திக்கொண்டவர். "சக்தி ஜோதியின் கவிதைகள் திறந்தே இருப்பவை. எந்தப் பிரத்தியேகச் சாவிகள், கடவுச் சொற்கள், மூன்றிலக்க எண் திருக்கல்கள் தேவைப்படாதவை அவை. காதல் எனினும், காமம் எனினும் ஒரு மொட்டு எவ்வளவு மூடியிருந்ததோ அவ்வளவு மூடுதல். ஒரு கனி தன்னை எவ்வளவு போர்த்தியிருந்ததோ அவ்வளவு போர்த்துதல் மட்டுமே. பூப்புக்கும் கனிவுக்கும் அளிக்கப்படும் இயற்கையின் எளிய பாதுகாப்பை மட்டுமே தன் கவிதைகளுக்கும் சொற்களுக்கும் அளிக்கிறார்.." என்ற வண்ணதாசனின் வார்த்தைகள் போதும் சக்தி ஜோதியின் படைப்புகள் குறித்த தெளிவிற்கு. மனந்திறந்து உரையாடியிருக்கும் அவரது கருத்துத் தெளிப்புகள்..

**உங்களின் பால்ய மனதைத் திரும்பிப் பார்க்க வைக்கும் காடம்பாறை தினங்கள் பற்றி?**

எனக்குள் எப்போதும் ஒரு காடு இருக்கிறதாக உணர்கிறவள் நான். இப்போது அந்த நினைவறையின் திரை விலக்கிப் பார்க்கிறேன். என்னுடைய பால்யம் தொடங்கிப் பதின்பருவ நினைவு வரை எனக்குள் பொதிந்து கிடப்பது ஒளியறியாத அடர் கானகம் எனில், அது என்னுடைய காடம்பாறை தினங்கள்தான்.

இத்தனை காலமாக அந்தக் காடு, மழையில் நனைந்த ஈரத்துடன் இருள் அடர்ந்து எனக்குள் புதைந்து கிடக்கிறது. நனைந்த ஒளி, நீர்ப்பூச்சு மினுங்கும் கரும்பாறை, வான்முட்டும் தேன்பாறை, மந்திகள் தாவிக் குதிக்கும் பள்ளத்தாக்குகள் என, மான், மிளா, கரடி, முள்ளம்பன்றி, கருங்குரங்கு, காட்டு அணில், காட்டுக்கோழி, காட்டு மாடு, சாரைப் பாம்பு, நல்ல பாம்பு, பச்சைப் பாம்பு, கீரி, அட்டைப்பூச்சி, யானைகளின் கூட்டம், பெயர் தெரியாத எண்ணற்ற பூச்சிகள், கேளையாடு, வரையாடு என வனமிருகங்கள் நடமாடித் திரிந்த அந்தக் காட்டினுள் நான் வாழ்ந்திருக்கிறேன். வண்டுகளின் ஓயாத பேரிரைச்சலில், மின்னலில், பெரும் இடியோசையில், வெடித்துப் பூத்திருந்த காளான்களின் வெள்ளை நிறத்தைக் கண்டிருக்கிறேன். சிறு தொடுதலில் சாய்கிற காளான்களின் மென்மையில் நெகிழ்ந்திருக்கிறேன். வேங்கை மரத்தின் உடலைக் கீறி அதன் சிவந்த வடியும் பால் எடுத்து என் நெற்றியில் திலகமிட்டு வளர்க்கப்பட்ட பெண் நான்.

வேங்கை மரத்தின் பால் எடுக்க நானும் காட்டிற்குள் அலைந்திருக்கிறேன். அப்போது அங்கே நான் பார்த்த வெக்காளி, கல்வரசு, செங்கோரை, தோதகத்தி, தடுசு, தேக்கு, கடுக்காய், வேங்கையெனப் பின்னாளில் நான் பெயர் அறிந்த என் பால்ய காலங்களின் மரங்களின் வாசனை என்மீது எப்பொழுதும் கமழ்ந்திருப்பதாகவே நான் நினைப்பதுண்டு. அங்கு நான் பார்த்த உயர்ந்த பெருநெல்லி மரங்களையும், சோப்புக்காய் மரங்களையும் இன்று நான் காணவே இல்லை. நின்று நிதானித்து ஒலிக்கின்ற செம்போத்துப் பறவையின் குரல், எதிர்பாராத சமயத்தில் ஓசை எழுப்பும் வௌவால்களின் இறக்கைச் சத்தம், என் மீது வண்ணங்களை அப்பிச் செல்லும் வண்ணத்துப்பூச்சிகள் இப்படி எதுவுமே இன்று நான் காணவே இல்லை. எனினும் எனக்குள் ஒரு காடு இருக்கிறது. அந்தக் காடு என்னுடைய கவிதைகளில் இருக்கிறது. அதுவே என்னை என் பணி சார்ந்து இயங்க வைக்கிறது.

**சங்ககாலக் கவிதை வகைமைகளில் ஒன்றான சித்திரக் கவிதைகள் போல நிலம் சார்ந்த சித்திரங்களுக்குள்ளிருந்து உங்கள் படைப்புகளில் தொடர்ந்து முன்வைக்கப்படும் கவிதைகள் பற்றி....**

நிலம்தான் சமூகத்தின் அத்தனை இயக்கத்திற்கும் ஆதாரமானது. சங்க இலக்கியப் பாடல்கள் முதல் நவீன அறிவியலின் இயக்கத்தில் இயங்கியல் அடிப்படை ஆன்மீகம் என அனைத்திலும் அடிப்படையாகப் பேசப்படுவதும் முன்வைக்கப்படுவதும் நிலம்தான். நிலம் என்றால் நிலம் மட்டுமல்ல, நிலத்தோடு இணைந்த பொழுதும்தான். தொல்காப்பிய நூற்பாவில் குறிப்பிடுவது போல முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் என்பதை, இன்றைய நவீன அறிவியல் SPACE TIME என்கிறது. இதன் அடிப்படையில் நிலத்தின் தன்மையும் பொழுதும் ஒன்றையொன்று தழுவி ஒன்றிலிருந்து ஒன்றைப் பறித்துவிட இயலாது. இணைந்தே இருக்கிற நிலமும் பொழுதும்தான் ஏனைய கருப்பொருள்களான தாவரம், நீர்நிலை, உயிர்களின் உற்பத்தி எனவும் அவை சார்ந்த இயங்குநிலைகளுமாக விரிவடைகிறது. இயற்கை என்பது தனித்திருக்கும் போது எந்த அர்த்தமும் பெறுவதில்லை. அது மனித உணர்வுகளுக்கு உட்படும்போது அதனுடைய அர்த்தப்பாடு மாற்றம் அடைகிறது. அதாவது ஒரு மலைத் தொடர் அல்லது நதி தன் போக்கில் இருக்கும்போது அது அதுவாகவே மட்டுமே இருக்கிறது. அசையாதிருக்கும் மலை போன்றும் சலசலத்துச் செல்கிற நதி போன்றும் என யாரேனும் ஒருவரைக் குறித்து அல்லது தன்னைக் குறித்தோ இயற்கையோடு ஒப்பிட்டு மனிதன் உணரும்போதுதான் இயற்கையான



ஒன்று உயிர் பெறுகிறது என்று கருதுகிறேன். எந்த மன உணர்வுமே நாம் வாழ்கிற சூழலில் இருந்து உருவாவதுதான். அவ்வகையில் மலையும் மலை சார்ந்த பிரதேசத்தில் என் பால்யமும் வளரிளம் பருவமும் அமைந்திருக்கிறது. அதன் பிறகு முல்லையும் மருதமும் சார்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். காட்சிகள் சித்திரமாகவே மனதில் பதிந்துகொண்டிருக்கக் கூடிய சூழலில் நான் எழுதுகிற கவிதைகளுக்குள் அவை தன்னியல்பாகவே வந்துவிடுகின்றன.

**கவிதை மனநிலையல்லாது ஒரு பெண்ணாக உறவுகள்/சுற்றம் சார்ந்த அக உலகின் தேடலில் எழுதப்படாத பக்கங்கள் உண்டா?!**

மிக நிச்சயமாக இருக்கிறது. எந்த ஒரு படைப்பாளரும் தான் சிறந்த படைப்பாகக் கருதுவதில் கூட முழுமை பெறுவதில்லை. நிறைவுறாத மனதுடன் இருப்பவர்களே தொடர்ந்து கலை சார்ந்த செயல்பாடுகளில் இருக்கிறார்கள். புற வாழ்வில் கூட நாம் எழுத நினைப்பது முற்றிலும் சொல்லி முடித்துவிட இயலாதபோது அக உலகின் தேடல் என்று சொல்லும்போது மிக நிச்சயமாக அனைத்தையும் சொல்லிவிட இயலாத நிலையில்தான் எந்தப் படைப்பாளரும் இயங்க முடியும். ஒரு தாவரம் நம் கண்களுக்கும், பறவைகளின் கண்களுக்கும் மட்டும் தெரியும்படியாகப் பூப்பதும் காய்ப்பதும் இல்லை. யார் கண்ணிலும் படாமல் மறைவாகப் பூத்து, காய்த்து, பழுத்து, காம்பில் இருந்து தானே விடுபட்டு மண்ணில் விழுந்து மக்கிவிடுவதைக் காண முடிகிறது. தாவரங்களுக்கே அவ்வாறு எனில் மனிதர்களுக்கு, படைப்பாளர்களுக்குச் சொல்லவே வேண்டியதில்லை.

**ஆயிரம் ஆயிரம் கண்கள் பின்தொடர்வதாகப் புதிர்களோடு கடந்து செல்லும் பெண்ணின் மனநிலையிலிருந்து பொதுச் சமூகத்தை ஒரு பெண் கவிஞராக வேடிக்கை பார்ப்பதென்பது...**

மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. ஒரு பெண் தன் பதின்பருவத்தில் தன்னை முழுமையாக உணரத் தொடங்குகிறாள். அப்போதுதான் தன்னுடல் மீது இச்சமூகம் முன் வைக்கும் பார்வையை அவள் உணரவும் தொடங்குகிறாள். குழந்தைப் பருவத்தில் ஒரு பெண்ணின் உடல் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்களால் பாதுகாக்கப்படுகிறது. மெல்ல மெல்ல அவள் உடலை அவளே பாதுகாக்க வேண்டிய பருவமாகவும் அவளின் பதின்மம் மாறியிருக்கும். அப்போது அறிந்தும் அறியாமலும் தன் உடல் குறித்தும், தன்னையொத்த வயதுடைய மற்ற பெண்கள் குறித்தும் அவதானிக்கத் தொடங்குகிறாள். புதிர்கள் நிறைந்ததாகப் பெண்ணுடல் இருப்பதை ரசிக்கவும், கேள்விகள் எழுப்பவும் தொடங்குகிற பருவம் எல்லாப்

பெண்களுக்கும் அமைந்திருக்கும். அந்தப் பருவத்திலிருந்து ஆண் பெண் உறவுகள் பற்றியும் இச்சமூகம் குறித்தும், இச்சமூகத்தில் பெண்ணின் இருப்பு குறித்தும் பல்வேறு கேள்விகளும் அதற்கான தேடலுமாக எழுதத் தொடங்கிய ஒரு பெண்ணுக்கு இந்தப் பொது சமூகத்தின் செயல்பாடு புதிர்களாக இருக்கிறது. அதனாலேயே படைப்புத்தளத்தில் இயங்கத் தொடங்கிய பிறகு இச்சமூகம் குறித்தான என்னுடைய பார்வை மாற்றங்களுக்கு உட்பட்டபடியே இருக்கிறது. ஏனெனில் இச்சமூகத்திற்கு ஒற்றை முகம் இல்லை.

**பெண் மனம் ஆழமென்று கடலோடு ஒப்பிடுதலைப் போல "கடலோடு இசைத்தல்" தொகுப்பிலும் இன்னும் சில தொகுப்புகளிலும் பெண் மனதை கடலின் ஆழப் புதைந்தவைகளோடு இயைத்திருக்கிறீர்கள்.. கடலோடு இசைத்தலென்பது?**

என் வயதொத்த பலருடைய பால்யம் ஏழு கடல், ஏழு மலைகளைத் தாண்டிய அற்புதங்களைக் கொண்ட கதைகளால் ஆனது. எனக்கும் அவ்வாறே நிகழ்ந்தது. மேலும் உயர்ந்த மலைகளையும், நீரூற்றுக்களையும், காட்டாறு களையும் பார்த்து வளர்ந்த எனக்குக் கடல் பார்க்கக் கிடைத்ததே என்னுடைய பதின்ம வயதின் தொடக்கத்தில்தான். கண்ணுக்கு எட்டியவரை படர்ந்திருந்த கடலுக்கும் வானத்துக்கும் வேறுபாடு அற்ற நீலவெளிதான் இன்றைக்கும் என் மனதில் அழியாதது. கடல் காற்று, எல்லையற்ற அந்த நீலம், ஒரு சமயம் அமுதமாகவும் இன்னொரு சமயம் விஷமாகவும் தோன்றிய புராதனக் கதைகளின் தாக்கத்திற்கு உட்பட்டது. பெண் உடலை நீலமாகவும் உற்பத்திப் பெருக்கமாகவும் அறிந்த நிலையி லிருந்து பெண்ணுடலின் ரகசியம் இன்று வரையிலும்கூட முற்றிலும் புரிந்துகொள்ள வியலாத உளவியல் கூறுகளுக்கு உட்பட்டது என்று அறிகையில் அறிந்துகொள்ளவியலாத கடல் எனக்குப் பெண் உடலாக உருவகமாகிறது. கடற்பாடல் என்பது அலையின் ஓசை மட்டுமல்ல பெண் மனதின் இசையும் கூட என்று உணர்ந்திருக்கிறேன். ஒரு அலைக்கும் இன்னொரு அலைக்குமான காலத்தினையும் அளவினையும் ஓசையையும் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது என்றே தோன்றுகிறது. பெண் மனதுள் இயங்குவதும் கூட இன்னொருவரால் முற்றிலும் அவதானிக்க இயலாது என்றே கருதுகிறேன்.

**காதல், காமம், தனிமையோடு அதிகப்படியாக மௌனம் என்கிற சொல் கவிதைகளோடு நீண்ட தவமாகக் கிடக்கிறதே.. ஆதி மௌனத்தின் விரல் பிடிக்க நகரும் தருணங்கள் பற்றி?**

ஒரு பெண்ணின் மீது வைக்கப்படுகிற குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் பிறரின் புரிந்துணர்வின்மையால் உருவாவது. எதிரே இருக்கும் அத்தனை பேருக்கும் ஒரு பெண் தன்னிலை விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கவும் இயலாது. இச்சூழலை அவள் தன்னுடைய புன்னகையால் பிறரிடமிருந்து மறைத்தும் துளி கண்ணீரால் மட்டுமின்றி மௌனத்தாலும்தான் கடந்து செல்கிறாள். பெண்ணின் காதல், காமம், கோபம், இயலாமை போன்ற எல்லாவிதமான உணர்வுகளுக்கும் அவளுடைய மௌனமே அவளுக்கு உறுதுணையாக இருக்கக்கூடியது. எனவேதான் மௌனத்தின் வழியே கடந்து செல்கிற பல்வேறு உணர்வுகளை என் கவிதைகள் கொண்டிருக்கக்கூடும்.

**பணி நிமித்தமாகப் பல்வேறு நாடுகளுக்குப் பயணித்திருக்கும் நீங்கள் பெருவின் மச்சுபிச்சு, ஜெருசலேம், சீனப்பெருஞ்சுவர் வரை சென்றாலும் தமிழ்க்கவிதைகளின் மனம் அப்படியேதான் இருக்கிறதா?**

நிச்சயமாக எந்தவிதமான மாற்றமும் பெறாமல் அப்படியேதான் இருக்கிறது. இயற்கையின் எந்த ஒன்றையும் தன் வாழ்வின் இருப்புக்கும் இல்லாமைக்கும் இடையே பொருத்திப் பார்த்ததில்தான் பல கவிதைகள் நிகழ்கின்றன. மேலும் இந்தப் பரந்த பூமியில் எந்த நிலப்பரப்பில் கால் வைக்கும்போதும்



பள்ளிக்கூடப் படிப்பில் உலக வரைபடத்தில் படித்தறிந்து கொண்ட கோடுகள் மனதிலிருந்து மறைந்துவிடும். பூகோளத்தின் வரைப்படத்தில் சிக்காத ஒன்றுதான் ஒரு படைப்பு மனதின் இயக்கம். அதுதான் அறிந்த நிலத்தின் வாழ்வை அறியாத எந்த நிலத்திலும் பொருத்திப் பார்த்துவிடக் கூடியது. எனவேதான் உலகின் எந்த இடமும் அதனுடைய அரசியல், சமூகப் பண்பாடு அடையாளங்களைக் கொண்டு அடையாளம் காட்டினாலும் இறுதியாய் அதனுள் இயங்குகிற மனித மனத்தின் வாழ்வியல் கூறுகளை கொண்டு உணர்த்திவிடுகிறது. நான் பார்த்த மலை, நான் அறிந்த மிகப்பெரிய காடு, எனக்குப் பரிச்சயமான காட்டிற்குள் அது சார்ந்த வாழ்வியல் முறையோடு புதிய நிலத்தில் வாழ்கிற மனதை, வாழ்கிறவர்களின் அடையாளத்தை உணர்கிறவளாக இருக்கிறேன்.

### இளமைக்கால அனுபவங்கள்..

என்னுடைய பால்யம் சுருளியாறு நீர்மின் திட்டப் பணிகள் நடைபெற்ற மலைப் பிரதேசக் காட்டில் மணலாறு நதி ஓடும் பகுதியில் தொடங்கியது. அப்பாவுக்கு, நீர்மின் திட்டப்பணியில் கட்டிடப் பொறியாளர் வேலை. எனவே மின்சார வாரியம் அமைத்திருந்த தற்காலிகக் குடியிருப்புகளில் வசித்தோம். நான் தவழ்ந்து நடை பயின்ற அந்த நிலம் இப்போது நீரால் நிரம்பி நதி ஓடிக்கொண்டிருக்கிறது. அடர்ந்த காடும், மலைகளுமான காடம்பாறை பகுதியில் என்னுடைய வளரிளம் பருவமும் நிகழ்ந்தது. அதுவும் தற்காலிகக் குடியிருப்புத்தான். இன்று அந்த நிலம் அடர்ந்த கானகமாக மனிதர்களின் புழக்கமற்று சிறுத்தைகள் வாழுமிடமாக மாறியுள்ளது. இந்த இரண்டு வகையான நிலத்தில் வாழக் கிடைத்த என்னுடைய பருவங்களில் அப்பாவாலும், அண்ணனாலும் வாசிப்பிற்குள் நுழைந்திருந்தேன். இயற்கையோடும் புத்தகங்களோடும் இணைந்திருந்த தனித்த அனுபவம் அது. இப்போதும் எனக்குள் அந்தக் காடு இருக்கிறது, அந்த நதி இருக்கிறது, அந்த மலைகள் இருக்கின்றன, அதனதன் இயல்பு கெடாமல்.

நான் அறிந்த வாழ்வை என் மகளுக்கும் அவளின் வயதொத்தவர்களுக்கும் சொல்வதன் வழியாக என் குழந்தமையை மட்டுமன்றி இளமைக்காலத்தையும் எனக்குள் பத்திரப்படுத்திக்கொள்கிறேன். ■

சிறுகதை

• ஆரூர் த இலக்கியன்

# மூன்று வன்முறைகள்

“ஐயோ புள்ள எப்படி வளர்ந்துட்டான் பாரு” இரண்டு வயதே ஆன திராவிட ஒளியைப் பார்த்து அந்தக் குழந்தையை விடவும் குதித்துக் கொண்டிருந்தாள் வெண்ணிலா அத்தை. இந்த அத்தைகளுக்கு மட்டும் பிள்ளைகள் மீது எப்படி இவ்வளவு பிரியம்.. அத்தைகள் இருக்கும் தைரியத்தில்தான் அப்பாக்களும் அம்மாக்களும் பிள்ளைகளைப் பெற்றுப் போடுகிறார்கள் போல. அத்தைகள் இருக்கும் தைரியத்தில்தான் சில பிள்ளைகளும் தைரியமாய் இந்தப் பூமிக்கு வருகிறார்கள்.

அத்தைகள் ரத்தபந்தமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவள் பக்கத்து வீட்டிற்குத் திடீரெனக் குடி வருவாள், கூட்டமான பேருந்தில் அச்சத்துடன் நீந்திக்கொண்டிருக்கும் தாயிடம் இருந்து குழந்தையை வாங்கித் தன் மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டிருப்பாள், ஏதோ ஒரு வீட்டின் வாசலில் ஏதோ ஒரு காரணத்திற்காக அடி வாங்கிக்கொண்டிருக்கும் பிள்ளையை எங்கிருந்தோ மீட்க வரும் தேவதைபோல் ஓடிவந்து முகம் தெரியாத அந்த அம்மாவை, “ஏம்மா பிள்ளையைப் போட்டு இப்படி பேய் மாதிரி அடிக்கிற'' என்று கடிந்துகொள்வாள். இப்படி எல்லோரின் பால்யத்திலும் அத்தையின் வாசனை படர்ந்திருக்கிறது.

திராவிட ஒளியைக் கன்னத்தில் கிள்ளி அழவைத்து அழகு பார்த்துக்கொண்டிருந்தாள் நிலா அத்தை. குழந்தையின் அழகு எங்கெல்லாம் ஒளிந்திருக்கும் என்று அத்தைகளுக்குத்தான் தெரியும். “டேய் நான் ஒரு பொண்ணப் பெத்துப் போட்டிருக்கலாம் டா. உனக்குக் கட்டிக் குடுத்து வீட்டோட மாப்பிளையா வச்சிருப்பேன்” குட்டி திராவிட ஒளிக்குப் புரிந்திருக்க வாய்ப்பில்லை. இருந்தாலும் வெட்கப்பட்டு எல்லோருடனும் சேர்ந்து சிரித்தான்.

“ஊர்ல தம்பி எப்படி கா இருக்கு?”

“அவனுக்கு என்ன வேணி, எங்க குலசாமி மாதிரி உட்கார்ந்த இடத்திலேயே சம்பாதிக்கலாம். வீட்டிலிருந்தே வேலை பாக்கலாம்னு சொல்றான். ஆனா அந்தச் சோத்ததான் எப்படித் திங்கிறான்னு தெரியல. அந்த ஊரு சாமான்ல நாம சமச்சாலும் நாக்கு செத்ரும் வேணி” என்று ஆறு மாதம் தன் மகனுடன் ஆஸ்திரேலியாவில் இருந்த புராணத்தை நிலா புலம்பத் தொடங்கினாள்.

எல்லா அத்தைகளும் அம்மாவாக இருப்பதன் புலம்பல்.

“சரி நான் அப்புறம் வரேன் வேணி, அவரை எழுப்பணும்” என்று நிலா அத்தை நகர்ந்தாள்.

அய்யாக்கண்ணுவுக்கும் நிலாவிற்கும் சொந்தமான இந்த “மணியம்மை'' குடியிருப்பில்தான் வேணி அத்தை வசிக்கிறார். அவர்களுடன் சேர்ந்து ஏழு குடும்பங்கள் அங்கு வசிக்கிறார்கள். அந்தக் குடியிருப்பில் வசிக்கும் அனைவருக்கும் அய்யாக்கண்ணுவும் வெண்ணிலாவும்தான் மாமாவும் அத்தையும். இவர்கள் மீது உள்ள மரியாதையில்தான் கிருஷ்ணவேணியும் செல்லையாவும் தங்களுக்குப் பிறந்த மகனுக்கு அவர்களையே பெயர் சூட்டச் சொன்னார்கள். அய்யாக்கண்ணு கருப்புச் சட்டைக்காரர். பெரியார் நேசன். திராவிட இயக்கத்தின் மீது உள்ள ஈர்ப்பாலும் நம்பிக்கையாலும் செல்லையாவின் மகனுக்குத் “திராவிட ஒளி'' என்றே பெயரிட்டார். செல்லையாவும் திராவிட வளர்ப்பு என்பதால் அதைப் பற்றோடு ஏற்றுக்கொண்டார். அனைவரும் திராவிட ஒளியைத் “திராவிடம்” எனப் பாசத்தோடு அழைத்தார்கள்.

இந்தத் திராவிட ஒளி எப்படியேனும் மிகச் சிறந்த அரசியல்வாதியாக வேண்டும், திராவிடப் போராளியாக மாறிவிட வேண்டும் என்று அவன் பிறந்தபோதே அய்யாக்கண்ணு சொன்னார். இதுதான் நாம் மனிதர்களுக்குச் செய்யும் முதல் வன்முறை.

*

விரைப்பான அகலமான உடல்வாகு, எப்போதும் எதற்கும் அளவோடு சிந்தும் சிரிப்பு. கண்ணீரை இந்தப் பூமி சந்திக்க விடாத கண்கள் கொண்ட அய்யாக்கண்ணு மாமாக்களைக் கூட நீங்கள் சந்தித்திருப்பீர்களா என்று தெரியாது. ஆனால் நிலா அத்தையை நாம் தினந்தோறும் கடந்தே வருகிறோம். அவள் உங்கள் எதிர் வீட்டில் இருக்கலாம், உங்கள் அருகில் அமர்ந்துகொண்டு எதுவும் தெரியாதது போலத் தொலைக்காட்சியில் தனக்குப் பிடித்த சேனலை சில வசவுக்குப் பிறகு பார்த்துக்கொண்டிருக்கலாம், உங்கள் சமையலறையில் உலையுடன் சேர்ந்து அவளும் கொதித்துக்கொண்டிருப்பாள். ஆனால் நீங்கள் ஒருபோதும் அவளைக் கவனித்திருக்க மாட்டீர்கள், நீங்கள் உத்தமர்கள். உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் தனது ஆசைகளை மறந்து அல்லது மறக்கடிக்கப்பட்டு, தேவையற்றவை களுக்கு அய்யாக்கண்ணு மாமாக்களிடம் வசவு வாங்கும் அனைத்துப் பெண்களும் வெண்ணிலா அத்தைதான். இப்போது சொல்லுங்கள் நீங்கள் நிச்சயம் நிலா அத்தையைப் பார்த்திருப்பீர்கள் தானே. இதைத் தியாகம் என்றெல்லாம் சொல்லிவிடாதீர்கள். இதுதான் மனித இனத்திற்கு நாம் செய்யும் இரண்டாவது வன்முறை.

ஆறுமாதம் கழித்து ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த நிலாவை, தனது குடியிருப்பில் இருக்கும் கிஷோர் என்ற இளைஞனை விட்டுக் கூட்டிவர அனுப்பியிருந்தார். காலை 5 மணிக்கே நிலா வந்துவிட்டாள்.

“ம்ம்ம்... வந்தாச்சா?”

அய்யாக்கண்ணுவின் அடர்த்தியான குரல் வரவேற்றது.

“எப்படி இருக்கான் உன் மவன்?”

மூச்சு அடைத்து விடும்படி மகனதிகாரத்தை ஒப்பித்தாள். நிலாவின் முகத்தில் சூரியனை விடவும் அவ்வளவு பிரகாசம்.

“பரவால்ல.. மவன் பிழைச்சிக்கிட்டான். இப்பவாச்சும் நேரத்துக்கு எழுந்திருக்கிறானா? இல்ல இன்னும் பொழுது விடிஞ்சும் இழுத்துப் போத்திக்கிட்டுத் தூங்குறானா?”

“அட ஏங்க இன்னுமா அதெல்லாம்? அவனுக்குத் தெரியும் எப்போ தூங்கணும் எப்ப எழுந்திருக்கணும்னு” என்று முனகியபடியே, கிருஷ்ணவேணி வீட்டிற்காக வந்திருந்த பால் பாக்கெட்டில் ஒன்றை மட்டும் எடுத்துத் தனக்கும் அய்யாகண்ணுவுக்கும் டீ போட்டு வந்தாள்.

“என்ன ஒரு பத்து மணிக்கு எழுப்பி விடு. இன்னைக்கு மதியம் 12 மணிக்கு ஒரு முக்கியமான கூட்டத்துக்குப் போகணும்” என்று மீண்டும் உறங்கச் சென்றார் அய்யாக்கண்ணு.

இது நிலாவிற்குக் கிடைத்த விடுதலை. அவள் களைப்பாக இல்லை, தூங்கவும் போவதில்லை. பத்து மணிக்குள்ளாகத் தன் சக்திக்கு மீறி அத்தனை பேரிடமும் இந்த ஆறு மாத காலத்தை அவள் ஒப்பித்துவிடுவாள். எந்த மாற்றமும் இல்லாமல், உணர்ச்சிகள் குறையாமல், ஒரே பிரகாசத்துடன். நிலா தன் பயணத்தை அக்கம் பக்கக் குடியிருப்புப் பகுதியில் பிரச்சாரம் செய்தாள். இவளுக்குச் சொல்வதற்கு ஏக விஷயங்கள் இருந்தன. அவர்களில் சிலருக்கு முழுமையாகக் கேட்க அபாரமான பொறுமை இருந்தது. இன்று அக்கம்பக்கத்தில் உள்ள எல்லா அத்தைகளிடமும், அவர்களும் ஒரு புள்ளைய பெத்து ஆஸ்திரேலியா அனுப்பும் வரை நிலா ஓயமாட்டாள் போல.

மற்றவர்களைக் காது கொடுத்துக் கேட்பதுதான் மனிதன் செய்யும் மகத்தான செயல். அதில்தான் அன்பும் காதலும் இன்னும் இறைந்து கிடக்கிறது.

வழக்கம்போலக் காபி போட்டு எடுத்துக் கொண்டு கணவரை எழுப்பினாள்.

இனி எல்லாமே வழக்கம் போலத்தான். வழக்கம்போல் அதே சமையலறையில் இவள் வேக வேண்டும், வழக்கம்போல் ஆசைகளைத் துறக்கும் அதே மறதியை இவள் ஞாபகம் வைத்திருக்க வேண்டும், வழக்கம்போல் உறுதுணையாக இருக்கும் அதே தொலைக்காட்சி, வழக்கம்போல் காதலை முற்றிலுமாக மறந்து இருக்கும் அதே படுக்கையறை, வழக்கம்போல நிலாவைச் சூழப்போகும் அதே இருள். ஆனால் இந்த ஆஸ்திரேலியா புராணம் மட்டும் கொஞ்சமும் குறையாமல் பிரகாசிக்கும்.

“இன்னைக்கு மதியம் சமைக்காத. ரெஸ்ட் எடு. கிஷோர்ட்ட சொல்லிக் கடையில் வாங்கிச் சாப்பிடு. சாயங்காலம் வீட்டை மட்டும் சுத்தம் பண்ணி ரெடியாயிரு. நாலு தோழர்கள் வருவாங்க” என்று மகளிர் தினச் சிறப்புக் கூட்டத்திற்கு அய்யாக்கண்ணு கிளம்பினார்.

அவர் கேட்டிருக்கலாம், மாலை உனக்கு ஏதும் வேலை இருக்கிறதா? உன்னால் என் நண்பர்களை வரவேற்க இயலுமா? அவர்களுக்கு உணவு சமைக்க இயலுமா? என ஏதாவது கேட்டிருக் கலாம். இவளும் மறுத்து இருக்கலாம். பழைய சினேகிதிகளைப் பார்க்கச் செல்வதைப் பற்றியாவது அவள் சொல்லியிருக்கலாம்.

மற்றவர்களுக்கும் ஒரு உலகம் இருப்பதை நாம் எப்போது மறந்தோம்.. அவர்கள் மனதிற்கும் நிறைய ஆசைகள் இருப்பதை நாம் எப்போது மறக்கத் தொடங்கினோம்..

நிலாவின் உள்ளே இருக்கும் ஏக்கமும் ஏமாற்றமும் வெறும் முனகலாகத்தான் வெளிப்படும் “அடுத்தமுறை ஏதாவது நமக்கு வேலை இருக்குன்னு சொல்லிடணும்”.

தனது பால்ய நினைவுகளைத் தோழிகள் மூலம் சந்திக்கும் திட்டத்தை மறுநாளுக்குத் தள்ளிப் போட்டாள்.

மாலை வந்திருந்த எல்லோரிடமும் தனது ஆஸ்திரேலியா பயணத்தைப் பற்றியும் தன்குல சாமியான மகனைப் பற்றியும் சொற் பொழிவாற்றினாள்.

வழக்கம்போல், “ஏய் ஆஸ்திரேலியா போறதெல்லாம் விஷயமா? ஏதோ உன் புள்ள லக்ல போய்விட்டான்”, என்று அடிக்கடி அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டார் அய்யாக்கண்ணு.

“சார் என்ன இருந்தாலும் மகன் ஆஸ்திரேலியாவில் வேலை பார்க்கிறது அம்மாக்கு ஒரு பெருமைதானே” என்று தோழர்கள் நிலாவை ஆதரித்து, அவள் மனதிற்கு ஆறுதல் கொடுத்தார்கள். இரவு உணவை முடித்துவிட்டுத் தோழர்களை வழியனுப்பி வைத்துவிட்டு நிலா பக்கத்து வீட்டுத் திராவிட ஒளியைக் கூட்டிவந்து தங்களது அறையில் வைத்துப் பாழடைந்து போயிருக்கும் தனக்கே உரிய நேரத்தைச் செலவு செய்யத் தொடங்கியிருந்தாள். அதே சமயம் திராவிடம் சத்தம் போட்டால், ஏதோ ஒரு வேலையில் மும்முரமாக இருக்கும் அய்யாக்கண்ணை அது எரிச்சலாக்கும் என்றும் தெரிந்து வைத்திருந்தாள்.

“நிலா இங்கே வாயேன். ஒன்னு சொல்ல மறந்துட்டேன்”

அய்யாக்கண்ணு அறையில் வைத்திருந்த பெரியார் சிலையை விளையாடுவதற்குத் திராவிடத்தின் கையில் கொடுத்துவிட்டு ஹாலுக்குச் சென்றாள்.

“சொல்லுங்க.. என்னாச்சு?”

“நாளைக்கு ஒரு கூட்டம் இருக்குடி, தலைவர் வராரு. நாம சேர்ந்து போகணும். காலைல ஒரு பதினோரு மணிக்கு”

அய்யாக்கண்ணு முடிக்கும் முன்பே...

“ஏங்க நாளைக்கு என் பழைய ஃப்ரெண்ட்ஸ மீட் பண்ணலாம்னு இருக்கேன். ரொம்ப வருஷம் ஆச்சு. நான் ஆஸ்திரேலியால இருக்கும்போது பேஸ்புக்ல குரூப் கிரியேட் பண்ணி, பிளான் போட்டோம். இன்னிக்குச் சந்திக்க வேண்டியது. உங்க பிரெண்ட்ஸ் எல்லாம் வந்தாங்கன்னுதான் போகல”.

“ரொம்ப அவசியமாடி இது?. தலைவர்லாம் வராருங்கிரேன். அது தேவையா உனக்கு. வா... போயிட்டு வந்துடலாம்”.

மற்றவர்களுக்கு எது தேவை... எது தேவையில்லை என்று நாமே முடிவு செய்வதுதான் மனித சமூகத்திற்கு நாம் செய்யும் மூன்றாவது வன்முறை. சரி, தவறு, தேவை, தேவையில்லை, அவசியம், அவசியமில்லை என்ற எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு அவரவர் மனதிற்கும் சின்னச் சின்ன சந்தோஷம் இருக்கிறது. அதுதான் நாம் உயிரோடிருப்பதற்கும் வாழ்வதற்குமான வித்தியாசத்தைத் தருகிறது. வாழ்க்கை வாழ்வதற்குத்தானே.

ஒரு நொடியில் நிலா,

“சரிங்க போயிட்டு வந்துவிடலாம்”

என்றவுடன் பக்கத்து அறையில் எழுந்த சத்தத்தைக் கேட்டு இருவரும் ஓடிச்சென்று பார்த்தார்கள்.

“திராவிடம் அழுது கொண்டிருந்தது, பெரியார் உடைந்து கிடந்தார்”. ■

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020 முடிவுகள்






ஸ்

தமிழகக் காவல்துறை மற்றும் படைப்பு குழுமம் இணைந்து இணையதளத்தில் 16.01.2020 அன்று முதல் 18.01.2020 வரை மதுவிலக்கு பற்றிய விழிப்புணர்வு பரிசுப்போட்டியை 'விஷம் நுரைக்கும் கோப்பைகள்' எனும் தலைப்பில் சமூக நலன் கருதி நடத்தியது. போட்டியின் நடுவராக மூத்த கவிஞர் மு.மேத்தா அவர்கள் பொறுப்பேற்றார். உலகளாவிய அளவில் சமர்ப்பிக்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட கவிதைகளில் முதல் மூன்று பரிசுகளும் 8 சிறப்புப் பரிசுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**முதல் பரிசு – ரூ 10,000 – கவிதாயினி ம.அகதா**

**இரண்டாம் பரிசு – ரூ 5000 – கவிஞர் வீ.கதிரவன்**

**மூன்றாம் பரிசு –ரூ 2000 – கவிஞர் சோமு சக்தி**

8 பேருக்கு சிறப்புப் பரிசுகள் தலா ரூ.1000 வழங்கப்படுகிறது - கவிஞர் மு.முபாரக், கவிஞர் பி .கே சாமி, கவிதாயினி சத்யா மருதாணி, கவிஞர் பிரபு சங்கர், கவிதாயினி லட்சுமி, கவிஞர் நிலா கண்ணன், கவிஞர் சிமோனா மகாவிஷ்ணு, கவிஞர் கற்குவேல் பாலகுருசாமி.

இக்கவிதைப் போட்டிக்கு நடுவராகப் பொறுப்பேற்ற மூத்த கவிஞர் மு.மேத்தா அவர்கள் கூறியதாவது, 'கவிஞர்கள் விஷம் நுரைத்த கோப்பைகளைக் கவி அமுதம் நிறைந்த கோப்பைகளாக்கி வழங்கியிருக்கிறார்கள். மது எங்ஙனம் மனிதனை அழிக்கிறது, மது எங்ஙனம் மக்களை வாழ விட வைக்காமல் தடுக்கிறது, குடும்பங்களை எங்ஙனம் சிதைக்கிறது என்பதைக் கவிஞர்கள் அற்புதமாகத் தங்கள் கவிதைகளில் வழங்கியிருக்கிறார்கள்' என்பதைப் பெருமிதத் தோடு தெரிவித்ததோடு கவிதையின் வரிகளை எடுத்துக்காட்டிச் சிலாகித்தார். மதுவிலக்கைப் பாடுபொருளாக எடுத்துக்கொண்டு கவிதைப் போட்டியை நடத்திய தமிழகக் காவல் துறை அமலாக்கப் பிரிவுக்கும், படைப்பு குழுமத்திற்கும் மிகுந்த பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

சமூக நலன் கருதி இப்போட்டியைப் படைப்பு குழுமத்துடன் இணைந்து நடத்த முன்வந்த தமிழக காவல்துறை மற்றும் அதன் அங்கத்தினர்களான

1) திரு. **ராஜேஷ் தாஸ்,** இ.கா.ப,
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
அமலாக்கம்,
சென்னை.

2) திரு. **ச.மணி,**
காவல் கண்காணிப்பாளர்,
அமலாக்கம்,
சென்னை.

ஆகிய இரு அதிகாரிகளுக்கும் படைப்பு குழுமம் சார்பாகவும் படைப்பு தகவு இதழ் சார்பாகவும் அன்பின் நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்.

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# முதல் பரிசு பெற்ற கவிதை




விழித்த புத்தனது கண்கள் முதன்முறை கூசின
போதிமரத்தின் கீழ் காலி மதுக்கோப்பைகள்
குழம்பியபடியே சுற்றும் முற்றும் பார்க்கிறான்
ஆடிக்கொண்டிருந்த அரைபோதை மனிதர்களை
எங்கே கடுகு வாங்கச்சொல்வது?
மரணமில்லா வீட்டிலா?
இம்முறை மது இல்லா வீட்டிலா?

இரண்டாம் முறை உயிர்க்கிறான் இயேசுவும்கூட
அழுகிய நுரையீரல்கள் மதுவின் நெடியில்
மனைவிகளின் கூக்குரல்கள் எமனின் பிடியில்
கண்ணீர்த்துளிகளும் மூழ்கின போதைச்சுனாமியில்
இம்முறை சிலுவையில் ஆணிகள் நான்கும்
இதயத்திலேயே இறக்கப்பட்டுவிட்டன நேரடியாக

பீரங்கிகளுடன் போராடி வென்று
துப்பாக்கிக் குண்டிற்குப் பலியான அகிம்சைக்காரன்
மீண்டும் உயிர்க்கிறான்
அந்நியதேசம் செல்வதற்கு முன்
அம்மா கேட்ட மதுவிலக்குச் சத்தியங்களை
நொந்தே சிரிக்கிறான் நொடியில் அழுகிறான்



மதுவிலக்குப் போராட்டத்தில் மூவரும் கைகோர்த்து அமர்ந்தனர்
புத்தன் சித்தார்த்தனை ஏந்தியபடி
இயேசு மதுஅடிமைகளின் பிள்ளைகளை
ஆட்டுக்குட்டிகளாய்
அணைத்துக்கொண்டபடி
காந்தி அகிம்சையைத் துறந்தபடி

– அகதா

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# இரண்டாம் பரிசு பெறும் கவிதை




நின்று நிதானமாக
உச்சுக்கொட்டி நகர்கின்றன வாகனங்கள்

யாரோ யாரிடமோ சொல்லி
செல்கிறார்கள்
சின்ன வயசுப்பா குடிச்சிருக்கானாம்
தலை கவசம் போடாம வந்திருக்கான் போலன்னு

நின்று சுயமி எடுப்பவனை
துரத்தி
உறைந்த உதிரம் மேல்
மண் அள்ளிப் போடுகிறார்
சீருடைக் காவலர்

நசுங்கிக் கிடக்கிறது
இரு சக்கர வாகனம் ஒன்று

சிவப்பு விளக்கு சுழலவிட்டு
கதறியபடி போகிறது அவசர ஊர்தி

வகுப்பில் வாங்கிய முதல்
மதிப்பெண்ணோடு
தந்தைக்குக் காட்டக் காத்திருக்கிறாள்
வீட்டில் மகளொருத்தி...

– **கதிரவன் வீ**



# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
## மூன்றாம் பரிசு பெற்ற கவிதை




அடமாய்க் குடித்துவிட்டாய் ஆசை மிகவே
தடம்பதித்தாய் உன்னைத் தவறாய்! – முடமாய்க்
கடன்பட்டாய்! கல்நெஞ்சோ காணாய் குடும்பம்
விடம்நுரைத்த கோப்பை விடு!

கருவிற் சுமந்ததாய் கண்ணீர்ச் சொரிந்தாள்
தெருவில் கிடந்தும் தெளியாய்! – உருகாயோ
பெற்ற வலியைவிட பேர்குடிக்கே நோகின்றாள்
உற்றமதுக் கோப்பைவிட்(டு) ஓடு

ஒருநாளின் கூத்ததனை உன்னால் சுமந்தாள்
வருநாள் திருந்தெனவே வாய்த்தாள் – கருவளரத்
தாங்குமங்கை கங்கை தளருகின்றாள் மாக்குடியால்
தூங்குவதா தோள்கொடுக்கும் தூண்!



சினமூட்டும் சண்டையிடும் தீவெறுப்பாய் மாற்றும்
மனமும் கடன்வாங்க மாயும் – தினமும்
மனையாளின் மீதையம் வன்கொடுமை செய்யும்
உனையாண்ட காதல் உலர்ந்து!

வயிற்றுப்புண் புற்றுநோய் வாய்க்குமே தோல்நோய்
துயிலா மணவாழ்வும் தொல்லை – பயில்வாய்க்
குடிப்பழக்கம் காமாலை கூட்டிவரும் நன்றோ?
அடிமை மதுவைவிட் (டு) ஆறு!

கோப்பைக் குடிமகனே கோளாறு நீங்கிடுவாய்
காப்பே யிலாமற் கடைப்புகுந்தாய் – மூப்புபோல்
நோயில் விழுந்தே நொடிந்தாய்! மதுவிடமாம்
வாயினிலே ஊற்றாமல் வா!

**– சோமு. சக்தி**

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – I




இதுதான்
நான் குடிப்பது கடைசி
என அப்பா சொன்ன
எண்ணிக்கை நூறைத்
தாண்டியிருந்தது...

மகனுக்குப் பள்ளிக்குக் கட்ட
வேண்டிய நூற்றி ஐம்பது
ரூபாய் கட்டணத்தைச்
செலுத்துவதற்காகச் சொன்ன
தவணை நூற்றி ஐம்பதைத்
தாண்டியிருந்தது...

பெரியமனுஷி ஆகிவிட்ட
மகளுக்குத் தாவணி வாங்கி தருவதென்பது
கானலாகவே மாறியிருந்தது...

வயதான அம்மாவின்
மருத்துவச் செலவு செய்ய முடியாமல்
இன்னும் இருக்கும் ஆயுளை
முன்கூட்டியே குடித்திருந்தது...

வீட்டிற்குச் சீதனமாய் வந்த
மனைவியின் பொருட்கள் எல்லாம்
கடன் வாங்கியவர்களிடம் அடைக்கலமாயிருந்தது...

அதிகமான போதையில்
நான்கு சக்கர வாகனத்தில் மோதிக் கொண்டதில்
இரண்டாக இருந்த கால்களின் எண்ணிக்கை
ஒன்றாகியிருந்தது....

பள்ளிக்கட்டணம் செலுத்த முடியாததால்
பள்ளிக்கு முன்பு மிட்டாய் விற்றுக்கொண்டிருந்த மகனும்,
துணிக்கடை ஒன்றில்
தாவணி விற்றுக்கொண்டிருக்கும் மகளும்
மதுக்கடையைக் கடக்கும்போது
செத்து செத்துப் பிழைக்கிறார்கள்...
அப்பாவைப் போலவே!

– முபாரக்



# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
## சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 2






**சா**க்கடையோரம் கிடப்பதாகச் சொல்லும் தோழியின்
பார்வையில்
நெளியும் புழுவுக்கு
அப்பா பெயர்.

தங்கம்
ராஜதிராவகத்தில்தான் கரையும்
தாலியான பின்பு ஆல்கஹாலில் கரைந்துவிடுவது அதிசயம்.

திரவ மிருகத்தின் வேட்டைத் தடங்கள்
மாராப்பில் மறைந்து
தப்பித்துக்கொள்கிறது தாயிடமிருந்து.

அடைத்து வைத்த பாட்டில்களில்
மாட்டிக்கொண்ட பூதம் வெளிவந்து
மனிதனைக் குடிக்கிறது.

சாராயத்திற்கு முதலில்
'சா' வந்தும்
ஒத்திகை மயக்கம்
ஒத்துக்கொள்ளவில்லை.

எரிசாராயத்தால்
எரிந்துகொண்டிருக்கிறது
எங்கள் வீடு.

அமிர்தமென்று அமிலத்தை யார் சொன்னது அப்பாவுக்கு?

பாற்கடலெங்கள் பார்வையில் கசிய
மிடறு மிடறாக
விஷம் நுரைக்கும் கோப்பைகளை விழுங்கும்
நீல கண்டனா அப்பா நீங்கள் ?

உங்கள் மார்பில் அணிந்துகொள்ள இருக்கவே இருக்கிறது
எங்கள் மண்டை ஓடுகள்.

– பி.கே.சாமி

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 3






**பொ**ழுது சாஞ்சா அப்பன் வர்ற நேரமுன்னு
ஈரத்துணி பொத்துன கோழியாட்டம்மா
சத்தம் இல்லாம்ம படுத்துக்குவோம்...
சங்கடைப்பாலுக்கும் காசில்லாம்ம கஞ்சித் தண்ணீய
பசியில் அழுகுற தம்பிக்கு குடுக்க அவன்
துப்பிப்புட்டு வத்திப்போன ஆத்தா
முலப்பால உறிஞ்சிக்கிட்டே உறங்கிப்போவான்
புருசன் கல்யாணவீடு சாவுவீடுன்னு வேட்டியில்லாம்ம
குடிச்சுப்புட்டுக் கிடக்கான்னு சொன்னதும்
பதைப்பதைச்சுப் போவா ஆயிரம் தேவுடியா
பட்டம் கட்டுனவன் அம்மனக்கட்டை ஆவதற்குள்ளே..
அடிவாங்கத் தெம்பில்லாம்மே காதுத்தோட சதையோட பிச்சுக்கிட்டு
குடிக்கப் போனாலும் சத்தம் வராம்மே அழுவா
நாசமத்துப்போற சாரயக்கடைக்கு மட்டும் சாபத்தவிட்டுப்புட்டு..
கண்ணுமண்ணுத் தெரியாம போதையேறி பொத்தி
வளர்த்த மகளையே மாராப்புத்துணி விலக்கிப்பார்க்க...
எப்பவும் செவந்தக் கண்ணுங்களோட சாராயத்தக்குடிச்சு
புத்தியே விசமாகிப்போன அப்பந் தலையோட
மொகமெல்லாம் ரத்தச் செவப்பா
அறுவாமனையத் தூக்கிக்கிட்டு கூடவே அனாதையாகிப் போன
எங்களையும் அனைச்சுகிட்டு ஊரையேக் கொல்ற
குடிய நிறுத்துற வினோதினியா தெரிஞ்சா எங்காத்தா...

**– சத்யா மருதாணி**

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 4




தன்னையே உயிராய் எண்ணி
தன் கைப்பிடித்து வந்தவளின் பெருங்காதல்
நினைவில் இல்லை

இரண்டு ஆண்கள்
இரண்டு பெண்களென
நான்கு பிள்ளைகள் பெற்றது நினைவில் இல்லை

அலுவலக நேரத்தில்
அளவிற்கு மீறிய போதையில் செய்த பெருந்தவறால்
தன் வேலை பறிபோனது நினைவில் இல்லை

முப்பதேழு வயதான மூத்த மகளுக்கு
திருமணம் செய்ய மறந்தது நினைவில் இல்லை

முப்பத்தைந்து வயதான இளைய மகள்
யாரோ ஒருவனுடன் ஓடிப்போனது
நினைவில் இல்லை

படிப்பைப் பாதியில் விட்டுவிட்டு
குடும்பத்திற்காகத் தங்கள் இளமை காலங்களை
தியாகம் செய்த மகன்களின் தியாகம் நினைவில் இல்லை

யாருக்கும் சொல்லாமல்
மனதிற்குள் வைத்துப் பூட்டி
அணுவணுவாகச் சித்ரவதை அனுபவித்து
மனச்சிதைவால் நடைபிணமாய் மாறிப்போன
மனைவி நினைவில் இல்லை

இத்தனையும் மறந்துபோன அவன்
எப்போதும் நினைவில் வைத்திருக்கிறான்
மதுவால் நிரப்பப்பட்ட
தன்னிலை மறக்கச் செய்த
அந்த விஷம் நுரைக்கும் கோப்பைகளை....

– **பிரபுசங்கர்_க**



# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 5




அந்த மயானத்தில்
அப்பாவை எரித்துவிட்டார்கள்
அம்மா அழுதுகொண்டிருந்தாள்
வற்றிவிட்ட கண்ணீரை யாரும் இரவல் தரவில்லை
அவள் எனக்காக உயிரைமட்டும்
கொடுக்காமல் வைத்திருக்கிறாள்
அவள் முகத்தின் வெறுமைகள் அந்தச் சூழ்நிலைகளை விழுங்கி
செரித்துக்கொண்டிருந்தது
கடைசியாக அப்பா என்னைக் கண் திறந்து பார்த்தது
நினைவிலிருந்து மறக்கவில்லை
குடித்துக் குடித்துக் குடல் வெந்த அப்பா
எனக்காக எதையும் செய்யாத அப்பா
வெற்றுடலாய்க் கிடக்கிறார்
என்னைப் பார்க்கும் அந்த விழிகளில் என்ன இருந்தது
தவறுகளின் பாவமன்னிப்பா?
அத்தனையையும் தொலைத்த வருத்தமா?
கடந்துவிட்ட காலத்தின் நினைவுகள்
உள்ளே எழுப்பும் தீயின் ஜ்வாலையா?
மகளைக் கைவிட்ட மனைவியின் உணர்வுகளைக் கொன்ற
துயரைக் கரைக்க இயலாத அவலமா?
நான் உணர்ந்துகொண்டேன்
எல்லாமே முடிந்துவிட்ட கையறுநிலையின் அம்மண அவலம்
என் உள்ளத்தின் கோபக் கண்களை மூடிக்கொள்கிறேன்
ஈரம் காயாத குருதியின் மணம்
எனக்குள்ளேயே வீசிக்கொண்டிருக்கிறது
குடியும் போதையும் மட்டுமே சுகம் என
வாழ்ந்த அவரின் செயல்கள் என்
உள்ளச் சுவற்றில் படிந்துவிட்ட கறைகளாகி
நிறத்தை மாற்றிவிட்டது
உடலின் மாண்பைத் தூக்கி எறிந்துகொண்டிருக்கிறேன்
சந்தோஷங்களைக் காணாத வெறுமைக்குள் புரள்கிறது என்
பசித்த வயிறு
தினம் தினம் இறந்துகொண்டிருக்கும்
உடலை யார் யாரோ பொறுப்பெடுத்து
விடுவித்துக்கொண்டிருக்கிறார்கள்!
அப்பாவை எரித்த அந்த மயானத்தில்தான்
நான் தினமும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்
அவர் வைத்துச் சென்ற காலிக் கோப்பைகளில் துளித்துளியாக
என் உயிர் நிரம்பிக்கொண்டிருக்கிறது.....

– லக்ஷ்மி



# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
## சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 6






நம் வீட்டிற்குள் ஒரு முள் உதிர்ந்து கிடந்தது
கூட்டிலிருந்து உதிர்ந்ததைப் போலவும்,
தலையிலிருந்து உதிர்ந்ததைப் போலவும்தான்
உனக்குப் பின்னால் காகங்கள் மறைந்ததை
கடைசிச் சூரியன் பார்த்திருக்கிறது

•

குடிப்பதை நீ நிறுத்தியிருக்கலாம்
கொஞ்சகாலம் நீ உயிரோடு இருந்திருக்கலாம்
மலர் பனியில் நடுங்குவதை, நிலவு குளத்தில்
தளும்புவதை நீயும் கூட கண்டிருப்பாய்.

•

மதுப்பித்துக் கொண்டு நடுங்கிய உன் விரல்களால்
சிந்திய தண்ணீரில் இரண்டு எறும்புகள் மூழ்கி
திணறுகிறது

•

குழந்தை விடுவித்த வண்ணத்துப்பூச்சி உன் குடல்புண்களில் ஏன்
வந்து அமரவில்லை?

•

வெந்துபோன கல்லீரலிலிருந்து அகாலத்தின் நாட்கள்
ஈசலாய்ப் பூக்கிறது
உறங்கும் நம் குழந்தைகளுக்கு இனி எந்த
மதுக்கடையிலிருந்து வாங்கித்தருவது
சாராயமுத்தங்களை?

•

உனக்குப் பிடித்ததை உன்னோடு
புதைத்திருப்பார்கள்....
கடவுளே அந்த மதுக்குடுவை மட்டும்
முளைத்துவிடக்கூடாது மேலும்
கிடந்திச் சென்ற காலப்போத்தலுக்குள் காற்று
நுழைந்து திரும்புகையிலெல்லாம் ஓலமிடும் அந்த
செந்நாயையும் கொஞ்சம் உறங்கச் சொல்லுங்கள்
போதும்...

– **நிலாகண்ணன்**

# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
## சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 7




**கொ**ய்யா இலைகளையும், ஹால்ஸ் மிட்டாய்களையும்
வாயிலிட்டுச் சவைக்கத் தெரிந்த அப்பாவுக்கு
சிவந்த கண்களை மறைப்பதற்கான
திரையேதும் கிடைக்கவில்லை போலும்

இதுவரை தொங்கிய தலையோடு
அப்பாவைப் பார்த்ததே இல்லை,
தோட்டத்தில் பூக்கள், வாடிக் கவிழுகையில் எல்லாம்
தண்ணீர் ஊற்றச் சொல்லிக்கொடுத்த அப்பாவைத்தான்
பார்த்திருக்கிறேன்

சுடு சோளக்கருதைக் கசக்கி ஊதிக்கொடுத்த அப்பாவை
குடிச்சிருக்கீங்களா ஊதுங்கன்னு சொல்லுவதற்குத்
திராணியற்று
காற்றில் சிதறும் பதராய்த் தொலைந்துகொண்டிருக்கிறேன்

ஒளித்து வைத்திருந்த மதுபாட்டிலைத் தொடுகையில்
கண்ணாடியைத் தாண்டிக் கைகளை ஈரமாக்கியதாய் உணர்ந்த
இந்த மதுவின் வாசத்தை எத்தனை முறைதான் கழுவுவது?
மீண்டும் ஒருமுறை அப்பாவை அகண்ட விழியோடு
ஐசியூவில் பார்க்கும் சக்தியெல்லாம் இல்லை.

அவர் தொடும் அடுத்தவொரு மதுபாட்டிலிலிருந்தாவது
சாம்பல் நிற வண்ணத்துப் பூச்சியாய்
கைகளைச் சுடட்டும் என் முகம்.
ஏனென்றால் அப்பா குடிக்க ஆரம்பித்ததிலிருந்தே
தலைகோதிவிடுவதை மறந்துவிட்டார்.

**– சிமோனா மகாவிஷ்ணு**



# விஷம் நுரைக்கும் கோப்பைகள் பரிசுப்போட்டி – 2020
# சிறப்புப் பரிசு பெற்ற கவிதை – 8






**பா**தி வகுப்பிலேயே
வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருந்த
சிற்றப்பனின் முகம்
சிறிதும் மறந்திருக்கவில்லை அம்முக்குட்டிக்கு..

‘அம்மா அப்பா வரலையா சித்தப்பா’
என்று கேள்விகளால் துளைத்தவளுக்கு
பதிலுரைக்க வக்கற்ற நிலைதான் சிற்றப்பனுக்கு..
அய்யோ பாவம்!!

வீடு நெருங்கிய அம்முக்குட்டியை
மாரில் வாரியணைத்து
‘அப்பா சாமிகிட்ட போயிட்டாருடா அம்மு’ என்று
கண்ணீர்தீரக் கதறுகிறாள் அம்மா..

அப்பாவின் சடலத்தை மெல்ல நெருங்குகிறாள் அம்மு..
அவர் எப்போதும் மது குடித்துவிட்டு
மிச்சம் கொண்டு வரும் பட்டாணிக்கடலை
ஒன்று இரண்டெனச் சட்டைப்பையிலிருந்து விழுகிறது..

அதைக் கையில் எடுத்துக் கொண்டு
கதறும் அம்முக்குட்டியை – காலில் விழுந்து
‘அம்மு அம்மு’வென்று கதறி அழுகிறது
அப்பாவின் ஆத்மா..

ஒருவேளை உயிரோடு இருந்திருந்தால்
உயிர் போகக் காரணமாயிருந்த மதுபானத்தை
சத்தியமாக விரும்பித் தொட்டிருக்க மாட்டார்
அன்புள்ள அப்பா!!

**– கற்குவேல் பாலகுருசாமி**

• கவிஜி

# உலக சினிமா ஒரு பார்வை



எல்லாக் காலங்களுமே நேரங்களால் பிறகுதான் கட்டமைக்கப்பட்டது. முதலில் பசியால்தான். அதுதான் உலக மொழி. அதன் மீது பார்த்துப் பார்த்துப் படுபயங்கரமாக கட்டமைக்கப்பட்ட தத்துவங்கள்தான் இங்கிருப்பது எல்லாம்.

இந்தப் படம் ஒரு யூத சிறுவனுக்கும் ஹிட்லரிடம் பெரிய பதவியில் இருக்கும் ஒரு சோல்ஜரின் மகனான புரூனோவுக்கும் இடையிலான நட்பு பற்றிய படம். அவர்களின் அறியாமையும் அன்பும் சேர்ந்த, காலம் அழித்துவிடக்கூடாத படைப்பு இது. அவர்களின் பார்வையில் அகப்பட்ட உள்ளமும் உலகமும் என்று இரு வேறு நிறங்களை நமக்கு வெளிப்படுத்தும் காலப் பதிவு. ஒரே வயதாக இருந்தாலும் இருவருக்கும் மாறுபட்ட அனுபவங்களைக் கொடுத்த இந்த வாழ்க்கை அவரவர் பார்வையில் எல்லாமே வேறுவேறாய் இருக்கிறது. அது இணைக்கும் ஒற்றைப் புள்ளியில் அவர்களுக்கு இடையில் மின்சாரமாய்ப் பாய்ந்து பின்னிக்கொண்டு நிற்பது வெறும் முள்வேலி மட்டுமல்ல. அது அதிகார வர்க்கத்தின் ஆணவச் சுருள். அத்துமீறும் அதிகார அகங்காரத் தத்துவங்களின் வியாக்கியான மிருகத்தோல் களாகவும் இருக்கின்றன.

இனத்தின் பெயரால் ஒதுக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்ட.... யூத இனத்தின் கொலைக்களங்கள் மிக மிக அப்பட்டமானவை. பதட்டமானவை. அங்கே மிகப்பெரிய ஆயுதமாகப் பசி இருக்கிறது. கூர் முனை கொண்ட கத்தியில் மென் புன்னகை சிந்தும் வாழ்வின் பசி அதன் பிண்டத்தின் உருவகம். உணவை வாங்கியதும் கண்களுக்குக் கூட காட்டாமல் வாய்க்குள் திணிக்கும் அந்த யூத மொட்டைப் பையன்.... (ஸ்மோல்) ஹிட்லரிடம் சிக்கிக்கொண்ட யூத இனத்தின் ஒரு துளி சோறு பதம். அது அடிமையாக்கப்பட்ட இனத்தின் மிகப் பெரிய குறியீடு. விசில் சத்தம் கேட்டதும் என்ன பேசிக்கொண்டிருந்தாலும்.. என்ன செய்துகொண்டிருந்தாலும்.. அதை அப்படியே விட்டுவிட்டு ஓர் இயந்திரம் போலக் கூனிக் குறுகி அவமானத்தை ஒப்புக்கொண்ட உடல் மொழியோடு யூத அடிமைகள் ஓடிச் செல்லும் காட்சியைக் காணுகையில் அதிகார வர்க்கத்தின் ஒட்டுமொத்தக் குரோதத்தையும் கூட காண்கிறோம்.

புது இடத்தையும் அதனால் நிகழும் தனிமையையும் புரூனோவுக்குப் பிடிக்கவில்லை. அவன் தன் வயது பையன்களைத் தேடி அலைகிறான். அவன் கால்கள் ஒரு திசையில் ஒரு குறியீட்டுக் குவளையாய் வளைந்து காட்டுக்குள் சிறகடிக்கிறது. அது முடியும் இடத்தில் ஒரு முகாம் இருக்கிறது. அது யூதர்களின் முகாம் என்பது அவனுக்கு அப்போது

தெரிவதில்லை.... பின் எப்போதுமே தெரிவதில்லை. இதுதான் இந்தக் கதையின் ஆகச் சிறந்த முரண். அந்த முகாமுக்குக் காவல் தலைவரே தன் தந்தைதான் என்பதும் அவன் அறியாதது. தன் தந்தை ஒரு கண்டிப்பான அதிகாரி என்பதும் அதனால் அவரை அவ்வளவாகப் பிடிக்காது என்பது வரையிலான அறிதல் அவனுக்கு இருக்கிறது.

புரூனோ முள்வேலியால் சூழப்பட்ட ஓர் இடத்தைக் காண்கிறான். அங்கே ஒரு சிறுவன் மொட்டைத் தலையுடன்... தலை கவிழ்ந்து அமர்ந்திருக்கிறான். அவன் புரூனோவின் வீட்டில் வேலை செய்யும் வேலையாளைப் போலவே உடை (Striped Pyjamas) அணிந்திருக்கிறான். புரூனோவுக்கு ஒன்றும் புரிவதில்லை. மலங்க விழித்துக்கொண்டே அலை மோதும் யோசனைகளுடன் மெல்லத் தன்னை அவனிடம் அறிமுகம் செய்துகொள்கிறான். அவனும் தயங்கித் தயங்கி, பின் மெல்லப் பேசுகிறான்.

"இந்த முள்வேலி விலங்குகள் உள்ளே வரக் கூடாது என்பதற்காகவா?" என்று கேட்கிறான் புரூனோ.

"விலங்குகளா....?" என்று இயல்பாகக் கேட்டுவிட்டு...."இல்லை.. நாங்கள் வெளியே போகக் கூடாது என்பதற்குதான் இந்த முள்வேலி" என்கிறான் யூதச் சிறுவன்.

"ஏன்?" என்று கேட்கிறான்... புரூனோ.

"நாங்கள் யூதர்கள்" என்கிறான் ஸ்மோல்.

இந்த ஒற்றைப் பதில் எத்தனை எத்தனைக் கேள்விகளை நமக்குள் எழுப்பி விடுகிறது. இதற்கிடையில் "யூத இனம் என்பது தவறாகப் பூமியில் தோன்றிவிட்ட ஒரு வகை கிரியேட்சர். அதை வேரோடு அழிப்பதுதான் நமது கடமை. அதுதான் தர்மமும் கூட" என்று புரூனோவுக்கு வீட்டில் வகுப்பெடுக்கப்படுகிறது.

பதின் வயதில் இருக்கும் தன் அக்காவின் அத்தனை பொம்மைகளும் ஆடை கலைந்து வீட்டுக்குள் பழைய பொருள் போட்டு வைக்கும் அறையில் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்ட புரூனோ... ஓடி வந்து தன் அக்காவிடம் விஷயத்தைக் கூறுகிறான்.

அக்காவோ.."அது அப்படித்தான்.. இனி நான் பெரிய பெண்.. என் லட்சியம் வேறு" என்று ஒரு புரட்சிக்காரியைப் போலப் பேசுகிறாள். அவளின் அறைக்குள் ஹிட்லரின் படமும் அவன் கூறிய வாசகமும் நிறைந்திருக்கின்றன. ஒரு படைத்தளபதியை உருவாக்கிவிட வேண்டிய சூழலைக் கொண்டதாகவே அந்தக் காட்சி காட்டப்படுகிறது. அது ஒரு சாம்பிள்தான். அப்படித்தான் அங்கு பதின் பருவத்து மனங்களில் நாஜிப் படையின் வேர்கள் முளைவிட வைக்கப்படுகின்றன என்பதைத் துல்லியமாக விளக்கும் இடம் அது. மிக மிக மெல்லிய நீரோடை போல ஓடும் படத்தில்.... ஓடிக்கொண்டிருப்பது நீரோடை அல்ல... காட்டாறு என்பதைப் பார்க்கப் பார்க்கப் பார்த்துக்கொண்டே உணரும் நொடிகளில் நாம் மிகப் பெரிய துக்கத்துக்குள் போய் விடுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

இருவரும் தங்கள் பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்திக்கொள்ளும் இடத்தில் "ஸ்மோல்லா.... இப்படி ஒரு பேரா... நான் கேள்விப்பட்டதே இல்லை" என்கிறான் புரூனோ.

"புரூனோவா... இப்படி ஒரு பேரா... நான் கேள்விப்பட்டதே இல்லை" என்று ஸ்மோல்லும் அதே வசனத்தைக் கூறுகிறான்.

இரு வேறு துருவங்களின் பிளவு ஆழமாக விதைந்துவிட்டதைக் காட்டுகிறது. பெயர் கூட ஓர் இனம் வைப்பதை இன்னோர் இனம் வைக்கக் கூடாது என்பதில் மிகத் தெளிவாக இயங்கி இருக்கிறது பாசிசம். அடுத்த நாள் புரூனோ கொண்டு போகும் சான்விட்சை, அது என்ன என்று கூட பார்க்காமல் சட்டென வாங்கி வாய்க்குள் வைத்துத் திணிக்கும் 'ஸ்மோல்' பசித்த கடவுளாகவே எனக்குத் தோன்றுகிறான். பசித்த கடவுளுக்கு மானம் ரோசம் இருக்காது. விளிம்பு நிலை மனிதனின் மிக மோசமான பள்ளத்தாக்கை வயிறாகக் கொண்ட பாவப்பட்ட ஒரு படைப்பாகவே தெரிகிறான்.

ஒவ்வொரு ஜெர்மானியரும் ஹிட்லராகத் தெரிந்த இடம் அது. ஆனால் அதில் புரூனோ விதிவிலக்காகிறான். ஸ்மோல்லை நேசிக்கத் துவங்குகிறான்.

ஒருநாள் வேறொருவருக்குப் பதிலாகத் தன் வீட்டுக்கு வேலைக்கு வரும் யூத சிறுவன் ஸ்மோல்

க்குச் சான்ட்விச் சாப்பிடக் கொடுக்கிறான். ஆனால் அவன் சாப்பிடுவதைத் தன் வீட்டு அதிகாரி பார்த்துவிட்டதும், பயத்தில் அவனைத் தனக்குத் தெரியவே தெரியாது என்று புரூனோ பொய் பேசி விடுகிறான். அப்போது ஸ்மோல் தன் நண்பன் புரூனோவைப் பார்ப்பானே ஒரு பார்வை.. அது மீண்டும் கொல்லப்பட்டால் ஜீசஸ் யூதாசைப் பார்ப்பது போல... பசித்த வயிறு நிறைந்த வயிறைத் தடவிப் பார்ப்பது போல.

அது மனிதத் தன்மையற்ற செயல் என்று உணர்ந்து... அதை நினைத்து நினைத்து மனம் வெதும்பி புரூனோ அழும் இடம்... திரை தாண்டித் துளிர்க்கும் தவிப்பின் உச்சம். நாமும் கண்ணீர் அடக்கவே செய்வோம்.

அடுத்த நாள் தலை கவிழ்ந்து அமர்ந்திருக்கும் ஸ்மோலிடம் மன்னிப்பு கேட்டு, "பேச மாட்டியா?" என்று புரூனோ கேட்கும்போது மெல்லத் தலை தூக்குவான் ஸ்மோல். அடி வாங்கி அவன் கண்கள் வீங்கிப்போய்ச் சிவந்திருக்கும். புரூனோ தனக்குத் தெரியாது என்று கூறிய பின் திருடிச் சாப்பிட்டுவிட்டதாக முடிவுக்கு வந்த அதிகாரி அவனை இழுத்துச் சென்று அடித்த காட்சியை இயக்குனர் நமக்குக் காட்டவே இல்லை. ஆனால் இன்று வீங்கிய கண்ணோடு ஸ்மோல் பார்க்கும் பார்வையில் உடைந்து நொறுங்குகிறது நம் இதயம். புரூனோ ஒடுங்கிப்போகிறான். காணாத அடியின் வலி... ஒரு பூதத்தைப் போல அவனைப் பயமுறுத்துகிறது.

ஒரு கட்டத்தில் யூத முகாமுக்குள்ளேயே காணாமல் போன ஸ்மோலின் தந்தையைக் கண்டுபிடிக்க முடிவெடுக்கிறார்கள். அவர் செத்துப் போயிருப்பார் என்று கூட இருவருக்கும் யூகிக்கத் தெரியாத நிலையில் யூதர்களுக்கான சீருடையை (Striped Pyjamas) கொண்டு வரச் சொல்லி தானும் அணிந்துகொண்டு தன் நண்பன் ஸ்மோலுக்காக அந்த முகாமுக்குள் நுழைகிறான் புரூனோ.

புரூனோவின் அப்பா அம்மா அக்கா மற்றும் காவல் படை என்று அனைவரும் விஷயம் தெரிந்து அடித்துப் பிடித்துக் கொட்டும் மழையில் மனம் நடுங்க உடல் நடுங்க ஓடி வந்து கத்திக் கூச்சலிட்டுத் தேடுகிறார்கள்.

அங்கே ஓர் இருட்டறை சாவு அரங்கேறிக் கொண்டிருக்கிறது.



ஒரு கூட்டத்தின் ஆடைகள் கழற்றப்பட்டு அறைக்குள் தள்ளி ஏதோ மருந்து தெளித்துப் பூட்டிவிடுகிறார்கள். அந்தக் கூட்டத்தில் கூட்டத்தோடு கூட்டமாக புரூனோவும் ஸ்மோலும் மாட்டிக்கொள்கிறார்கள். ஒரு மாபெரும் கனத்த வாசலில் மூடிய கதவு இனவெறியின் மரணத்தைத் தாங்கிக்கொண்டு சலனமற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

திரையை விட்டுக் கண்கள் வெளியேறுகிறது. இருபுறமும் வினை செய்யும் என்ற உண்மையை மிரட்சியோடு ஒன்றுமே புரியாத மணித் துளிகளாக நமக்குக் காட்டுகிறார் இயக்குனர். குவிதலின் சரி தவறுகளை நியாயமற்ற வார்ப்புகளால் அதிகாரம் தனக்கேற்பச் செய்துகொண்ட உடன்படிக்கையின் வன்மத்தை இந்தப் படம் உயிர் அறுக்கச் சொல்கிறது.

பசி பயம் தவிப்பு தனிமை இருள் இயலாமை..... என்று ஒரு சிறுவன்.

இவை எதுவுமே இல்லாமல் மன உளைச்சலுக்குள் ஆளாகும் இன்னொரு சிறுவன்.

ஒருவன் யூதன். ஒருவன் ஜெர்மானியன்.

இடையில் நின்று என்ன செய்வதென்று தெரியாமல் செத்துக் குவித்த ஹிட்லர்... சாத்தான்.

கடவுளே நீ எங்கே...?

Film : The Boy in the Striped Pyjamas

Year: 2008

Language: English

Director : Mark Herman

வீரக்கல்

சிறுகதைகள் - 7

நட்ட கல்லும் பேசுமோ?

• பிரேம பிரபா

# ரணகீர்த்தி-அமர்கழி

வானவ மாதேவி அன்று ஏனோ இனம் புரியாத குழப்பத்திற்கு ஆட்பட்டிருந்தாள். குழம்பிய மனதில் தெளிவிருக்காது என்பதற்கிணங்க அன்புடன் உணவு படைக்கும் தாதிமார்களிடம் எரிந்து விழுந்தாள். தான் செய்வது தவறு என்று உணர்ந்தும் தன் தற்போதைய நிலைக்குக் காரணத்தைக் கண்டறிய இயலாமல் நிலை தடுமாறினாள்.

அரசரைக் கண்டு பத்து தினங்களுக்கு மேலாகிவிட்டதால் அதற்கான காரணத்தை யாரிடம் கேட்கலாம் என்று மறுகிக்கொண்டிருந்தாள். தன் நெருங்கிய அந்தரங்கத் தோழியிடம் கேட்டால் என்ன என்று முதலில் யோசித்தாள். அவளுக்கு அந்தப்புரமே அனைத்துமென்றாகிப்போக வெளியுலகத்தில் நடக்கும் செய்திகளைப் பற்றி அவளிடம் கேட்டு எந்தவிதப் பயனும் இல்லை என்ற முடிவிற்கு வந்தாள். அடுத்துத் தலைமைத் தாதியிடம் காரணம் கேட்க நினைத்தாள். அப்படிக் கேட்டால் தனக்காக அனைவரையும் அழைத்து ஒரு பெரிய ஆர்ப்பாட்டமே நடத்திவிடுவாள் என்பதினால் அந்த முயற்சியையும் கைவிட்டாள். அப்போதுதான் அவளுக்கு அரசரின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான அந்தப்புரச் சேவகன் அமர்கழி நினைவிற்கு வந்தான். உண்மையில் "சேவகர்" என்ற சொல்லானது உயர் பதவி வகித்த மறவர்களையே பெரும்பாலும் குறிக்கும். இவர்கள் அரசர்களிடம் மெய்க்காப்பாளராகவோ, படைத்தலைவராகவோ, சிற்றரசர்களாகவோ கூட இருந்துள்ளனர்.



அமர்கழி அன்றிரவு அந்தப்புரத்தில் கேட்ட வழக்கத்திற்கு மாறான சப்தத்தைப்பற்றி அங்கு பணிபுரியும் பெண் ஏவலாளிகளிடம் விசாரணை நடத்திக்கொண்டிருந்தான். முக்கியமாக சமீபத்தில் பணிக்குச் சேர்ந்த ஒரு சிலரையும் கடுமையான விசாரணைக்குட்படுத்தினான். பாதுகாப்பு கருதி அந்தப்புரக் காவலிற்கு வழக்கத்திற்கு மாறாக மேலும் பலரை நியமித்திருந்தான்.

அப்போது வானவ மாதேவியின் அந்தரங்கத் தோழி அமர்கழியைப் பார்க்க வந்தாள். மகாராணியின் நிலை பற்றிக் கூறினாள். அனைத்தையும் கேட்ட அமர்கழி அளவான புன்சிரிப்புடன் தோழியைத் தொடர்ந்து அந்தப்புரத்திற்குள் நுழைந்தான்.

"அமர்கழி, அரசர் ஏதோ மிகுந்த துக்கத்துடன் இருப்பது போல எனக்குத் தோன்றுகிறது. ஏதேனும் நாட்டில் பிரச்சினையா? நிலைகொள்ளாமல் குழம்பித் தவிக்கிறேன் நான்" என்றாள் வானவ மாதேவி. தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவசர நிலை பற்றி மகாராணியிடம் கூறலாமா வேண்டாமா என்ற குழப்பத்திலிருந்து மீள ஒரு சில நொடிகள் எடுத்துக்கொண்ட அமர்கழி ராஜ்ஜிய பரிபாலன விஷயங்களைப் பற்றி அரசரே ராணியாரிடம் கூறுவதுதான் சரியாக இருக்கும் என்று தீர்மானித்தான். "அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை மகாராணி. அதிகப் பணி நிமித்தம் காரணமாக அரசர் சற்று களைப்படைந்திருக்கலாம். தாங்கள் இந்த அளவிற்கு வருத்தப்பட எதுவும் நடக்கவில்லை" என்று கூறினான். அமர்கழியின் பதிலில் திருப்தியடையாத வானவ மாதேவி "நான் ஏற்கெனவே உன்னிடம் இந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்தேன். ராஜ விசுவாசியான நீ அவ்வளவு எளிதில் ரகசியங்களைக் கூறிவிடுவாயா என்ன?" என்று அவனைப் போக அனுமதித்தாள்.

அன்று இரவு பாண்டிய மன்னன் பராந்தக வீர நாராயணன் அந்தப்புரத்திற்கு வருவதிற்கான ஆயத்தப் பணிகள் குறித்து முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை அமர்கழி எடுத்திருந்தான். மன்னர் அந்தப்புரத்தில் தங்கும் நேரம், அவர் விரும்பி உண்ணும் உணவு என்று அனைத்தையும் முன்கூட்டியே தீர்மானித்தான். அந்தப்புரத்தில் இருக்கும் தலைமைத் தாதியிடம் தந்தத்தினால் ஆன

சதுரங்கப் பலகையில் காய்களை அடுக்கி மன்னரின் பார்வையில் படுமாறு வைக்கச் சொன்னான். அந்தப்புரக் காவலன் அமர்கழி, மன்னரின் நம்பிக்கைக்கு உரிய இரண கீர்த்தி மற்றும் அரசரின் பாதுகாப்பு கருதிப் பயிற்சி பெற்ற சில வீரர்களுடன் மன்னர் பராந்தக வீர நாராயணன் வானவ மாதேவியைக் காண அந்தப்புரத்திற்கு வந்தார்.

இரண கீர்த்தியையும் அமர்கழியையும் தவிர்த்து அனைவரையும் வெளியே காத்திருக்கச் சொன்ன மன்னன் தன் தேவியின் வாடிய முகம் காண வருத்தமுற்றார். அருகில் இருக்கும் சதுரங்கப் பலகையில் இருக்கும் காயை முதலில் நகர்த்தி வானவ மாதேவியைப் பார்க்க அவளும் அவள் பங்கிற்கு எதிர் திசையில் மறு காயை நகர்த்தினாள். சிறிது நேர விளையாட்டிற்குப் பிறகு பழச்சாறு கொண்டு வந்த வானவ மாதேவியை முதன்முதலாகப் பார்ப்பது போலப் பார்த்தார். அவளின் கைகளை ஆதரவாகப் பற்றிக்கொண்டு அருகில் வந்து அமரச் சொன்னார். “திருப்புறம்பியம் போர் முடிந்து இப்போதுதான், அண்ணன் இரண்டாம் வரகுணனிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டது போல இருக்கிறது. அதற்குள் இருபத்தி ஏழு ஆண்டுகள் ஆகப்போகின்றன. நாட்கள்தான் எப்படி இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறது பார்த்தாயா தேவி?” என்றார். அதற்கு வானவ மாதேவி பதில் ஏதும் கூறாமல் திருப்புறம்பியம் போர் பற்றி மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்த்தாள்.

கொள்ளிடத்தின் கரையில் இருக்கும் திருப்புறம்பியம் என்ற இடத்தில்தான் பல்லவ மன்னன் அபராசிதவர்மனுக்கும் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனுக்கும் கி.பி.885ஆம் ஆண்டில் போர் நடந்தது. இதில் ஆதித்த சோழன் மற்றும் கங்க மன்னன் முதலாம் பிரதிவிபதி பல்லவருடன் சேர்ந்து பாண்டியனை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். இறுதியில் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் தோற்றான். இந்தத் தோல்வியினால் பெரிதும் மனமுடைந்த இரண்டாம் வரகுணன் தன் இளைய சகோதரன் பராந்தக வீர நாராயணனிடம் ஆட்சிப் பொறுப்பை அளித்துவிட்டு சிவ தர்மத்தில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டான். இவை யனைத்தும் நடந்து முடிந்து இருபத்தி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

“நான் உன்னிடம் ஒன்றைக் கூற மறந்துவிட்டேன் தேவி. சேரமான் பெருமாள் நாயனார் நம் நாட்டின் மேல் போர் தொடுப்பதற்கான ரகசியப்பணிகளைச் செய்வதாக நம் ஒற்றர்கள் செய்தி அனுப்பி யிருக்கிறார்கள். அதற்கான வேலைகளில் நான் நேரடியாக ஈடுபடவேண்டியிருந்ததால்தான் மகாராணியைக் காணச் சிறிது தாமதமானது” என்றார். “நீங்கள் நினைப்பது போல்



அப்படியெல்லாம் இல்லை அரசே. அமர்கழி என்னிடம் தங்களைப் பற்றி அவ்வப்போது கூறிக்கொண்டுதான் இருக்கிறான்” என்று அவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தாள். இதைக் கவனித்த இரண கீர்த்தி அரசிக்கும் அமர்கழிக்கும் இடையில் உரிமையுடன் நடந்துகொண்டிருக்கும் ரகசியச் சீண்டலை ரசித்தவாறே அமைதியாக நின்று கொண்டிருந்தான். அரசர் விடைபெறும்போது அவரின் சால்வையின் நுனி, காற்றில் பறந்து சதுரங்கப் பலகையில் அவர் பக்கம் இருக்கும் இரண்டு கோட்டைகளை கீழே தட்டிவிட யாரும் அறியாதவாறு வானவ மாதேவி அதை மீண்டும் சதுரங்கப் பலகையில் எடுத்து வைத்தாள்.

அந்த நாளும் வந்தது. சேரமான் பெருமாள் நாயனார் பாண்டிய மன்னர் பராந்தக வீர நாராயணனுடன் போர் புரிய நாளையும் தீர்மானித்துப் பறையறிவிப்பும் செய்துவிட்டார். முதல் கட்டமாக சேரனின் படைகள் கரைக்கோட்டையை முற்றுகையிட்டன. சேரனின் படைகள் புற்றீசலைப் போலக் கோட்டையைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டன. கோட்டை மதிலைச் சுற்றி வளைத்த உழிஞைத் திணை வீரர்களைக் கோட்டைக்குள் புகாமல் தடுத்துப் பாண்டிய வீரர்கள் போரிட்டார்கள். அப்படி போரிடும்போது பகைவருக்கு எதிராக தம்முடைய மதிலைக் காத்து நிற்கும் நொச்சித் திணை வீரர்கள் கழுத்தில் நொச்சி மாலையைச் சூடிப் போர் புரிந்தார்கள். மதிலைச் சுற்றி இருக்கும் அகழிகள் மதிலைப் பிடிக்க வரும் வீரர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் விதமாகப் பல தடைகளுடன் அமைந்திருக்கும். எனவே, இவ்வகழிகளைப் பாண்டிய வீரர்கள் அழிக்காது போரிடுவார்கள்.

பாண்டிய மன்னனின் பிரியத்திற்கும் நம்பிக்கைக்கும் ஆளான இரண கீர்த்தியும், அமர்கழி என்ற உள்வீட்டுச் சேவகனும் கோட்டை அழியாது காப்பதற்காக உக்கிரமான எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டார்கள். இவர்கள் தங்கள் கணைகளால் பல சேர வீரர்களைக் கொன்று சாய்த்தனர். கோட்டை மதிலில் ஏற முயன்ற பலரின்

முயற்சிகளை இந்த இருவீரர்கள் வெகு திறமையாக முறியடித்தார்கள்.

சில சேர வீரர்கள் அகழிக்கு அப்பால் நின்று கொண்டு தங்களின் வீரத்தைப் பெருமையாகப் பிதற்றிக்கொண்டும் அதே சமயம் பாண்டியர்களின் வீரத்தை இழிவாகப் பேசிக்கொண்டும் அவர்களை வீண் வம்பிற்கு இழுத்தார்கள். கோட்டையின் பிரதான வாயிலில் நின்றுகொண்டிருந்த பாண்டிய வீரர்கள் எதற்கும் உணர்ச்சிவயப்படாமல் படைத் தளபதிகள் தங்களுக்குப் பணித்த கட்டளையை மட்டும் சிரமேற்று நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அகழியைத் தாண்டிக் கோட்டை வாயிலை இணைக்கும் மரப் பாலத்தைக் கோட்டை வாயிலுடன் சேர்த்து உயர்த்திக் கட்டியிருந்தார்கள். அதன் மேல் பல திசைகளிலிருந்து பாய்ந்த அம்புகளும் வேல்களும் ஈட்டிகளும் முனை பிளந்து ஒரு சிறிய மலைபோல் குவிந்திருந்தன. கோட்டை மதில் சுவர்களிலிருந்து பாண்டியர்களின் அம்புகள், வெடித்துச் சிதறும் எரிமலையின் வாயிலிருந்து சீறிக் கிளம்பும் அக்கினிச் சுவாலையை ஒத்திருந்தன. போரின் இரைச்சலுடன் ஒத்திசைவில்லாமல் தயங்கியபடி விழுந்த மழைத் துளிகள் படை வீரர்களின் கேடயங்களில் பட்டு ஆவியாகப் போயின.

அந்தப்புரத்தில் வழமைக்கு மாறான அசௌகரியமான அமைதி சூழ்ந்திருந்தது. குறுக்கும் நெடுக்குமாகத் தேனீக்களின் சுறுசுறுப்புடன் வலம் வரும் சேடிப் பெண்களின் வளையல் ஓசை கேட்கவில்லை. அரசர் அந்தப்புரத்திலிருந்து கிளம்பும்போது சதுரங்கப் பலகையிலிருந்து கீழே விழுந்த இரண்டு காய்களை மீண்டும் நினைத்துப் பார்க்க வானவ மாதேவி மெலிதாக நடுங்க ஆரம்பித்தாள். அரசர் வெற்றி வாகை சூடவும், அவரின் மெய் சேவகர்களான இரண கீர்த்திக்கும் அமர்கழிக்கும் தான் அஞ்சுவது போல ஏதும் நடந்துவிடக்கூடாது என்றும் மனதுருக வேண்டிக் கொண்டாள். தலைமைத் தாதி அனைத்து வேலைகளையும் மற்றவர்களிடம் பங்களித்துவிட்டு வானவ மாதேவியை விட்டுப்பிரியாமல் அவளுடனேயே இருந்து அதிக அக்கறையுடன் கவனித்துக் கொண்டாள். அடிக்கடி போர் பற்றிய செய்திகளை முழுவதும் கேட்டறிந்து பக்குவத்துடன் வேண்டுமளவு மட்டும் வானவ மாதேவியுடன் பகிர்ந்துகொண்டாள்.

மேற்கில் ஆதவன் மறைவதற்கான முதல் முயற்சியாக மேகத்தினைச் செந்நிறமாக்கியது. பின் முரசறைந்து போரை நிறுத்தினார்கள். சூறைக் காற்றுடன் மழை தொடர்ந்து பொழிந்து கொண்டிருந்தது. நண்பகற் பொழுதில் முரலாத தும்பிகள் இப்போது வந்து ஒலித்தன. அந்தப்புர மாடத்தில் இருக்கும் விளக்கு காற்றில் தடுமாற உயர்ந்த மரத்தில் இருந்து கூகை குழறியது. நிலை கொள்ளாது தடுமாற்றத்துடன் வானவ மாதேவி தலைமைத்தாதியின் அருகில் வந்து "என்னையறியாமல் எனக்கு உறக்கமுண்டாகிறது" என்று கூறி அவளின் மடியில் ஒரு குழந்தையைப் போல் சுருண்டு படுத்துக்கொண்டாள். தலைமைத் தாதி அவளின் தலையைப் பாசமாகக் கோதிவிட்டுக்கொண்டே "நம் சேவகர்கள் இரண கீர்த்தி, அமர்கழி இருக்கும் வரை நம் அரசரை எவராலும் எதுவும் செய்யமுடியாது. எதற்கும் கலங்காதே" என்று தைரியம் வளர்த்தாள். தூரத்தே துடி, முரசம், வளை, வயிர் இசைக்கருவிகள் முழங்கும் சப்தம் குறைந்துகொண்டே வந்தது. மழையில் நனைந்துகொண்டே வீரன் ஒருவன் அந்தபுர வாயிலில் அனுமதிக்காகக் காத்திருந்தான். இதைக் கேள்விப்பட்ட தலைமைத் தாதி போர் வீரனை அங்கேயே காத்திருக்கப் பணித்தாள். இந்தச் செய்தியை அந்தப்புரத்தில் இருக்கும் மற்ற எவரிடமும் கூறக்கூடாது என்று எச்சரிக்கை செய்து அனுப்பினாள். வானவமாதேவி துயில் கலைந்த பிறகு அவளிடம் பக்குவமாக இந்தச் செய்தியைக் கூறவேண்டும் என்று தீர்மானித்து அவளைக் காண வந்தாள்.

"மகாராணி அவர்களின் சமூகத்திற்கு என் சிரம் தாழ்ந்த பணிவான வணக்கங்கள். அரசரிடம் இருந்து முக்கியமான செய்தி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று அரசியின் அனுமதிக்காகக் காத்திருந்தான் அந்தப் படைவீரன். "கொழுவூர்க் கூற்றத்தின் பெருந்தலைவனாக இருந்த பெருமூர்த்தி என்பவன் இரண கீர்த்தி மற்றும் அமர்கழி இருவரையும் குத்திக்கொன்றுவிட்டான்". இதைக் கேட்ட வானவ மாதேவி திடுக்கிட்டுத் துயில் கலைந்து தான் கண்டது கனவு என்று அறிந்து கண் விழித்தபோது தலைமைத் தாதி அவள் முன் தயங்கியபடி நின்றிருந்தாள்.

(பராந்தகன் வீரநாராயணனுடைய 27வது ஆட்சியாண்டில், சேரமான் பெருமாள் நாயனார் (63 நாயன்மார்களில் ஒருவர்) பாண்டியருடன் போரிட்டார். சேரமானின் படைகள் கரைக் கோட்டை என்னும் கோட்டையை அழிக்கச் சென்றன. அதைக் காத்து எதிர்ப்படையினரைப் பாண்டியப்படை கொன்றன. இது மதில்போராகும். சேரவீரர்களில் ரணகீர்த்தி அமர்கழி என இருவரும் சேவகர்களாக இருந்தனர். பாண்டியப்படையின் பெருமூர்த்தி என்பவர்தான் இங்கு கொழுவூர்க் கூற்றத்தின் பெருந்தலைவனாக இருந்தவன். இவன் மேற்கண்ட சேவகர்களைக் குத்திக் கொன்றொழித்தான். ரணகீர்த்தியின் நினைவாக நடுகல் எடுக்கப்பட்டது). ■

**கடிதங்கள்**

**தொடர் - 3**

• கவிஞர் விக்ரமாதித்யன்



# நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு...

(கடந்த இரு இதழ்களில் கவிஞர் விக்ரமாதித்யனுக்குக் கவிஞர் நகுலன் எழுதிய பன்னிரண்டு கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டன. அந்தக் கடிதங்களின் காலத்திற்குள்ளேயே எழுதப்பட்ட, விடுபட்ட கடிதங்கள் இந்த இதழிலிருந்து தொடர்ந்து வெளியாகின்றன. விளக்கக் குறிப்புகள் கவிஞர் விக்ரமாதித்யனுடையன.

- ஆசிரியர்.)

• • •

**கடிதம் - 13**

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
4.8.82

நண்பருக்கு,

உங்கள் 28.7.82 கடிதம். நன்றி. எனக்கு நீங்கள் ஒரு உண்மைக் கவிஞர் என்பது பற்றி யாதொரு ஐயமுமில்லை. பேப்பர் திருத்தும் பளுவில் உங்கள் கவிதைபற்றிக் கோடுகாட்டும் அளவிற்குத்தான் கட்டுரை எழுதியிருக்கிறேன். இன்னும் விரிவாக எழுத வேண்டும் என்று ஆசை. தற்பொழுது முடியுமா என்பது சந்தேகம். முயன்று பார்க்கிறேன். எப்படியும் கட்டுரையை (முதலில் எழுதியதையே பின்னர் எழுதினால் அதையே) அனுப்பிவைக்கிறேன். எப்பொழுதாவது எனக்கு உங்கள் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற உத்வேகம் வந்தால் அதற்கு உங்கள் அனுமதி கேட்டுக்கொள்கிறேன்.

அதிகமாக மன உளைச்சல் கொள்ளாதீர்கள். உங்கள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

அன்புடன்
**டி.கே.துரைசாமி**

**விளக்கக்குறிப்பு:**

'ஆகாசம் / நீலநிறம்' தொகுப்புக்குறித்து விரிவான கட்டுரையே எழுதியுள்ளார், நகுலன்; கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் படிக்கப்பெற்ற அக்கட்டுரையை எனக்கு அனுப்பி வைத்திருந்தார்; கவிஞர் மீரா நடத்திவந்த 'அன்னம்விடுதூது' சிற்றிதழில் வெளிவந்திருக் கிறது; 'ஆகாசம் / நீலநிறம்' இரண்டாம் பதிப்பில் முன்னுரையாகவே இடம்பெற்றிருக்கிறது; 'காவ்யா' பதிப்பகம் வெளியிட்டுள்ள (தொகுப்பாசிரியர்: முனைவர் கி.நாச்சிமுத்து / 'காவ்யா' சு. சண்முகசுந்தரம்) 'நகுலன் கட்டுரைகள்' நூலிலும் உள்ளது.

என்னுடைய முதல் கவிதைத் தொகுப்புக்குப் பிறகும் இரண்டாவது / மூன்றாவது தொகுப்புகளுக்கு மதிப்புரை எழுதியிருக்கிறார், நகுலன்.

• • •

## கடிதம் –14

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
7.9.82

நண்பருக்கு,

உங்கள் அன்பான 4.9.82 கடிதம்.

நான் சென்னையில் 11.9.82 வருவேன். வந்த தினம் Shri R.Rajagopalan,144. Big St, Triplicane, Madras-5 தங்கியிருப்பேன். அன்று நாம் எங்கு சந்திக்கலாம் என்பதைத் தெரிவிக்கிறேன். திரு.வண்ணநிலவனை விசாரித்ததாகச் சொல்லவும். இருக்கிற அறிகுறிகளைப் பார்த்தால் என் ஒய்வுக் காலம் பிரச்னைமயமாகத்தான், சாதாரண அறிவைக்கொண்டு பார்த்தால், இருக்கும். நீங்கள் எழுதியிருப்பதுபோல் சகித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நானும் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.

அன்புடன்
**டி.கே.துரைசாமி**

**விளக்கக் குறிப்பு:**

ஆர்.இராஜகோபாலன்: கவிஞர் / விமர்சகர் /ஆங்கிலத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

• • •

## கடிதம் –15

18. Vijaya Lodge
Masilamani Road,
Balaji Nagar
Royapettah
Madras -14

நண்பருக்கு,

நான் இங்கிருக்கிறேன்.

இன்னும் இரண்டு நாட்கள் இருப்பேன். முடியுமானால் வாருங்கள். பிற பின்னர்.

அன்புடன்
**டி.கே.துரைசாமி**

**விளக்கக்குறிப்பு :**

1. வழமையாக, மடலில் தேதி குறிப்பிடுவார் நகுலன்; இந்தக் கடிதத்தில் இல்லை; அஞ்சலக முத்திரையிலும் தெளிவாகக் காணவில்லை; நான் போய்ப் பார்த்துப் பேசிவந்தது, நன்றாக நினைவில் உள்ளது; அதுதான் முதல் சந்திப்பு என்பதும் ஞாபகத்தில் இருக்கிறது; 13.9.82ல் எழுதிய கடிதம் இது என்றே அறிகிறேன்; மறுநாள் பார்த்திருக்க வேண்டும்.

'நகுலன் கடிதங்கள்' பற்றிய என் உரையில், மறந்துபோய், "இரண்டு ஆண்டு கழித்து 84ல்" என்றிருக்கும்; அது பிழை; இதுதான் சரி ; 7.9.82 கடிதத்தில் வரும் செய்தி சொல்லியுள்ளார்; 22.09.82 ல் அவர் எழுதியுள்ள கடிதம் இஃதை உறுதிப்படுத்தும் "கல்தச்சன் / உளிசத்தம்" வரிகள் மூலம்.

• • •

## கடிதம் –16

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
22.9.82

நண்பருக்கு,

இன்று வடலூரிலிருந்து இங்கு திரும்பி வந்தேன். அங்கு உங்களுடன் கழித்த ஒரு நாள் எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவம் : "கல்தச்சன் / உளிசத்தம்" இன்னும் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. 'ழ' நண்பர்களுடன் நமக்குப் புரியாத சில கவிதைகளை சர்ச்சை செய்வதும் அவற்றின் பரிணாமும் ஆழமும் எனக்குப் புலப்பட்டது.

அவர்களுடன் தொடர்பு உங்களுக்கு ஒரு எழுத்தாளன் என்ற வகையில் மிகவும் பயன் உடையதாக இருக்கும். அதே சமயம் உங்கள் விமர்சனத்தில் ஒரு பொருத்தம் இருக்கிறது.

அன்புடன்
**'நகுலன்'**

**விளக்கக்குறிப்பு;**

"கல்தச்சன் / உளிசத்தம்." என் கவிதைவரிகள்.

• • •

## கடிதம் –17

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
8.10.82

நண்பருக்கு,

நான் உங்களுக்கு அனுப்பிய 'ஐந்து' கிடைத்ததா? சாதாத் தபாலில் Certificate of

postingஇல் அனுப்பியிருந்தேன். கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

அன்புடன்
**டி.கே.துரைசாமி**

**விளக்கக் குறிப்பு:**

1. 'ஐந்து' : நகுலன், இராமாயணக் கதை மாந்தர்களைக் கொண்டு எழுதிய கவிதை நூல்; புதிய முயற்சி - கவிதையில்.

2. **Certificate of posting:** முன்னம், அஞ்சல் துறையில் இருந்துவந்த ஒரு முறை; உரியவரிடம் சேர உதவுபடியானது.

• • •

**கடிதம் –18**

**'நகுலன்'**

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
20.10.82

நண்பருக்கு,

வணக்கம்.

இந்தக் கடிதம் ஒரு வேளை உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம். சற்று ஆலோசித்துப் பார்த்தால் ஆச்சரியமடைய மாட்டீர்கள். 'ஸ்வரம்' 8-9ல் உங்கள் கவிதைகளைப் படித்தேன் - 'சுழற்சி' , 'எல்லாமே ஸ்வாமிகள்' இரு கவிதைகளுமே எனக்குப் பிடித்திருந்தன. அனுபவத்தின் அழுத்தமும், அதைப் பொதுப்படுத்துவதனால் வரக்கூடிய ஒரு கலைத்தன்மையும் அவற்றில் அமைந்திருக்கின்றன. எனது வாழ்த்துகள். எழுதிக்கொண்டே இருங்கள். உங்களில் உள்ள கவிஞன் அழுத்தமாகவே இருக்கின்றான்.

அன்புடன்
**'நகுலன்'**

• • •

**கடிதம் – 19**

**'நகுலன்'**

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
23.10.82

அருமை நண்பருக்கு,

வணக்கம். நேற்றுத்தான் (20.10.82!) இருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுக்கு எழுதியிருந்தேன். இன்று 'ழ'-22 கிடைத்தது. உங்கள் இரு கவிதைகளும் நன்றாக உருவாகியிருக்கின்றன. எனது இதயபூர்வமான வாழ்த்துகள். உங்களுடன் இலக்கியபூர்வமாக கடிதத் - தொடர்புகொள்ள விரும்புகிறேன். இந்த இதழில் வெளியாகியிருக்கும் சந்திரமூலரசன், எஸ். வைத்தியநாதன், பழமலய் ('பாட்டி') எனது மொழிபெயர்ப்பு பற்றிய (மொழிபெயர்ப்பில் சில அச்சுப்பிழைகள் இருக்கின்றன.) இவைபற்றி எழுதுங்கள்.

இங்கு பொருளாதார நிலையைச் சரி செய்துகொள்ள ஒரு ட்யூட்டோரியலில் சேர ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

எப்பொழுதும் உங்கள் வாழ்க்கை சந்தோஷமாக அமைய வேண்டும் என்று விரும்பும்

உங்கள்
நண்பன்
**'நகுலன்'**

**பின்குறிப்பு :** உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

**'நகுலன்'.**

**விளக்கக் குறிப்புகள் :**

1.நகுலனுக்கும் எனக்குமான நட்பு '82ல்; மஹாகவி பாரதி நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில், கவிஞர் மீரா தனது 'அன்னம்' பதிப்பகம் வாயிலாக நவகவிதை வரிசை என்று, அதுகாறும் தொகுப்பு வராத பத்து கவிஞர்களின் நூல்களை வெளியிட்டார்; அவற்றில் ஒன்று, எனது முதல் கவிதைத் தொகுப்பான 'ஆகாசம் / நீலநிறம்'; மொழிபெயர்ப்பாளர் மே.சு. இராமசுவாமி, ஏற்கெனவே, என் சில கவிதைகளை 'Indian Literature', 'sky lark' முதலான பத்திரிகைகளில் இடம்பெறச் செய்திருந்தார்; அவருக்கு ஒரு படி அனுப்பியிருந்தேன்; மே.சு.இராமசுவாமி, நகுலனிடம் படிக்கக் கொடுத்திருக்கிறார்; அவருக்குப் பிடித்துப்போய், அந்த வேளையில், கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பேச அழைக்கவே, 'ஆகாசம் / நீலநிறம்' குறித்தே கட்டுரை எழுதி வாசித்திருக்கிறார்; என் கவிவாழ்வில் கிட்டிய மிகப்பெரிய கௌரவம் இது; இப்படித்தான் எங்களுக்குள் ஓர் ஆத்மார்த்தமான உறவு அமைந்தது; நகுலனின் கடைசிக்காலம் வரை நீடித்தது அது;

அதற்கு,காரணம் அவருடைய உள்ளம்தானே தவிர, என் தகுதி எதுவுமில்லை.

2. ‘ழ’ : கவிஞர் ஆத்மாநாம் விரும்பி நடத்திவந்த கவிதைச் சிற்றிதழ்; குழு பாராமல், ஜனநாயகமாக, எல்லோருக்கும் இடமளித்திருக்கிறார்; ‘ழ’ கவிஞர்கள் / கவிதைகள் என்று சொல்லும்படி வளர்த்தெடுத்திருக்கிறார்; சீரிய கவிஞரான ஆத்மாநாம் செம்மையாகவே இதழைக் கொண்டுவந்தார்; ‘ழ’ கவிதைகள் என்றொரு தொகுப்பும் பின்நாளில் வந்துள்ளது - ‘விருட்சம்’ வெளியீடாக.

• • •

## கடிதம் –19

Tc 9 / 63 Golf Lings Road
Kaudiyar East
Trivandrum - 695003
27.10.82

நண்பருக்கு,

இன்று கிடைத்த ‘கணையாழி’ அக்டோபர் இதழில் வந்த உங்கள் நான்கு கவிதைகளையும் படித்துவிட்டேன். கவிதைகள், எவ்வளவு ஆழமாகவும் தெளிவாகவும் இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. நீங்கள் அன்று வாசித்துக் காட்டியதில் முதல் கவிதையில், “தன் அடையைக் / கொன்ற பாவம்” என்று இருந்தது. ‘அடை’யை, ‘நடை’யாகச் செய்த மாற்றம் கவிதையை பலவீனப்படுத்துகிறது என்றே நினைக்கிறேன்.

**அன்புடன்**
**‘நகுலன்’**

**விளக்கக்குறிப்பு:**

1.செவிப்புலன் வழியே கிட்டிய பொருள் வேறொன்றாகப் புரிந்துகொள்ளப்பட ஏது இருக்கிறது; கட்புலன் வாயிலாக எனில் சரியாயிருக்கும் ; நகுலனுக்கு இக்கவிதைபற்றிய விஷயத்தை எழுதியிருக்கிறேன்; அவர் பதில் போட்டிருந்தார் அதற்கு. கவிதை:

தன் நடையைக் கொன்ற பாபம்

நீயும் நானும்
நகல் செய்து
ராஜநடை போடலாம்தான்
(அப்படியொன்றும்
கஷ்டமில்லை
இப்படி
நிறையபேர் நடக்கிறார்கள்)
ஆனால்
தன் நடையை
கொன்ற பாபம்
சும்மாவிடுமா

• • •

(7.11.82இல் எழுதப்பட்டு டிசம்பர் 2019 தகவு இதழில் வெளிவந்த கடிதத்திற்கானது)

**விவரக் குறிப்புகள்:**

1. மாதவன்: ஆ.மாதவன். திருவனந்தபுரத்தில் உள்ளார். சிறுகதை / நாவலாசிரியர்; சாகித்ய அகாதமி விருது பெற்றவர். இவருடைய ‘கடைத்தெருக்கதைகள்’, ‘ஆ.மாதவன் சிறுகதைகள்’ மற்றும் ‘கிருஷ்ணப் பருந்து’, ‘புனலும் மணலும்’ முதலான நாவல்கள் முக்கியமான படைப்புகள் ஆகும்.

2. விமலாதித்தமாமல்லன்: சிறுகதை எழுத்தாளர்; மூன்று தொகுதிகள் வந்துள்ளன; விமர்சகரும்கூட.

3. பிரமிள் கதை : ‘காடன் கண்டது’ ஆக இருக்கலாம்.

4. ஈரடிக்கவிதை :

கவிதை 98

சிந்தை இருட்டு
சிந்தை செல்லும் வழி
தனி இருட்டு...

இந்த ரீதியில்
புதுமைப்பித்தன்
ஒரு கவிதை எழுதியிருக்கிறான்
இன்று எல்லாமே
வெளிச்சமாகத்தான் இருக்கிறது.

(‘ஸ்வரம்’, அக்டோபர் 1982)

இந்தக் கவிதைபற்றி நகுலனுக்கு எழுதியிருந்தேன். அதற்கான பதில்.

• கடைசி இரண்டு வரிகள் உள்ள பகுதி நைந்து சிதைந்து போயிருக்கிறது. அப்படியே விட நேரிடுகிறது.

• மெலிதான தாளில் எழுதப்பெற்ற மடல் இறுதிப் பகுதியும் அதுபோல ஆகியிருக்கிறது.

தொடக்கம் / இறுதி இரண்டுமே.

– தொடரும் ■

நூல் விமர்சனம்

• தோழன் பிரபா

# புதுக்கவிதையிலும் புதுவிதக் கவிதைகள்




கவிதைகளால் என்ன செய்துவிட முடியும்?

கவிதையால் எண்ணம் அழகுறும்.

எண்ணம் அழகானால் செயல் அழகாகும்.

செயல் அழகானால் வாழ்வு அழகாகும்.

வாழ்வு அழகானால் இந்தச் சமுதாயத்தையே அழகாக்க முடியும்.

ஆம்! ஒரு கவிதையால் தனி மனிதனின் மனதை மட்டுமல்ல.. இச்சமுதாயத்தையே அழகாக்க முடியும். அப்படியான முயற்சிதான் "அந்த வட்டத்தை யாராவது சமாதானப் படுத்துங்கள்" கவிதை நூல்.

கற்பனைகள் தோன்றிய நொடியிலிருந்துதான் ரசனைகள் தோன்றியிருக்கக்கூடும். ரசனைகள் தோன்றிய நொடியில்தான் கவிதைகள் தோன்றியிருக்கக்கூடும். உணர்வுகளையும் உயிரற்றவைகளையும் உயிர்ப்பிப்பது கவிஞர்களுக்கு எப்போதும் சாத்தியமாகிவிடுகிறது.

கவிஞர் கார்த்திக் திலகன் அவர்கள் நடைப்பயிற்சியின்போது சாலையிலுள்ள கட்டிடங்களைத் துணைக்கழைத்துச்செல்கிறார். கட்டிடங்களைக் கேக் துண்டுகளாக்கி உண்கிறார். இவரின் கவிதையில் அதிசயங்கள் பிரமாண்டங்கள் இயற்கையின் சூட்சுமங்கள் சாதாரணமாகிவிடுகின்றன.

நம்பிக்கைக்காக அனல் பூத்துக் கொந்தளிக்கும் வரியைப் போட்டுத் தாண்டுகிறார். சில நேரம் நெருப்பை விடவும் சுடுகின்ற வார்த்தைகளை சந்திப்போம்தானே...

ஒரு கவிதையில் மண் பச்சைபச்சையாகப் பேசுகிறது. பச்சைக்குழந்தை... பச்சைத்தமிழன் என்ற வார்த்தைகளில் சுத்தமான கலப்படமற்ற மாசு மருவற்ற என்ற பொருள் மறைந்துள்ளது. அது போல் பச்சையம் மண்ணுக்கு மட்டுமல்ல.. அனைத்திற்குமான பதிலியற்ற நிலை. இக்கவிதையைப் படித்து முடிக்கும்போது பச்சை நிறத்தின் மேல் இச்சை கூடி விடுகிறது. இன்னும் இன்னும் மண் பச்சையாகப் பேச வேண்டும். நாம் அதை வழிமொழிய வேண்டும்.

சொற்கிழி என்ற வார்த்தையைக் கண்டு பிடித்துள்ளார். என்ன செய்தால் சொற்கிழி கிடைக்கும். இந்நூலை வாசித்தால் கிடைக்கும். கவி பாடி பரிசு பெறலாம். ஆனால் இங்கே கவிதை படித்தாலே கிடைக்கிறது.

வார்த்தைகளை மோதிரமாக்கிப்போட்டு அழகு பார்க்கிறார். இந்நூலை படிக்கும் அனைவருக்கும் ஏதேனுமொரு ஆபரணம் நிச்சயம்.

கன்னி கழித்த இரவுக்கனவுகள் என்ற கவிதையில் 'கனவுகளின் மீது கால்களைப் போட்டபடியே தூங்கும்போது படிப்பவர்களின் உதட்டோரத்தில் புன்னகை வந்தால் நீங்களும் கனவுகளின் மேல் காலைப் போட்டபடியே தூங்கியுள்ளீர்கள் என்று அர்த்தம்'. எனக்குப் புன்னகை வருகிறது. மனிதனுக்குக் கிடைத்த ஆகச்சிறந்த கொடை கனவு.

தான் சொல்ல வந்ததைப் பொருள் மாறாமல் வேறு ஒரு பொருளின் மீது ஏற்றி, படிப்பவரிடம் கடத்துவதில் கவிஞர் வெற்றி கண்டிருக்கிறார்.

காலத்தைப் பழக்குகிறார் நண்பனுக்காக... காத்திருக்க வைக்காத நட்புமில்லை காதலுமில்லை. அதுவே காத்திருக்கும் இடம் பூங்காவாக இருந்தால்.... நண்பனுக்காகக் காத்திருப்பதை அனுபவிக்க வேண்டுமானால் நீங்கள் இந்தக் கவிதையை நினைவுகூருங்கள். போதும். நண்பனுக்காகக் காத்திருந்து காத்திருந்து டைனோசரின் காலத்திற்கே சென்றுவிடுகிறார். அங்கே நட்பு காத்துக்கொண்டிருக்கிறது... துயரத்திற்குச் செம்பழுப்பு நிறத்தையும் மகிழ்ச்சிக்கு அடர் மஞ்சள் நிறத்தையும் பூசி ஒரு பறவை செய்கிறார். அந்தப் பறவையை ரசிக்கிறார். அதுதானே வாழ்க்கை. அவ்வளவுதானே வாழ்க்கை.

இன்பமோ துன்பமோ ரசிக்கத் துவங்கி விட்டால் அதை விடச் சிறந்த ஞானமில்லை..

மறதியைக் கண்டதும் ஓடிப்போய் அதன் கால்களைக் கட்டிக்கொள்ளுகின்றன கவலைகள். இனி என் கவலைகளை மறதி பார்த்துக்கொள்ளும் என்கிறார்.

இனி என் குழந்தைகளை மறதி பார்த்துக் கொள்ளும் என்ற வாக்கியமே அதனுள் மறைந்துள்ளதாக எண்ணுகிறேன். கவலை களையும் குழந்தைகள் போல் பாவிக்கிறார். மறதி ஒரு கருணைத்தாய்.

பற்களைப் பளிங்கு லிங்கமென உருவகப்படுத்தி உண்பதையே அபிஷேகம் செய்வதாகச் சொல்கிறார்...

இப்படி நூல் முழுக்க தன் வித்தியாசமான சிந்தனையால் நிரப்பியுள்ளார். எப்படி எந்த நொடியில் இப்படித் தோன்றியதோ?

மச்ச புராணக் கவிதையில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு ஒரு குவளை சொற்களைக் கொடுத்து உபசரிக்கிறார். கவிஞர் வீட்டிலிருந்து வேறென்ன வேண்டும். ஒரு குவளை பருகிவிட்டு மறு குவளை நீட்டும்போதும் நிச்சயமாகக் குவளை நிரம்பிவிடும்.

காட்சி தந்த லிங்கம் என்ற கவிதையில் அர்ச்சனையின்போது பூக்கள் தீர்ந்த பின்பு நாயனார் விரல்களைப் பூக்களாக்கிப் பிய்த்தெறிகிறார். பத்தாவது விரலையும் பிய்த்தெறிய முயன்றபோது தடுத்தாட்கொண்டு காட்சி தருகிறார் கடவுள். இந்தக் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். கண்ணப்ப நாயனாரின் செயலுக்குச் சற்றும் குறைவில்லாதது இக்கவிதை. மனதை ஒருநிலைப்படுத்தி ஒரு செயலைச் செய்வதற்கு ஆகச்சிறந்த எடுத்துக் காட்டு.

ஒளிக்குச் சதை வடிவம் உண்டா? உண்டு, அதுதான் கண்கள் என மிகச் சாதாரணமாகச் சொல்லிவிடுகிறார். அதனுள் புதையல் போல் புதைந்திருக்கிறது ஒளி.. ஒளி வீசும் கண்களைச் சந்திக்காதவர்களுண்டா? இமை மூடியபொழுது விழிகளுக்குள் ஒளிந்துகொள்ளாத ஒளியேது? இமை திறந்தபோது விலகாத இருளேது..? ஒளியை நம் மீதும் பூசுகிறார். ஒளியெல்லாம் சந்தனமாய் மணக்கிறது.!!

தலைப்புக் கவிதையில் மையத்தை விட்டு விலகிச் செல்லும் வட்டம் கடவுளை விடவும் பெரிதாகிவிடுகிறது. அந்த வட்டத்தைச் சமாதானப்படுத்த என்ன செய்யலாம்? வாழ்க்கையே ஒரு வட்டம்தானே... தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொள்ளும் என்று நம்புவோம்.

இந்நூல் முழுக்க முழுக்க கவிதைகளால் நிரம்பி உள்ளது. கவிதைகள் மாய எதார்த்தங் களால் நிரம்பியுள்ளன. கவிஞரின் விரல் பிடித்தே கரையை அடைந்துவிட வேண்டும்.

கோபத்தில் கன்னத்திலிருந்து முத்தங்களைப் பிய்த்தெறிகிறாள் மகள். முத்த வளையங்களுக்குள் வானவில் பறவை நுழைந்து செல்கிறது என்றொரு கவிதை...

முத்தங்களை நிராகரித்தல் எவ்வளவு கொடுமை, எவ்வளவு பெரிய தண்டனை, அப்பாவுக்கு. ஆனாலும் கோபம் அழகான சமாதானத்தில் முடிகிறது.

காண்கின்ற காட்சிகள் கவிதையாக ஏன் மாறுகிறது? ஒரு நிகழ்வு அதைச் சார்ந்த உணர்வுகளின் தாக்கம் அது ஏற்படுத்தும் விளைவுகள் எல்லாம் சேர்ந்து கற்பனையுடன் காட்சி கவிதையாகிவிடுகிறது.

ருசி என்ற கவிதையில் மௌனங்கள் ஓசையெழுப்புகின்றன. ஊடலின் மொழி மௌனம். எல்லா மௌனமும் சம்மதமாகி விடுவதில்லை. மௌனத்தை மொழிபெயர்க்க யாரால் முடியும். அந்த மௌனத்தைத்தவிர... மௌனத்தின் மேல் ஆதிக்கம் செலுத்த எல்லோராலும் முடிவதில்லை. ஆனால் கவிஞர் மௌனத்தின் வில்லைகளை வாயிலிட்டுச் சுவைக்கிறார்.

சுவர் என்ற கவிதையில் உளவியல் பேசுகிறார். இணையர்களுக்கு இடையே சுவர்கள் எழும்புவதும் அதை அவர்களே இடிப்பதும் இயல்புதானே... நல்ல புரிதல்கள் ஏற்பட்ட பின்பும் இனம் புரியாத ஒரு மெல்லிய சிறிய மிகச்சிறிய நூலளவு இடைவெளி இன்னும் இன்னும் உறவை வலிமையாக்கும். அப்போது எந்தச் சுவரும் தடுக்கப் போவதில்லை. இக்கவிதைக்குச் சுவர் இருந்தால்தான் சித்திரம் என்ற பழமொழி மிகப்பொருத்தம்.

புணர்ச்சி விரும்பாத வாடிக்கையாளனை ஒரு பரத்தை அணைப்பதைப் போல என்ற ஒரு வரி வருகிறது. சுவர்களுக்கு என்ன காதா இருக்கிறது நாம் ஏன் சுவர்களிடம் பேசுகிறோம்? சுவர்களுக்கு என்ன வாயா இருக்கிறது? மறுத்துப் பேச. ஆனாலும் ஆகச்சிறந்த துணையின் அரவணைப்பை, தலை கோதலை, மடி மீது தலை சாய்த்துக்கிடப்பதைப் போன்ற உணர்வு வருகிறதா இல்லையா? புணர்ச்சி விரும்பாதவனுக்கு அரவணைத்தலே சுகம். அரவணைத்தலே ஆறுதல். புணர்ச்சி தராத அன்பை அரவணைப்பு தரும். தனிமையில் சுவரிடம் மார்போடு அரவணைத்துப் பேசித்தான் பாருங்களேன்....

கடலில் மிதந்து செல்லும் நிலவுடன் தனிமையைத் துணைக்கனுப்பி வைக்கிறார் கவிஞர். உடன் காலமும் பயணிக்க அங்கே தொடங்குகிறது கவிதை. ஓய்வில்லாத பயணத்தில் கவிதையாகும்போதுதான் நின்று ரசித்துவிட்டுச் செல்கிறது. நாம் நம்மைக் கவிதையில் புதுப்பித்துக்கொள்வதைப்போல....

இருள் எதனுடைய நிழல்? என்று கேள்வி கேட்டு அழகான சிந்தனையைத் தூண்டுகிறார். பகலின் நிழலாகத்தானே இருக்க முடியும். இரண்டையும் பிரிக்க முடியாது. ஒன்றின் எதிர்ப் பதமல்ல இன்னொன்று. அவை ஒன்றாகவே இருப்பவை. ஒன்றாகவே பயணிப்பவை. இருள் என்பது மிகக்குறைந்த வெளிச்சம் என்ற கூற்று எவ்வளவு உண்மையோ அது போல வெளிச்சம் என்பது மிகக்குறைந்த இருள். அணைந்த தீபத்தில் இருள் எரிகிறது. அது அவளின் கருத்த உதடு போலிருக்கிறது என்கிறார். எவ்வளவு அற்புதமான கற்பனை. இனி அணைந்த தீபத்தைப் பார்க்கும்போதும் ரசிப்போம். இவ்வாறு இந்நூல் முழுக்க அழகியலை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்.

மனதைத் தூண்டிலில் மாட்டி கடலில் வீச கடலே சிக்கிக்கொள்கிறது. பலூனில் நிரப்பிய காற்று மூச்சு திணறி இறந்தவுடன் தாய்க்காற்று செம்பருத்திச் செடியை ஆட்டி செம்பருத்தி மலர்களால் அஞ்சலி செலுத்துகிறது. ஆனால் குழந்தைக் காற்றைக் கொன்ற சிறுவன் சுவாசிக்கத் தடையேதுமில்லை. இப்படித்தான் ஒவ்வொரு கவிதையிலும் புதுப்புது வடிவங்கள் உருவாக்கங்கள் உள்ளன. நாம் அதைப் படிக்கும்போது நமக்கும் புது வித வாசிப்பு வாய்க்கிறது. வாருங்கள் வாசிப்போம்.

ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பித்த முத்தம் திங்கள்கிழமைக்குள்ளும் நீள்கிறது. மிக நீண்ட வரலாறு கொண்ட முத்தத்திற்குக் கவிஞர் இரு நாட்கள்தான் தந்துள்ளார். மிகக்குறைவான காலம்தான்.

மற்றொரு கவிதையில் கணவனுக்கும் மனைவிக்குமான உறவின்போது அண்டை வீடுகளை வைத்துச் சதுரங்கம் விளையாட குழந்தையொன்று சத்தம் கேட்டு அழுகிறது. அதன் தாய் எழும் முன் பாலூட்டிச் சமாதானப்படுத்துகிறாள். பின்பு தொடர்கிறது

ஆட்டம். பெண் தோற்பதாக நடிக்க அதைத் தெரியாதது போல் ஆண் நடிக்க வீடுகளெல்லாம் உறங்குவதாக நடிக்கின்றன. பெண் ஏன் தோற்பதாக நடிக்க வேண்டும்? அவள் தன்னால்தான் வெற்றி பெற வேண்டும் என நினைக்கிறாள். அந்த வெற்றியில் அவளும் இருக்க வேண்டும் என எண்ணுகிறாள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் பெண் இருக்கிறாள் என்பது இதுதானா?

யார் வெற்றி பெற்றார்கள் என்பதை விட யாருமே தோற்கவில்லை என்பதுதான் முக்கியம். மேலும் வீடுகள் உறங்கினாலும் சுவர்கள் விடுவதில்லை. இரவில் சுவர்களுக்கும் காதுண்டு எனச் சும்மாவா சொன்னார்கள்.

தெரியாது என்ற கவிதையில் மேசை நாற்காலி பேனா பூவாளிகளிடமெல்லாம் அதனதன் பெயர் கேட்க அவைகள் தெரியாது என்கின்றன. "லட்சுமி ஸ்டார்ட் ஆகிடு" என வாகனத்திடம் சொல்வது போலதான் இதுவும். அது வேறொன்றுமில்லை.. நாம் பயன்படுத்தும் பொருட்களின் மீது நம்மையே அறியாமல் ஒருவித ஈர்ப்பு ஏற்படுவதன் விளைவுகள்தான் இவை. மேசையும் நாற்காலியும் எந்த மரமோ... தன்னைக் கிளைகளாக நினைத்துக்கொள்ளுமா? அவைகளுக்கு மேசை நாற்காலி பேனா எனப் பெயர் வைத்தது தெரியவில்லை போலும்.

அவைகளுக்குப் பெயர் சூட்டு விழாதான் நடப்பதில்லையே. கனவில் கவிஞருக்கும் அவரின் பெயர் தெரியவில்லை என்கிறார். அப்படித்தான் சொல்ல வேண்டும். பெயர்ச்சொல் காரணத்தை விட சில நேரம் செயல்சொல் காரணங்கள் தெரியாது என்ற இடத்தை நிரப்பிவிடுகின்றன...

பரவசம் என்ற கவிதையில் அதே வானம் அதே நிறம். ஆனால் சன்னலின் வழியாகப் பார்க்கும்போது மட்டும் ஏன் பரவசப் படுத்துகிறது? அது சன்னலின் அளவிற்கான வானம். நான் மட்டும் கொண்டாடும் வானம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அதாவது ரகசியத் தனி வானம். ஒவ்வொரு சன்னலும் ஒரு வானத்தை உருவாக்குகிறது. சரி வானம் என்ன நினைக்கும்? அந்தச் சன்னலில் தான் மட்டும்தான் தெரிவேன். வேறு எதுவும் தெரியப்போவதில்லை என்ற உணர்வே ஆனந்தத்தை ஏற்படுத்தும். கோவிலில் கடவுளிடம் தன் வேண்டுதலைத்




தனியாகச் சொல்வதைப்போலத்தான் இதுவும். தினமும் வானத்தைப் பார்ப்போம். ஆனால் எப்போதாவதுதான் சில நிமிடங்கள் தொடர்ந்து வானத்தைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு என்போம்.

சன்னலின் வழியே நம்மைப் பார்க்கும் வானத்திற்கு நாம் மட்டும்தான் தெரிவோம். அதுதானே பரவசம். வானத்திற்கான தொடர்பு எண் சன்னல்.

மற்றொரு கவிதையில் குழந்தையின் அழுகையை நிறுத்த, தாய் இதழோடு இதழ் பொருத்துகிறாள். குழந்தைக்கு இப்போது தாயையும் சமாதானப்படுத்தவேண்டிய பொறுப்பு சேர்ந்துவிடுகிறது. இவ்வாறு பக்கத்திற்குப் பக்கம் நம்மை மெஸ்மரிசம் செய்துகொண்டேயிருக்கிறார்....

மரபுக்கவிதையோ புதுக்கவிதையோ இன்ன பிற கவிதை வடிவங்களோ அந்தந்தக் கால கட்டங்களில் மொழி தம்மைப் புதுப்பித்துக் கொள்வதைப்போல, செப்பனிட்டுக் கொள்வதைப்போலப் படைப்பாளிகள் அவ்வப்போது தங்கள் எழுத்துக்களை, படைப்புகளைப் புதிய புதிய தளங்களுக்கு எடுத்துச் சென்று விடுகின்றனர். அந்த வரிசையில் கவிஞர் சேர்கிறார். வாருங்கள் இந்நூலை வாசித்துப் புதுக்கவிதையிலும் புதுவிதக்கவிதையைக் கொண்டாடுவோம். ■

நோபல் இலக்கியங்கள் அறிமுகம்

தொடர் - 16

இலக்கியத்தின் தோரண வாயில்

• தா. ஜோ. ஜூலியஸ்

# ஹெரால்ட்டு பிண்ட்டர்



“உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார்” எனச் சொல்லுமளவுக்கு ஆங்கில நாடக உலகின் அச்சாணியாக விளங்கியவர் ஹெரால்டு பிண்ட்டர் ஆவார். நாடக அசிரியர், திரைக்கதை ஆசிரியர், இயக்குனர், நடிகர் எனப் பன்முகம் கொண்ட இவர் கவிதை கட்டுரைகள் எழுதுவதிலும் சிறந்து விளங்குபவர். அக்டோபர் 10, 1930இல் இவர் பிறந்தார். சாதாரணமாக எழுபது வயது பூர்த்தி அடைந்துவிட்டால் ஆடி அடங்கியவர்களாகப் பெரும் படைப்பாளிகள் சோர்ந்துவிடுவதைக் காண்கிறோம். ஆனால் பிண்ட்டர் இதற்கு விதிவிலக்கு போல், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக எழுத்துலகில் கொடி கட்டிப் பறக்கின்றார். அவரது மிகப் பிரபல நாடகங்களில் ‘பிறந்த நாள் விருந்து’ (1957), ‘வீடு திரும்பல்’ (1964), ‘காட்டிக் கொடுத்தல்’ (1978) போன்றவை திரைக்கதைக்கென அவரால் மேலும் பரிமளிக்கச் செய்யப்பட்டவை ஆகும். திரைக்கதைகள் வரிசையில், ‘வேலைக்காரன்’ (1963), ‘இடைத் தரகன்’ (1971), ‘ஃப்ரென்சு லெஃப்டினெண்டின் காதலி’ (1981), ‘வழக்கு’ (1993) மற்றும் ‘புலனாய்பவன்’ (2007) ஆகியவையும் அடங்கும். இந்த நாடகங்களில் மட்டும் அல்லாது அவர் மேடைகளில், வானொலி, தொலைக் காட்சி போன்றவற்றில் ஒலிபரப்பானவற்றை இயக்கியும், நடித்தும் உள்ளார்.

கிழக்கு இலண்டன் நகரில் ஹாக்னீ எனும் ஊரில் பிறந்த இவர், ஹாக்னீ டவுன்ஸ் பள்ளியில் படித்தார். மிக நன்றாக ஓடுவதும், கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரருமாய் இருந்த இவர் பள்ளி நாட்களிலேயே நாடகங்கள் எழுதி நடிக்க ஆரம்பித்துவிட்டார். ராயல் அகாடெமியில் நாடகக் கலையினைப் பயின்ற இவர் அந்தப் படிப்பினை முடிக்காமலே விட்டுவிட்டார். பின்னாளில் இவர் பேச்சு நாடகம் பயில்விக்கும் மத்தியப் பள்ளியில் சேர்ந்து இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தில் பணிபுரியலானார். 1956இல் விவியன் மெர்சண்ட் என்பவரை மணந்ததில் டானியேல் எனும் மகன் 1958இல் பிறந்தார். பின்னர் தனது மனைவியை விட்டுவிட்டு லேடி ஆண்டனியா ஃப்ரேசர் என்பவரை 1980ஆம் ஆண்டு மணம் புரிந்தார்.

1957ஆம் ஆண்டில் “அறை” எனும் நாடகம் தயார் ஆனபொழுது நாடக ஆசிரியராக இவர் உருவெடுத்தார். இவரது இரண்டாவது நாடகம் ஆகிய ‘பிறந்த நாள் விருந்து’ எட்டு முறை அரங்கேறிய பிறகு இழுத்து மூடப்பட்டது. ஆயினும் ஹெரால்டு ஹாப்சன் என்பவரால் மிகவும் பாராட்டப்பெற்று இருந்தது. அவரது முந்தைய படைப்புகள் ‘அச்சுறுத்தும் காமெடி’ என இகழப்பட்டன. ஆயினும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியும் இயக்கியும்

வந்துள்ளார். ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள இவருக்கு 2005ஆம் ஆண்டில் நோபல் பரிசும் பிரெஞ்சு அரசின் லீஜன் டி ஹானர் பரிசு 2007லும் வழங்கப்பட்டன.

டிசம்பர் 2001ஆம் ஆண்டில் சுவாசக்குழாய்ப் புற்றுநோய் என மருத்துவர்கள் கண்டுபிடித்துக் கூறியபோதும், மிகவும் மோசமான ஆரோக்கிய நிலையிலும் ஹெரால்டு நடிப்பதைக் கைவிடாமல் சாமுவேல் பெக்கெட்டின் க்ராப்பின் இறுதி நாடா எனும் தனி மொழி நாடகத்தில் ராயல் கோர்ட் தியேட்டரின் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்காக அக்டோபர் 2006இல் நடித்தும் வந்தார். ஆயினும் கல்லீரல் புற்றுநோயினால் 2008ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24ஆம் நாள் இவர் மறைந்தார்.

தனது 12ஆம் வயதிலேயே பிண்ட்டர் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். 1947ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் இவரது கவிதை ஹாக்னீ டவுன்ஸ் பள்ளியின் ஆண்டு மலரில் முதல்முறை வெளியிடப்பட்டது. பின்னர் 1950 இல் இலண்டன் கவிதைகள் எனும் அமைப்பின் மூலம் இவரது கவிதைகள் ஹெரால்டு பிண்ட்டர் என்ற புனைபெயரின் கீழ் வெளிவந்தன. 1954இலிருந்து 1959 வரை டேவிட் பேரன் என்ற நடிகராகப் புனைபெயரில் 20க்கும் மேற்பட்ட கதாபாத்திரங்களில் கிங்ஸ் தியேட்டர், ஹாம்மர்ஸ்மித்தில் நடித்து உள்ளார். டொனால்டு உல்ஃபிட் கம்பெனிக்காகவும் நடித்த இவர் நிதி பற்றாக்குறையினால் வெயிட்டராக, தபால்காரராக, கூலிக்கு அடிப்பவராக, பனி கழுவி விடுபவராக வேலைகள் செய்தாலும் கவிஞன் எழுத்தாளன் ஆக வேண்டும் எனும் ஆசையைக் கனலாக நெஞ்சுக்குள் வைத்து இருந்தார்.

பிண்ட்டரும் அவரது மனைவியாகிய மெர்ச்சண்டும் 1969இல் அண்டனியா ஃப்ரேசரைச் சந்தித்தனர். மூவரும் சேர்ந்து தேசிய காலரி நிகழ்ச்சி ஒன்றில் மேரி ஸ்காட்ஸ் அரசி எனும் நாடகத்தில் நடித்து வந்தனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு ஜனவரி 1975இல் ஃப்ரேசரும் பிண்ட்டரும் காதலிக்க ஆரம்பித்து விட்டனர். இதனால் திருமண உறவிற்கு அப்பாற்பட்ட உறவில் இருவரும் இருந்து வந்தனர். பின் பிரிந்து ஃப்ரேசரை மணந்து பல கட்டங்களைக் கடந்து ஹாலந்து பார்க் எனும் ஃப்ரேசரின் வீட்டில் தங்கி இருந்தனர். அங்குதான் காட்டிக் கொடுத்தல் எனும் நாடகத்தை எழுதினார். இந்தத் திருமணம், மகனின் பிரிவு ஆகியவற்றை அனுபவமாக்கி, அவர் இதுவரை வெளிவராத தனது குணச்சித்திரத்தை அடக்கிய “நோ மேன்ஸ் லாண்ட்'' எனும் நாடகத்தில் மிக உணர்வுபூர்வமாக வெளிக்கொணர்ந்து இருந்தார்.

அரசியலில் மிக மிக ஈடுபாடுகொண்டு இருந்த இவரது படைப்புகள் குறிப்பாகக் கட்டுரைகள் இவரது கருத்துக்களை உள்ளடக்கிப் பெரும் பான்மை கொள்கைகளை எதிர்ப்பனவாக அமைந்து இருந்தன. ஆயினும் அணு எதிர்ப்புக்கும், தென் ஆப்பிரிக்க இனவெறிப் போராட்டங்களுக்கும் குரல் கொடுத்தவர்களில் இவரை முதன்மையானவர் என்றே கூற வேண்டும். போர்களை அறவே வெறுத்த இவர் 1991இல் வளைகுடா போரினையும் 1999இல் யூகோஸ்லாவியாவில் கொசோவா போரில் குண்டு வீசியதையும் எதிர்த்துக் குரல் கொடுத்தார். பாலஸ்தீனிய இலக்கிய விழாவுக்குப் பாதுகாவலர் ஆகவும் விளங்கினார்.

இவரது நடிப்புத் தொழிலும் 50 ஆண்டுகளுக்கு மேல் எனக் கூறலாம். நடிகராக இயக்குனராக நாடக ஆசிரியராக இருந்தும் தான் நடிக்கும் கதாபாத்திரங்களோடு ஒன்றித்துப் போகும் இவர் வானொலி, தொலைக்காட்சி நாடகங்களில் ஏராளமான விசிறிகளைக் கொண்டிருந்தார். அவரது நாடகங்களை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்களில், உதாரணமாக, வேலைக்காரன் நாடகத்தில் பெரும் தனவானாக, விபத்தில் சிக்கிய திருவாலர் பெல் எனும் பாத்திரமாக, புத்தகக்கடைக்கு வரும் வாசிப்பு நிறைந்த நபராக டர்ட்ல் டைரி எனும் படத்திலும் தோன்றி உள்ளார்.

1970களில் இவர் இயக்குனர் எனப் பரிமளிக்க ஆரம்பித்துவிட்டார். தேசியத் தியேட்டரின் அசொசியேட் இயக்குனராகப் பணி புரியும்போது 50க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியும் இயக்கியும் உள்ளார்.

இவரை நாடக ஆசிரியர் என்றே இலக்கிய உலகம் அடையாளம் காண்கிறது. ஏனெனில், 29 நாடகங்களையும் 15 குறு நாடகங்களையும், மேடை மற்றும் வானொலிக்கான இரு பெரும் நாடகங்களையும் இவர் படைத்து உள்ளார். "வீடு திரும்புதல்" எனும் நாடகத்திற்கான சிறந்த நாடகம் எனும் பரிசினை வென்றதுடன் பலப்பல அமெரிக்க விருதுகளும் விருதுகளுக்கான பரிந்துரைகளும் இவர் பெற்று இருந்தார். இவரது நாடக முத்திரை "பிண்ட்டரெஸ்க்" எனும் தனிப் பெயரில் அழைக்கப்பட்டது. இதனை வெறுத்து இந்தப் பொருளற்ற பெயரால் தனக்குப் பயன் ஏதும் இல்லை என இவர் கூறி வந்தாலும் இவர் நாடக உலகின் தந்தை என்றே இங்கிலாந்தில் கருதப்பட்டார்.

அச்சுறுத்தும் காமெடிகள் என (1957-1968) இவரது படைப்புகளின் காலகட்டம் குறிப்பிடப்படுகிறது. இவரது முதல் நாடகம் ஆகிய அறை எனும் நாடகத்தை இவர் மூன்றே நாட்களில் எழுதி முடித்தார். நம்பிக்கை மிக்க ஒரு இளம் எழுத்தாளர் என இவரை நம்பி மைக்கேல் கார்டன் என்பவர், "பிறந்த நாள் விருந்து" என்ற இவரது அடுத்த நாடகத்தைத் தயாரிக்க முன் வந்தார். அச்சுறுத்தும் காமெடிகள் எனக் கூறக் காரணம் என்னவெனப் பார்க்கின், ஆரம்பத்தில் நாடகங்கள் யாவிலும் அப்பழுக் கற்ற நபர்கள் ஆகத் தோன்றுபவர்கள் இறுதியில் விவரிக்க முடியாத சிக்கல் பேர்வழிகளாகச் சித்தரிக்கப்பட்டதே ஆகும்.

1958இல் ஹாட் ஹவுஸ், 1959இல் ஊமை வெயிட்டர், 1960இல் அறை, தி.கேர்டேக்கர் என வரிசையாக நாடகங்கள் இவரை உச்சிக்குத் தள்ளிச் சென்றன. வானொலிக்காக இவர் எழுதிய ஒரு நைட் அவுட், பிறந்த நாள் விருந்து போன்றவை மேன்மேலும் புகழின் உச்சிக்கு இவரைத் தள்ளின.

நினைவு நாடகங்கள் (1968-1982) எனச் சொல்லும்படியான இவரது நினைவுகளை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் ஆகிய லாண்ட்ஸ்கேப் (1968), சைலன்ஸ் (1969), நைட் (1969), ஓல்டு டைம்ஸ் (1971), நோ மேன்ஸ் லாண்ட் (1975), தி ப்ரொஸ்ட் ஸ்க்ரீன் ப்லே (1977), பிட்ரேயல் (1978), ஃபாமிலி வாய்ஸஸ்



(1981), விக்டோரியா ஸ்டேஷன் (1982), ஏ கைண்ட் ஆஃப் அலாஸ்கா (1982) போன்றவை மிக முக்கிய நாடகங்கள் ஆகும்.

2011 செப்டம்பர் திங்களில் அம்பாசடர் தியேட்டர் க்ரூப் எனும் பிரிட்டிஷ் தியேட்டர் உரிமையாளர்கள் இலண்டனில் உள்ள பாண்டன் தெருவில் இருக்கும் காமெடி தியேட்டரினை ஹெரால்டு பிண்ட்டர் தியேட்டர் எனப் பெயர் மாற்றம் செய்து அறிவித்தனர். இதற்குக் காமெடி தியேட்டர்களின் வரலாற்றில் பிண்ட்டரின் படைப்புகள் வாழ்ந்துகொண்டு இருப்பதால் இந்தப் பெயர் மாற்றம் தகுதியான ஒன்று எனப் புகழாரம் சூட்டினர்.

அக்டோபர் 13, 2005இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கிய ஸ்வீடிஷ் அகாடமி, "இவரது நாடகங்களில் அடிமைத்தனத்தின் மூடிய அறைகளைத் திறந்து அதன் அவலங்களை ஆழ அகலங்கள் ஆக அம்பலப்படுத்தியவர்" என்று பாராட்டிக் கூறியது. தனக்கு நோபல் பரிசு கிடைத்து உள்ளது எனக் கூறியபோது "அப்படியானால் நான் இறப்பிலிருந்து உயிர்த்து விட்டேன்" எனப் புத்துயிர் பெற்றுக் கூறினார். தனது நோபல் விருது சொற்பொழிவினை மருத்துவமனையில் இருந்துகொண்டே ஆற்றும் இவர் அதற்குக் கலை உண்மை மற்றும் அரசியல் என்ற தலைப்பிட்டு ஆற்றியுள்ளார். ஈராக் போரில் அமெரிக்கா தலையிட்டது தவறு எனத் தைரியமாக கூறிய அந்தச் சிங்கம், "கவிஞன் அமைதியாக நிற்கிறான், நின்று இதர மனிதர்களின் கவனத்தை ஈர்க்காததை அவன் கவனிக்கிறான்" எனும் உண்மையை உலகுக்கு உணர்த்தினார். ■

• த. திருப்பதி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

# மார்க்ஸ் பிறந்தார்



ஆசிரியர் : ஹென்றி வோல்கவ்
தமிழில் : நா. தர்மராஜன், எம்.ஏ.
வெளியீட்டகம் : அலைகள் வெளியீட்டகம், சென்னை.
பதிப்பு : இரண்டாம் பதிப்பு - 2017
விலை : உரூ. 160

“தத்துவஞானிகள் உலகத்துக்குப் பல்வேறு வழிகளில் விளக்கமளிப்பதை மட்டுமே செய்து வந்திருக்கிறார்கள். ஆனால், அதை மாற்றுவதுதான் இன்று முக்கியமாகும்” என்பது மார்க்சின் புகழ்பெற்ற வரிகளாகும். மனிதகுல விடுதலைக்காக மகத்தான வழிமுறைகளை வாழ்நாள் முழுவதும் தேடி மார்க்சியம் எனும் மாபெரும் தத்துவத்தை உலகிற்கு அளித்தவர் களான கார்ல் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்சின் வாழ்க்கை வரலாற்றினை அறிதல் என்பது காலத்தின் தேவையாகிறது.

தன் மொழிக்காக, இனத்திற்காக, நாட்டிற்காக, சிந்தித்த தலைவர்கள், தத்துவஞானிகள் உண்டு. உலகம் முழுவதுக்குமாய்ச் சிந்தித்த ஒரு தத்துவஞானி உண்டெனில் அவர்தான் கார்ல் மார்க்ஸ். பாட்டாளி வர்க்கத்தின் ஆசான், அரசியல் பொருளியலாளர், புரட்சியாளர், கணிதவியலாளர் எனப் பன்முகங்களுக்குச் சொந்தக்காரரான மார்க்சைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பும் ஒருவர் வாசிக்க வேண்டிய ஆரம்ப நூல்களுள் ஒன்றுதான் ‘மார்க்ஸ் பிறந்தார்’எனும் இப்புத்தகம்.

மார்க்சையும் மார்க்சியத்தையும் ஏன் நாம் அறிந்துகொள்ள வேண்டும்? மார்க்சுக்கும் நமக்கும் என்ன உறவு? இதனால் ஏற்படும் பயன் என்ன? எனக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே செல்பவர்களுக்கு நமது பதில் ஒன்றுதான். இனி மார்க்சின் பெயரை உச்சரிக்காமல் எந்த விடுதலையும் சாத்தியமில்லை. உலகமயமாதல், ஏகாதிபத்தியம், தாராளமயம் மற்றும் முதலாளித்துவ வளர்ச்சியினால் பல்வேறு துன்பங்களை இன்று நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒவ்வொருவரும் அனுபவித்துவருகிறோம்.

வாழ்க்கை என்றால் என்ன? நாம் யாருக்காக வாழ்கிறோம்? நமது விதியைத் தீர்மானிப்பவர்கள் யார்? நமக்குள் வந்திருக்கும் இன்னல்கள், போட்டி, பொறாமை, போலித்தனங்கள், வன்மம், பகை, நம்பிக்கை, காதல், நட்பு, உறவுகள், ஏமாற்றங்கள், கண்ணீர், தொய்வுகள் என நம்மைச் சுற்றி நடக்கும் பற்பல உணர்வுகளுக்கும் நிகழ்வுகளுக்குமான காரணங்கள் என்ன? இவை யாவும் மாற்றவே முடியாத விதிகளா? கடவுளின் திருவிளையாடல்களா? விடை தெரியாமல் குழம்பி நிற்கிறோம்.

இந்தக் குழப்பங்களுக்கான பல்வேறு விளக்கங்களைத் தத்துவஞானிகள் காலம் காலமாக அளித்துவந்துள்ளனர். புகழ்பெற்ற கிரேக்கத் தத்துவங்கள் தொடங்கி, நவீன ஐரோப்பியத் தத்துவங்கள் வரை எவையும் மனித இனத்தின் பிரச்சனைக்கு வேர் என்னவென்பதைக் கண்டுரைக்காத குறைபாடுடையவையாக இருந்தன. 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியும் நெருக்கடிகளும் ஒரு புதிய தத்துவத்திற்கான வழிவகை செய்தன.

மார்க்சுக்கு முன்பு வரை பெரும்பாலான தத்துவஞானிகள் மனிதர்களின் வாழ்க்கையை இன்ப துன்பங்களை வான மண்டலங்களில் தேடிக்கொண்டிருந்தனர். மார்க்ஸ் அதனை இந்தப் புவியில் கண்டடைந்தார். மனிதர்களின் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் தனிவுடைமைச் சமூகமும் உழைப்புச்

சுரண்டலும்தான் என்பதைத் தமது ஆய்வுகளின் மூலம் நிறுவினார்.

பள்ளிக்கூடப் பாடங்களில் விருப்பமற்று இருந்தார் மார்க்ஸ். ஆதிக்கத்திற்கும் தன் சுயநலத்திற்கும் பயன்படும் கல்வியையும், ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பதில்களைத் தாண்டிச் சிந்திக்க முடியாத ஆனால் தன் போலிப் புலமையின் மேல் அகங்காரம் கொண்ட ஆசிரியர்களையும் அவர் வெறுத்தார். கல்வி என்பது மனிதனின் அறிவை வளர்ப்பதாக இல்லாமல் வெறும் மனனம் செய்து ஒப்பித்து வேலை வாங்கும் அற்பத்தனமாய் இருப்பதைக் கண்டுகொண்டார். அரசருக்கும் நாட்டுக்கும் தேவையான மந்தைகளைத் தயாரிக்கும் பள்ளிக்கூடங்களின் மீது வெறுப்புற்ற மார்க்ஸ் பள்ளியில் சுமாரான மதிப்பெண் பெறும் மாணவனாக, ஆசிரியர்களுக்குப் பிடிக்காத ஒருவராக இருந்ததில் வியப்படைய எதுவுமில்லை.

இன்னும் மேலதிகமாய்த் தமது பெற்றோர்களுக்குக் கூட பிடிக்காத ஒருவராகவே அவர் இருந்தார். ஏனென்றால் அவர் தேர்ந்தெடுத்த வேலை அம்மாதிரியானது. மார்க்ஸ் அப்படி எத்தகைய வேலையைத் தெரிவு செய்தார்?

'வேலையைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி ஒரு இளைஞனுடைய சிந்தனைகள்' என்ற தலைப்பில் பள்ளி இறுதி நாளில் கட்டுரை ஒன்றை எழுதினார். இக்கட்டுரை மார்க்சின் பாதையை மட்டுமன்றி நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டிய பாதையையும் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

சுயநலத்தினால் பெருமைகொள்ளும் மனிதர்களை மார்க்ஸ் தன் வாழ்நாள் முழுவதும் வெறுத்தார். அப்படிப்பட்ட மனிதர்களை "ஒரு நபர் தனக்காக மட்டுமே பாடுபட்டால், ஒருவேளை பிரபலமான அறிவாளியாகலாம், ஒரு மாபெரும் விஞ்ஞானியாகலாம், மிகச்சிறந்த கவிஞராகலாம், ஆனால் அவர் குறையில்லாத உண்மையிலேயே மாபெரும் மனிதராக முடியாது" என்கிறார்.

எனில் மனிதராக விரும்பும் ஒருவர் எத்தகைய வேலையைத் தேர்ந்தெடுப்பது? கோடிக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வேலையை அவர் தெரிவு செய்ய வேண்டும். ஆம் அவர் பொது நலத்திற்காகத் தன்னைத் தியாகம் செய்ய வேண்டும். மனித குல விடுதலைக்காக அவர் போராட வேண்டும் என்கிறார் இளம் மார்க்ஸ். அந்த 17 வயதில் அவர் எழுதிய கட்டுரையோடு அவர் நின்றிருந்தால் தற்பெருமை கொண்ட வெறும் காகிதப் புலியாகக் காணாமல் போயிருப்பார்.

தனது கட்டுரையில் கூறியதைப்போலச் சுயநலத்தில் பெருமைகொள்ளும் அற்ப மனிதனாக இல்லாமல், மனிதகுல விடுதலையின் மாபெரும் தத்துவத்தை வகுத்தளித்து மாபெரும் மனிதராகத் திகழ்ந்தார் மார்க்ஸ். தனக்கு முந்தைய தத்துவஞானங்களையெலாம் கற்று அதிலுள்ள குறைகளைக் கடுமையான போராட்டங்களுக்கு இடையில் மிகச்சரியாகக் களைந்தார்.

உலகத்தை அறிந்துகொள்வதற்கும் அதன் வழி உலகை மாற்றியமைப்பதற்குமான இயங்கியல் பொருள் முதல்வாதம் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் எனும் மார்க்சியத் தத்துவத்தை மார்க்சும் அவரது ஆருயிர்த் தோழர் ஏங்கெல்சும் கண்டடைந்த வரலாற்றினை இந்நூல் விவரித்துச் சொல்கிறது. மார்க்சியம் நாடெங்கும் ஒடுக்கப்படும் சுரண்டப்படும் கோடிக்கணக்கானவர்களின் விடுதலைத் தத்துவமாய் இன்று மாறி இருக்கிறது.

மார்க்சின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பற்பல தகவல்களை மட்டுமல்லாமல் மார்க்சியத்தின் வரலாற்றையும் ஒருங்கே இணைத்துக் கூறுவதனால் மார்க்சை அறிதலோடு மார்க்சியத்தையும் அறிந்துகொள்ள இப்புத்தகம் உதவி புரிகிறது.

மார்க்சை அறிதலென்பது மார்க்சியத்தை அறிந்துகொள்வதிலேயே முழுமையடைகிறது. அத்தகைய தத்துவத்தைப் பயில்வதன் மூலம் நாம் நமது வாழ்க்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மனித குலத்தின் வாழ்க்கையையும் மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுகொண்டவராகிறோம்.

"நான் மார்க்சையும் ஏங்கெல்சையும் இன்னும் நேசிக்கிறேன். அவர்களைத் திட்டுவதை என்னால் சகித்துக்கொள்ளமுடியாது. இல்லை, அவர்கள் உண்மையான மனிதர்கள்! நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையை நாம் விட்டுவிடக்கூடாது" - புரட்சியாளர் வி. இ. லெனின்.

மார்க்சியம் கற்போம்! மனித குல விடுதலைக்காக உழைப்போம்! ■

சிறுகதை

• முனைவர் பு.இந்திராகாந்தி (நுண்மதி அரசு)
ஓவியங்கள் : அன்பழகன்

# நடுத்தெரு

விளக்கொளிகளின் நடுவில் கம்பீரமாய் மண்ணைத்தொட்டு சமாதானத்தில் நெகிழ்ந்து போன தோழனைப் போல் றெக்கை இரண்டையும் பரப்பியபடி திருச்சி விமான நிலையத்தில் ஏர் ஏசியா விமானம் தரையிறங்கியது. பல வருடங்களுக்குப் பின் தாய் மண்ணை மிதித்ததில் சில்லென்று பூத்தது உடல். சோதனைகளை முடித்துக்கொண்டு நிலையத்தை விட்டு வெளியே வந்தான் ராசு. நிலைய வாசலில் உணர்வுகள் அத்தனையும் ஒட்டுமொத்த விழியில் வழிய தனது உறவுகளை அழைத்துபோகக் காத்திருந்தனர் பலர். இவனை யாரும் தேடி வந்து தழுவிக்கொள்ளும் வாய்ப்பு இவனுக்கு வாய்த்திருக்கவில்லையென்பதால் வெளியில் வந்து ஒரு ஆட்டோ பிடித்துத் திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் வந்து இறங்கினான்.

அவனுக்கு அந்த இடம் பழைய புழக்கத்திலிருந்து மாறிப் போயிருந்தது. அது அதிகாலை நேரமென்பதால் ஆள் நடமாட்டம்



கொஞ்சம் குறைவாகவே இருந்தது. டீக்கடையில் ஒரு டீயை உறிஞ்சிக் குடித்தான். அது காய்ந்துகிடந்த தொண்டைக்கும், குளிரில் இருந்த உடலுக்கும் மென்மையாய் இருந்தது. டீக்கடைக்காரரிடம் 'தஞ்சாவூர் பஸ் இப்படித் தானே வரும்?' என்று கேட்டுக்கொண்டிருக்கையில் வந்துவிட்ட தஞ்சை பஸ்ஸைப் பார்த்தவுடன் காசையும், டீ கிளாசையும் வைத்துவிட்டு 'அண்ணே.. பஸ்சு வந்துருச்சு' என்று கூறிக் கொண்டே ஓடி வந்து ஏறிக்கொண்டான். சன்னல் ஓரமாக இருக்கையைப் பார்த்து அமர்ந்தான் ராசு.

அமர்ந்தவன் தனது அலைபேசியில் மணியைப் பார்த்தான். அது சரியான நேரத்தைக் காட்டவில்லை. வெளிநாட்டில் இருந்து வரக்கூடிய மனிதர்கள் அங்கு என்ன வேலை பார்த்திருந்தாலும் தங்கச் செயினு, மோதிரம், கண்ணுல ஒரு கலர் கண்ணாடியோட கார்ல ஊருக்கு வந்து இறங்குறத பார்த்துருப்போம். ராசு ஆடம்பரமில்லாதவன். அளவிட்டுச் செலவு செய்யக்கூடியவன். இரண்டு அண்ணன்களுடன் பிறந்தவன். அளவான குடும்பம் மட்டுமல்ல அழகான குடும்பமும் அவர்களின் குடும்பம். ஒரு வேலி நிலம், நீச்சு, பம்பு செட் என்று ஊரில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கான குடும்பம் அவர்களின் குடும்பம். ஒருநாள் சிறிய சண்டையில் பெரிய அண்ணன் அடித்துவிட அங்கே இங்கே என்று அலைந்துவிட்டு மலேசியா ஓடிப் போனவன் இருபது வருடம் கழிச்சுத் திரும்புகிறான். வயது நாற்பத்தைந்தைத் தொடப்போகிறது.

உள்ளூர்ல பத்தாவது வரை படித்தான். பத்தாவது பெயிலு. மீண்டும் எழுதினான். அப்பவும் பெயிலு. இதனால் மலேசியாவில் பெரிய வேலையெல்லாம் ஒன்னும் கிடையாது அவனுக்கு. ஓட்டலில் சர்வராகத்தான் வேலை செய்தான். காரணமே இல்லாது அண்ணன் அடித்ததில் மனம் வெறுத்து ஊர் நினைவற்றுப் பிழைத்துக் கிடந்தான் மலேசியாவில்.

அலைபேசி வசதி அது இதுவென வந்த பொறவும் ஊருக்கும் அவனுக்குமான தொடர்பு சுத்தமாக இல்லாமல் இருந்தது. சில நாட்களாக மண்வாசம் மனதிற்குள் வந்துவந்து போக ஒரு முடிவாக ஊருக்கு வந்துவிட்டான். நினைவுகள் புகைவண்டியாய்த் தொடர 'சார்.. எங்க போகணும்?' கண்டெக்டர் குரல் கேட்டது. நினைவுகள் துண்டித்து, 'தஞ்சாவூரு சார்' என்று சொல்லி டிக்கெட் வாங்கிக்கொண்டு சன்னல் வழியே வந்து தீண்டும் காற்றுடன் கண்களை நழுவவிட்டான். சாலையில் காரு, லாரியெனப் பறந்துகொண்டிருந்தன. 'அடேயப்பா.. இருபது வருசத்துல ரோடு என்னமா மாறிக்கிடக்கு. போக்குவரத்தும் எம்புட்டு கூடிக்கெடக்கு' என்று நினைக்கையில் அவனது ஆத்தங்கர ஊர் வந்து மனதிற்குள் இன்ப வலியை ஏற்படுத்தியது.

உள்ளம் ஊரைத் தொடுகையில் இனிப்பு நாவில் ஒட்டிக்கொண்டது. நினைவுகளோடு வந்திறங்கிக் கான்வெண்ட் பஸ் ஸ்டாப் வந்தான். அந்த வழியாத்தான் தெற்கு நோக்கி அவன் ஊருக்குப் போகணும். வந்து இறங்கியவுடன் அங்கே புதிதாக முளைத்துக்கிடந்த பாலம் பயமுறுத்தியது. அவனுக்கு இடம் புடிபடல கொஞ்சம். பேருந்து போன தடத்திலேயே பின் தொடர்ந்தான். ஊருக்குப் போற பஸ் எப்படி வரும் எங்கே போகும் எங்கே நிக்கிறது என்ற குழப்பத்தில் வந்தவன் அருகில் இருந்த பெட்ரோல் பங்கில் விசாரித்தான். 'நாயக்கர் விடுதி பஸ்சு இப்படி வருமா சார்?' 'பத்தொம்பதாம் நம்பரா?' 'அது தெரியல்லை சார்.. நான் ஊரவிட்டுப் போய் ரொம்ப நாளாச்சு. நாயக்கர் விடுதிக்கு முன்னாடி ஆத்தங்கர ஏ ஊரு சார்'என்றான். 'அதான் பத்தொம்பதாம் நம்பரா சார்?' 'நீங்க என்ன பண்றிங்க?' பெட்ரோல் பங்குல நின்னவரு தனது வலது கையைத் தூக்கி 'அந்தப் பாலத்துக்குக் கீழே போயி சோத்துக்கை பக்கம் வளஞ்சிங்கென்னா கிருஷ்ணா பேக்ரி இருக்கு. அதுக்குப் பக்கத்துல மொகனையில நின்னுங்க. பஸ் வரும்' என்றான். 'சரி சார்' என்று சொல்லிவிட்டு அங்கு வந்து நின்றான்.

'புதுரோடு, புதுசு புதுசா கடைகள், புதிய மனுசங்க. யப்பா இருவது வருசத்துல மாறித்தான் கெடக்குது தஞ்சாவூரு' என்று யோசித்து நிக்கையில் பத்தொன்பதாம் நம்பர் பஸ் நாயக்கர் விடுதின்று வந்து நின்றது. அவனுடன் ஏற நின்ற

இன்னொருத்தர் ‘சார் ராணி நிக்குமா?’ என்றதுக்கு ‘ராணியெல்லாம் நிக்காது, பஸ்தான் நிக்கும். ஏறு’ என்று நக்கலடித்தவாறு விசில் ஊதினார் கண்டெக்டர்.

‘சார் ஆத்தங்கர ஒன்று’ என்று டிக்கெட்டைக் கேட்டு வாங்கிக்கொண்டு சட்டைப் பையில் நுழைத்தவனது மனசு பஸ்சைவிட வேகமாக ஆத்தங்கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றபின் காலை நேரமென்பதால் பஸ்சில் நான்கைந்து பேருதான் இவனோடு சேர்த்து இருந்தனர். முக்கால் மணி நேரப் பயணத்திற்குப் பின் ‘சார், ஆத்தங்கரத் தானே கேட்டீங்க. வாங்க இறங்குங்கோ’ என்று ஒரு இடத்தில் இறக்கி விட்டுவிட்டு பஸ் புகையைக் கக்கிக்கொண்டு வேகமெடுத்தது. இறங்கியவனுக்கு ஒன்னும் புரியல. நான்கு வழிச்சாலையில் இறக்கிவிடப்பட்டிருந்தான்.

ராசு சுற்றும்முற்றும் பார்த்தான். இடம் புடிபடல. எதுத்தாப்புல கார் கம்பனி ஒன்று விளம்பர பலகையைச் சுமந்தபடி நின்றது. அதன் அருகில் பத்தடி தள்ளி காஃபி கடையுடன் சேர்ந்தாப்புல டிபன் கடை நொர பொங்கும் டம்ளர் விளம்பரத்துடன் நின்றது. ‘நல்லாத்தானே கேட்டோம். ஆத்தங்கரன்னு. இது ஆத்தங்கரத் தானா? யாரையும் கேக்கலாம்னா முன்னாலும் ஆளு ஒருத்தரையும் காணும். காரும் பஸ்சும் வண்டியும் பறக்கது ரோட்டுல. கண்டெக்டர் சரியாத்தானே சொல்லி இறக்கிவிட்டார். பின்ன ஊரு எங்கே?’ என்ற யோசனையில் பேருந்து வழித்தடத்தில் ஓரமா ஒரு பத்தடி நடந்தான்.

எதிரில் சாக்குப்பையைச் சுமந்தபடி ஒருத்தர் வந்தார். ‘அண்ணே.. ஆத்தங்கர போகணும். இதுதான் ஆத்தங்கரன்னு கண்டெக்டர் இறக்கிவிட்டார். எனக்கு நிகா புரியலண்ணே. இது ஆத்தங்கரதானே.’

அவனை மேலும்கீழும் ஒருமுறை பார்த்து விட்டு, ‘ஆமா.. நீங்க வடக்கால போகணுமா? தெக்கால போகணுமா?’ என்று கேட்டார்.

‘அட இல்லண்ணே. ஆத்தங்கர போகணும்’

சிரித்துக்கொண்டே ‘தம்பி.. அதான் வடக்காலயாத் தெக்காலையான்னு கேட்கிறேன்,’ என்றார். ‘அண்ணே.. இப்பவும் விளங்கல’ என்றான் ராசு அவரிடம்.

‘தம்பி, புதுசா பைபாஸ் வந்ததுல ஊரு வடக்காலையுமா தெக்காலையுமா பிரிஞ்சுப் போச்சு. அதான் நா வடக்காலையா தெக்காலையாங்குறேன். இப்ப நீங்க எந்தப் பக்கம் போகணும்?’.

‘நடுத்தெரு மொக்குத் தாண்டி கொக்குருணி தெரு’.

‘நீங்க சொல்ற தெரு வடக்கப் போச்சா தெக்கப் போச்சான்னு தெரியலையே’ என்று இருவரும் குழம்பி நிக்கையில் ‘அண்ணே நீங்க போங்கண்ணே. ஒரு நிதானமா நா தெக்காலையே போறேன்’, என்று சொல்லிக்கொண்டு சாலைக்கு நடுவில் முளைத்திருந்த அரளிச் செடிகளை விலக்கிக்கொண்டு தெற்கில் நடந்தான்.

உடைந்தும் உடையாமலும் சென்ற ஒரு தார்ச்சாலை ராசுவை உள்ளே இழுத்துப்போனது. பேருந்து நிற்கும் இடத்தில் சிறுசா வச்சு மளிகை கடை நடத்துன முத்துக்கண்ணு கடையக் காணும். காலை வேளையில் வய வரப்புக்குக் போறவுங்களால் நெறஞ்சுக்கிடக்கும் கமலா இட்லிக் கடை இருந்த இடம் மண்ணும் மேடுமாக கிடந்தது. ‘ஏயப்பா, கமலா அத்த கை பக்குவத்துல அரச்ச சட்னிக்கும் சுவைக்கும் சாம்பாருக்கும் மொத்த இட்லியுமில்ல வித்துப் போகும். அட பாவமே எல்லாம் மண்ணால்ல தெடலா கெடக்கு. அந்த ஊருக்கே அழகு அந்தக் கல்லுக்கேணிதான். ஒரு சோட்டு பொண்ணுங் களால் காலையும், மாலையும் நெறஞ்சுக் கெடக்கும் கேணியடி. அந்தக் கேணியடியில் ஒட்டிக்கெடக்கும் வெளம்பரப் போஸ்ட்டுல சுத்து வட்டாரத்துல என்ன நடக்குது, ‘சீனி’ தேட்டருல என்ன படமுன்னு கேணியப் பாத்தா போதும். தெருஞ்சுக்கலாம். அட ஒப்புறானே, கேணியக் காணும்’ என்று நினைத்துக்கொண்டு உத்துப் பார்த்தான். சுத்தி ஒரே கருவ. அதுக்குள்ள குப்பைகள். அதில் நாலைந்து நாய்கள் எதையோ கௌவிக்கொண்டு ஒன்றையொன்று குரைத்துக் கொண்டு உருண்டன.

கொஞ்ச தூரம் போனவன் வாயைப் பிளந்தபடி மூச்சு முட்டி அப்படியே நின்று போனான். ஏதோ ஒரு படத்துல சொல்லுவானே வடிவேலு, கெணத்தக் காணலென்னு. அது மாதிரி ஊர் பள்ளிக்கொடத்தக் காணல. பின்னாடி திரும்பிப் பார்க்கையில் 'லிட்டில் ஏஞ்சல் ஆங்கிலப் பள்ளி' விளம்பரப் பலகையோடு நின்னது.

மனம் பதக்பதக்கென்றாக 'ஆமா? இங்ஙனக்குள்ளதானே மாமரக்காடு, எங்க அது?' என்று தேடினான். ஆடைக்கும், கோடைக்கும் மணல் கொட்டிக்கிடக்கும் அந்த மாமரத் தோப்புல நடு இரவில் மட்டும்தான் ஆள் நடமாட்டம் இருக்காது. மற்ற நேரத்துல ஆட்களால் நிறைந்த கெடக்கும் தோப்பு. அந்தி நேரம், பள்ளிக் கொடம் லீவு நாளுல, ஆம்புளப் புள்ளைகளும் பொம்புளப் புள்ளைகளும் வேறுபாடற்று விளையாடும் விளையாட்டில் இரண்டாகும் மாந்தோப்பு .



விளையாடும் புள்ளைகளை நம்பி கடைவிரித்து அதில் பொழப்பு நடத்தி வந்த பயிரு விக்கும் முத்தம்மா, முந்திரிப்பழம், ஈச்சம்பழம் விக்கும் பார்வதி, இவர்களைச் சுற்றிப் பிள்ளைகள் கூட்டம் ஈயென மொய்த்துக்கிடக்கும் ஆரவாரத்துடன் தோப்பு. கோடைக் காலங்களில் காற்றுடன் மழையடித்துக் கொட்டுகையில் கொட்டும் புளியையும், மாங்காய்களையும் பொறுக்க ஊர் பிள்ளைகளே மரத்தடியில் சத்தமிட்டுக் கிடப்பார்கள். அந்தப் புளிய வனத்தையும், மாமரத் தோப்பையும் காணவில்லை.

அந்த இடத்தைக் கண்களை இடுக்கி விரித்துப் பார்த்தான். அடர்ந்து கிடந்தது கருவேலமும் காட்டுச் செடிகளும். உள்ளே ஆள் நுழைவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியே கொஞ்ச தூரம் ரோட்டில் நடந்தான். இதுவரைக்கும் யாருக்கும் இவனை அடையாளம் தெரியவில்லை. ஊர் முனை சென்று வலப்புறம் திரும்புனா கம்புளிக்கோயில் இருக்கும். அதைச் சுற்றி ஈச்ச வனம், எலந்தவனம், காரக்காய், சூரக்காயெனக் கனிந்து கிடக்கும் காட்டுப் பழங்கள். அந்தக் கனி வாசத்தில் கம்புளி ஆண்டவர் காட்சி கொடுப்பார். ஒருகாலத்தில் கம்மாளத்தார் வழிபட்ட சாமி அது என்று இவனது ஆத்தா ஒருமுறை சொன்ன ஞாபகம் வந்தது. பின்னாளில் வழிபாட்டு முறையில் கொஞ்சம்கொஞ்சமாக விடுபட்டு ஊரில் அவன் இருக்கும்போதே வழிபாட்டு மரபில் இருந்து விலகி வெறும் கோயில் மட்டுமே இருந்தது. மழைக்காலங்களில் ஆடு, மாடுகள் கோயிலுக்குள் சென்று ஒதுங்கி நிற்கும். ஆனாலும் அந்தக் கோயில் பழமை மாறாது கெடந்தது. இப்போ சிதலமடைந்து ஆள் உள்ளுக்குள் செல்ல முடியாத அளவுக்குக் காட்டுச்

செடிகள் சுற்றி வளைத்துக் கிடந்தன.

ஆம்பளையாட்கள் திருப்பூர், கோயம்புத்தூர், கேரளா இன்னும் சிலர் இவனைப் போல் வெளிநாட்டில் இருக்கக்கூடும் என்று நினைத்துக் கொண்டான். ஊரில் அவ்வளவாக இளைஞர்கள் இல்லை. பூச்சி, பாம்பு என எது வந்தாலும் அதை அடிப்பதற்கோ திருட்டுப் பய வந்தாலும் காப்பாத்தவோ ஆம்பள தொன இருப்பதாகத் தெரியவில்லையென்று நினைத்துக்கொண்டு அவன் வீட்டைத் தேடினான். அடுத்தவர் வீட்டை மட்டுமல்ல, அவன் வீட்டையும் அடையாளம் காண்பது எளிதாக இல்லை அவனுக்கு. தோப்பு, தொறவு என அழகு கொட்டும் வீடுகள் மொத்தமாய் அழகிழந்து கருவக்காடாய் முள்ளும் கல்லுமாக மாறிக்கிடந்தன.

ஒருகாலத்தில் பசங்களும், பொம்புளப் புள்ளைகளும் நீச்சல் கத்துக்கிட்ட கறுத்தாமுட்டு மண்டக்கேணி பாழடைந்து, நீரற்றுக் கண்ணாடி பிளாஸ்டிக் கொப்பிகளால் நிரம்பிக்கிடந்தது. அதத் தாண்டித்தான் அவன் வீடு. ஒரு வழியா கேணிய அடையாளம் வைத்து அவன் வீட்டை வந்தடைந்தான்.

காலை பத்து மணியாகியும் அண்ணன் பெரியவர் கட்டிலில் பழந்துணி போல் சுருண்டு கிடந்தார். வீட்டுத் திண்ணையில் அண்ணியின் போட்டோவுக்கும் அண்ணன் மகன் போட்டோவுக்கும் பொட்டும், மாலையும் இடப் பட்டு அது காய்ந்து கிடந்தது. ராசுவுக்கு நடந்துள்ளது என்னவென்று ஓரளவு யூகிக்க முடிந்தது. மெதுவாகக் கையில் வைத்திருந்த பையை வைத்துவிட்டு வீட்டிற்குள் எட்டிப் பார்த்தான். அம்மா, அப்பா, சின்ன அண்ணனும் இல்லை என்பதை உள்ளே ஆணியில் மாட்டப் பட்டிருந்த போட்டோக்கள் காட்டிக்கொடுத்தன.

நீர் கண்களில் முட்டியது ராசுவுக்கு. நெஞ்சுக்குள் கட்டை வைத்து இறுக்குவது போல் துயரம் இதயத்தை இறுக்கிப் பிடித்தது.

அண்ணனின் கால்மாட்டில் அமர்ந்து மெதுவாக 'அண்ணே.. அண்ணே' என்றான். போர்த்தியிருந்த துப்பட்டியை விலக்கிக்கொண்டு குரல் அடையாளம் காட்டவே 'யாரு ராசுவா?' என்றபடி மெல்லத் தலையை தூக்கி 'ராசு' என்று கைகளைப் பிடித்துக்கொண்டு கதறினான். 'ஏ தம்பி.. எப்படிடா இருக்கே.. தம்பி ராசா.. இந்தக் கைதானேய்யா ஒன்ன அடுச்சது.. நீ போனதும் வீட்டுச் செல்வமே போச்சையா' கைகளால் முகத்தில் அடித்துக்கொண்டு கதறினார். 'அண்ணே அழுவாதே' என்று அண்ணனையும், வீட்டையும் வாசலையும் பார்த்துக் கதறினான் ராசுவும். அண்ணன் அழுவதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை ராசுவுக்கு. 'அண்ணே அழுவாதே. அதான் நான் வந்துட்டனே. பாத்துக்குவோம் விடுண்ணே.' 'அய்யா அது இல்லையா. கல்யாணம் காச்சின்னு பண்ணி புள்ள குட்டியோட வந்துருந்தா எம் மனசு குளுந்துருக்கும். ஒத்தையாளா வந்துருக்கியே'.

'நானும் பொண்டாட்டி புள்ள தம்பி ஆயி அப்பன் எல்லாரையும் எமனுக்குப் பொறுக்கிக் கொடுத்துட்டு ஒத்தையால்ல நிக்கிறேன். நீயும் இப்படி வந்து நிக்கிறியே' என்று கத்துன கத்துல அக்கம்பக்கம் உள்ள அத்தன பேரும் ஓடியாந்துட்டாக.

ராசு வந்திருப்பது பலருக்குத் தெரிந்தது. இவன் ஊரவிட்டுப் போன பொறவு வாங்கப் பட்டு வந்தவுக, பொறவு பொறந்த புள்ளைகளென அங்குப் பலருக்குத் தெரியல இவன. தெரியாதவர்கள் ஒருத்தருக்கொருத்தர் முணுமுணுத்துக்கொண்டு காதிற்குள் பேசிக் கொண்டனர். 'இவனும் சும்மால்ல வந்துருப்பா போலருக்கு. யாரச் சொல்லி என்ன, விதித்த விதி' என்று அதில் சிலர் பேசியதும் இவன் காதில் விழாமல் இல்லை.

வீட்ட ஒட்டுனாப்புல இருக்கும் சின்னாத்தா பெரியாயி சொம்புல தண்ணி எடுத்து வந்து கொடுத்தாள். தண்ணியைக் குடித்துக்கொண்டு ராசு செவத்த ஒட்டுனாப்புல இருந்த தண்ணிப் புழங்கும் தண்ணித் தொட்டியைப் பார்த்தான். அது சிதலமடைந்து கிடந்தது. ஒருமொற அம்மா அட வச்ச மூணு கோழிகளும் நாப்பது குஞ்சுக்களுக்கு மேலப் பொரித்திருந்தது. 'ம்மா கோழி குஞ்சுகளுக்குத் தொட்டிப் பக்கத்துல

இரையைத் தூவ, எங்கிருந்தோ வந்த பருந்து குஞ்ச தூக்கப்பாக்க போட்டுச்சே வச்சிருந்த மொறத்தால ஒரு போடு. குஞ்சுகள் பதுங்கிப் பிழைத்துப் போனதும் பருந்து தட்டுத்தடுமாறித் தப்பித்துப்போனது, நினைவில் வந்து கண்ணுக்குள் ஆடியது ராசுவுக்கு. கோழி குஞ்சுகளக் காப்பாத்துன அம்மா எல்லாரையும் எமனுக்குக் கொடுத்துட்டு, அதுவும் போயிடுச்சே என்று நினைக்கையில் குடல் மேலும் கீழுமாகப் புரள்வதுபோல் இருந்தது. அழுகையை அடக்க முடியவில்லை. சின்னாத்தா பெரியம்மாதான் ஆறுதல் சொன்னாள்.

'போனத நெனஞ்சு வருந்தாதையா, கைகால் கழுவிட்டு வாங்க. இட்லி ஊத்திருக்கேன். சாப்பிடலாம்' என்று அழைத்தாள். இதுவரை வேடிக்கைப் பார்த்தவர்கள் ஒவ்வொருவராகக் கலைந்து போனார்கள். ராசுவின் கைகளை வருடிய அண்ணன் விஸ்வநாதன் வாய் திறவாது அழுது தீர்த்ததில் நீர் தாரைதாரையாய்த் தரையை நனைத்தது. பாத்துக்கிட்டு நின்ன சின்னாத்தா 'எதுக்கு முடுஞ்சத நெனச்சு அழுவுறிய. யாரு வாழ்க்க யாரு கையில' அனுபவசாலியாகச் சின்னாத்தாள் பேசினாள்.

பேசிவிட்டுத் தட்டு நிறைய இட்லியும், சட்னியும் வைத்துவிட்டு 'சாப்பிடுங்க ரெண்டுபேரு. ரோட்டுப் பக்கம் போயிட்டு வாறேன்' என்று போனாள் சின்னத்தாள்.

நேரம் மதியத்தைத் தாண்டியும் இருவரும் ஒன்னொன்னா பேசிக் கவலை, கண்ணீர், துக்கம், கோபமென உணர்வுகளின் வெளியில் சென்று மீண்டு கொண்டிருந்தனர். சின்னாத்தா பெரியம்மா கொண்டாந்து வச்ச இட்லியை மூனு மணி வாக்கில் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

'எப்பா என்னப்பா இப்படி பண்ணுனிய. காலையில் கொண்டாந்து வச்சத ஆறி அலமலந்து போன பொறவு சாப்றிய?' போனவள் சாப்புட்ட தட்ட தள்ளி வச்சுட்டுக் 'கருவாடு இரண்டு போட்டுக் கொழம்பு வச்சேன். இந்தாங்க சாப்புடுங்க', பேசிக்கொண்டே வேறு தட்டில் சாப்பாட்டை நிறைத்துச் சுடச்சுடக் கொழம்பை ஊற்றினாள். 'அய்யோ இருக்கட்டும் பெரியம்மா ராத்திறிக்கி எடுத்துக்குறோம்' என்று கூறியும் அவள் பிடிவாதமாகச் சாப்பிட்ட இட்லித் தட்டை இழுத்து வைத்துவிட்டு 'சாப்புடுங்க' என்று சாப்பாட்டை வயிறு குளிர போட்டாள். இந்த ஒரு சாண் வவுத்துக்குதான் நீ, நான் என்று



அடுச்சுக்குறோம் புடுச்சுக்குறோம். வப்பனா? எடுப்பனான்னு வாழ்க்க ஓடுது.

'எதுக்குப் பெரியம்மா ஒனக்குக் கஷ்டம்?'

'எது கஷ்டம்? பசிக்கிற வவுத்துக்குச் சோறு போடுறதா? அட போப்பா'வென்று கூறிக்கொண்டே 'சாப்புடுங்க' என்று சொல்லி விட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டாள் சின்னத்தா. சாப்பிட்டு முடித்துவிட்டு வாசல் வந்து சுத்துமுத்தும் பார்த்தான் ராசு. மெல்ல மேற்கு நோக்கி நடந்தான்.

மேற்கால என்று நினைக்கையில் செவ்வந்தி வாசம் அவன் மனதை நிறைத்தது. மேற்குக் காடு பூராவும் அந்த ஊருக்காரவுங்களுக்குச் செவ்வந்தித் தோட்டமும் கனகாம்பரப் பயிரும்தான். அது மணல்பாங்கான நிலம். கெணத்துத் தண்ணி பம்பு செட்டுத் தண்ணி கொண்டு பூக்கொல்லை கண்ணுக்கு விருந்தாக் கெடக்கும். அந்தக் கொல்லைகளைத் தாண்டி காட்டாறு, வடக்க மழபேஞ்சா பத்து நிமுசத்துல கர புரண்டு நொங்கும் நொறையுமா சிவப்பு மண் வாசத்தோட ஓடிவரும். அதுக்கும் கொஞ்சம் தெக்கால புதாத்து வாய்க்கா. அத ஒட்டுனாப்புல ஓடக்குளம். அதுக்குப் பக்கத்துல புதாறு. ஒரு அர பர்லாங்கு சிமெண்ட்டால் கட்டப்பட்டு மேல ஆறும் கீழே காட்டாறுமா போவும். தண்ணி இரண்டுலையும் வரும்போது பாத்தாக் கண்கொள்ளாக் காட்சியா இருக்கும். அதோட காட்டாத்துல அண போட்டு தண்ணி கோட காலத்துலையும் வத்தாமக் கெடக்கும், அத வண்ணாத்தொரன்னு அழப்பாங்க. சுத்துப்பட்டு ஆடுமாடுகளே மேச்சலுக்கு வந்துட்டுக் கோட காலத்துல தண்ணி குடிக்க அங்க நிக்கும். அணையவொட்டுனாப்புல ஊத்து வெட்டித் தண்ணி எடுப்பாக. கோடையில கெணறு வத்துனாலும் எளநித் தண்ணி மாறித் தித்தித்துக் கிடக்கும் வண்ணான் தொர தண்ணி. எல்லாம் நாணல் தட்டையும் கண்டபடி காட்டுமுள்ளு கருவமுள்ளு மண்டி எடமே தெரியாம அலங்கோலமால்ல போச்சு.

ஆதங்கத்தை முணுமுணுத்தபடி கடத்திக் கொண்டு அப்படியே ஊரைத் திரும்பிப் பார்த்தான். ஊர ரெண்டாக்கி பைப்பாஸ் நடுவுல போறத பார்த்தவனுக்கு மண்ட ரெண்டானது போல இருந்தது. நடுத்தெரு வெல்லக் காலி பண்ணுருக்கு பைபாசு. பார்த்தவனுக்கு ஒன்றும் சொல்ல முடியல. நடுத்தெரு வீடுவோ ஒன்னொன்னும் அரண்மன போலல்ல இருக்கும். சின்ன மண்ரோடு. அதன் ஓரத்துலதான் வீடுகள், திண்ணை அடையவே பத்துப்படிகள் தாண்டணும். நாட்டுவோடு வேய்ந்து முற்றம் வச்சு அந்தக் காலத்துலேயே இந்த ஊருக்காரங்க ராசாபோல வாழ்ந்ததன் அடையாளம் அந்த வீடுகள் என்பதைப் பார்த்தோன்ன தெரிஞ்சுக்கலாம். 'நடுத்தெருவா அது. அரண்மனத் தெருல்ல அது. சுத்தமா ஒன்னுமே இல்லையே' என்று யோசித்துக் கொண்டு, அப்படியே அவனுக்குப் பின்னால் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒரு பதினைந்துக்கும் மேற்பட்ட குடிசைகள் முளைத்திருந்தன. நடந்துமுடிந்த விபரீதம் புரிந்தது ராசுவுக்கு.

அவனவன் வயித்துப்பாட்டுக்கு, ஊருவிட்டு ஊரு பொழைக்க போனதுல்ல அரசையும், அதிகாரிகளையும் கேக்க ஆளுல்லாம இப்படி பண்ணிப்புட்டாகலோ. அவனுள் ஆறாத்துயரம் வலியைக் கொடுத்தது. ராசுவால் அதற்கு மேல் அங்கு நிக்க முடியல. அதற்குத் தகுந்தாற்போல் வானம் மேகம் திரண்டு இடி இடிக்கத் தொடங்கியது, வானத்துக்கும் பூமிக்குமாகக் கருமேகம் சூழ்ந்து அமளிகுமளியாக வானம் பரபரத்துத் தூறல் விழ ஆரம்பித்தது. நனைந்துவிடாமல் வீட்டிற்கு ஓடிவிடணும் என்று விரைந்தான். வீடு வருவதற்குள் வெளுத்து வாங்கியது மழை. அதற்குள் தோட்டத்து வாய்க்கால் நீரால் நிறைய ஆரம்பித்தது. வீட்டிற்குள் சென்றவன் மண் வெட்டியை எடுத்தான். உயிர் நரம்பு புது வலி கண்டது. வந்து மளமளவென வாய்க்காலை விட்டு மிதக்க ஆரம்பிக்கும் நீரைத் தேக்குவதற்கு மண்ணை வெட்டிப் போட்டான். நீர் உயர்ந்து கொண்டிருந்தது. தூரத்தில் பைபாஸ் ரோட்டில் அடிக்கும் மழையில் நகர முடியாது பார்க்கிங் லைட் போடப்பட்டு வாகனங்கள் வரிசையாக ஓரம்கட்டப்பட்டு நின்று கொண்டிருந்தன. மழை மேலும் கொட்டத் துவங்கிவிட்டிருந்தது. ■

கவியும் சித்திரமும் :
• அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

பெண்ணென்றால்
இந்தப்
பிரபஞ்சத்துக்குப் –
பிடிக்கும்
பிரபஞ்சத்தையே
பிரசவிக்கும் பெண்ணுக்குப்
பிடிவாதம்
ரொம்பப் –
பிடிக்கும்

அன்புகொண்ட
ஆண்களை
அழ வைக்கப் –
பிடிக்கும்
அவனைத் தனது
அடிமனதில்
வைத்துக்கொண்டு
அலையவிடப் –
பிடிக்கும்
அறவே பிடிக்காதது
போல
அரிதாரம் பூசி –
நடிக்கும்
அணுவளவு
அகன்றாலும்
அங்கமெலாம் –
துடிக்கும்
அழுது கண்ணீர் –
வடிக்கும்

அஞ்சனம் தீட்டிய
விழிகளுக்குள்
ஒரு
வெஞ்சினம்–
ஒளித்து வைக்கும்
நேசத்துக்குரியோரைப்
பிரியும்
போதெல்லாம்
அதன் நெஞ்சகத்துக்குள்
ஒரு
வஞ்சகத்தை –
நிறுத்தி வைக்கும்

பெண்ணியத்தை
பெருமையுடன்
முன்னிறுத்துவதே
அதன் –
கண்ணியம்தான்
என்பதைக்
கவனத்தில் –
கொள்ளும்
அந்தக்
கண்ணியத்தைக்
காப்பதற்காகவே
எத்தனை பெரிய
இடர்வரினும் அதை
எதிர் –
கொள்ளும்

இங்கே
தடித்த வார்த்தைகளைப்
பேசியதால்
கோபித்துச் சென்ற
தசரத குமாரனை
எண்ணி
வெடித்து அழுகிறாள்
உள்ளம்
துடித்து அழுகிறாள் –
ஊர்மிளை

அன்று
தேர்வலமேறி
அவனுடன்



ஊர்வலம் போகையில்
எல்லாம்
தேசமே தொழுது –
வணங்கியது
இன்று
ஊர்மிளை என்னும்
நாமத்தைக் கேட்டாலே
அதற்கு
உள்ளும் புறமும் –
எரிகிறது

பெருங்கவலையோடு
பின்தொடர்ந்த
மக்களை
தெருமுனையில்
நிறுத்திவிட்டு
அவள் இருக்கும்
அரண்மனையை
நோக்கி வந்தனர்
அம் –
மூவரும்
கருமேகம்போல்
கவலைசூழ்ந்து
நிற்கும்
அவளது முகத்தை
ஒருவித
கலவரத்தோடு பார்த்தனர் –
அனைவரும்.....!

தன்னைப் பார்த்தபடியே
நிற்கும்
தசரத ராமனையும்
தம்பியையும்
தவிர்க்கும் வகையில்
தலை திருப்பி
வேறொரு திசை பார்த்து
திரும்பி –
நின்றாள்
வேண்டுமென்றே
அவர்களை
வெறுப்பேற்றும் வகையில்
விரும்பி –
நின்றாள்.....

கால்கடுக்க நிற்கும்
கார்மேக வண்ணனை
கண்ணெடுத்தும் பாராது
நிற்கும்
ஊர்மிளையைக் கண்டு
அந்த நாடே
ஒருகணம்–
அதிர்ந்தது
ஒழிக ஒழிகவென
எழுந்த கோஷமொன்று
அவர்கள்
ஒவ்வொருவர் நாவினின்றும் –
உதிர்ந்தது
ஊர்மிளையை நோக்கி
ஒருசேர
எச்சில் கூட்டி –
உமிழ்ந்தது
ஆற்றொணாக் கோபத்தில் –
அமிழ்ந்தது

ஆத்திரக்
கொழுவொன்று பாய்ந்து
இலக்குவனின்
இதயத்தை
ஏகத்துக்கும் –
அகழ்ந்தது
எரிஉலைக்குள்
செருகிய துருத்தியாய்
அவனுக்குள்
என்னென்னவோ –
நிகழ்ந்தது

ஆத்திர எரிமலைக்குள்
அவன் –
அமிழ்ந்தான்
அவன் பங்குக்கு
அண்ணனும் அண்ணியும்
அறியாதவாறு
அவளை நோக்கி –
உமிழ்ந்தான்

உதடுகளைத் தாண்டி
திமிறி வந்த
வார்த்தைகளை
உருண்டு வந்த
பந்தொன்று –
தடுத்தது
உடைப்பெடுத்த
வெள்ளம்போல்
பெருகிவந்த
துயரத்தை
சரஞ்சரமாய்
கருவிழிகள் –
தொடுத்தது......

நொடிக்கொருமுறை
வெடித்துக்கொண்டிருக்கும்
தன் மனசை
நோகவும் –
முடியவில்லை
அவனைப் பிரிந்ததால்
வந்த
நோய்தாக்கி
சாகவும் –
முடியவில்லை
வீணாகத் தான்கொண்ட
வீம்பைத் தளர்த்தி
வெட்கம் விட்டு
அவனுடன்
போகவும் –
முடியவில்லை
எனவே
கையறுநிலையிலேயே
அவள் –
நின்றாள்
தன் மெய்வருத்தும்
கவலையினை–
மென்றாள்.....

பிணக்கு தவிர்த்து
அந்த
இணையருக்குள் யாதொரு
இணக்கமும் இல்லை
என்பதைத்
தசரத ராமன் –

புரிந்துகொண்டான்
அணங்கைப் பிரிய
மனமின்றியே
தளும்பிநிற்கிறான்
தன் தம்பியென –
தெரிந்து கொண்டான்
ஆகவே
வீணே நேரங்கடத்துதல்
விவேகமன்று
என்றுணர்ந்து
விடைபெறும் நோக்கில்
அவளைப் பார்த்துத் தன்
விழிகளை –
மலர்த்தினான்

அதுவரையில்
அமைதி காத்த
இலக்குவன்
வெறுப்பு மேலிட
விழிகள் சிவந்திட
'புறப்படலாம் அண்ணா'
எனப்
பொதுவாகச் –
சொன்னான்
'பேசிய வார்த்தைகளுக்கு
அந்தப் பேய் –
வருந்தப் போவதில்லை
உயிர்
கூசிடுமளவுக்குக்
கொடுமொழி கூறிய
அவள்
ஒருபோதும் இனி –
திருந்தப்போவதுமில்லை
இன்னும் ஏழ்
பிறப்பெடுப்பினும்
என்னுள்ளம் அவளோடு –
பொருந்தப்போவதுமில்லை'
என
அண்ணனுக்கு மட்டுமே
கேட்கும்படி மிக –
மெதுவாகச் சொன்னான்....

ஏதோ ஒன்று
இருவருக்கும் இடையே–
நடந்திருக்கிறது
அதனால்தான்
இலக்குவன் நெஞ்சம்–
உடைந்திருக்கிறது
இது அவனைப்
பிரிய மனமின்றி
ஊர்மிளை நடத்தும்–
நாடகம்
உடன்பிறந்தவனே
ஒப்புக்கொண்டாலும்
உடையவளின் ஒப்புதலின்றித்
தன்னோடு அழைக்கக்
கூடாதல்லவா அவனைக் –
கானகம்....?
எனப்
பூலோக ராமனுக்குப்
புத்தி –
தெளிந்தது
தன்னை அறியாமல்
நேர்ந்துவிட்ட
இந்தத் தவறை எண்ணி
நெஞ்சுக்குள்ளொரு
நெருடல் –
நெளிந்தது.....

ஆகவே..
ஊர்மிளைக்குக் கேட்கும்படி
உரக்கச்சொன்னான்
தன் தமையனிடம்
'அண்ணியோடு
நான்
ஆரண்யம் போவது
அரச கட்டளைக்கு –
அடிபணிந்து
ஊர்மிளையின்
ஒப்புதலின்றி வருகிறாய்
நீ
அவளோடு கொண்ட
ஊடலை –
அணிந்து

இவ்வளவு நடந்தபின்னும்
இதயமற்று உன்னை
என்னோடு
அழைத்துப்போவேனா –
துணிந்து...
காடேகி மீளும்
என்
கனவு நனவாகுமா
உன்
இல்லாள் சிந்தும்
கண்ணீரை –
சுமந்து...?

ஆகவே
ஊர்மிளையின்
ஒப்புதலோடுதான்
நீ –
வரவேண்டும்
நீ
உடன்வரவேண்டுமெனில்
அந்த ஊர்மிளையும்
உன் –
உடன்வரவேண்டும்'
என அந்த
தசரத ராமன்–
ஆணையிட்டான்
தன்
தம்பியை நோக்கி
ஒரு –
பாணம் விட்டான்...!

பிணக்குடன் வருகிறான்
தன் பின்னவன்
என்றுணர்ந்தபின்
அறிவிற் சிறந்த
எவனும் இதை
அனுமதிக்க –
மாட்டான்....
ஆண்டவனே
ஆனாலும்
தனது
அன்புக்குரியவளின்

அனுமதியின்றி
நீ
செய்யும் செயலை
ஆமோதிக்க-
மாட்டான்
ஆகவே நீ போய்
அவளிடம்
அனுமதி பெற்று
வாவெனக்
கச்சிதமாய்
ராமன் ஒரு
கடிவாளத்தைப் –
போட்டான்....!

அண்ணனின்
ஆணை கேட்டும்
அசையாது நின்ற
இலக்குவனைக் கண்டு
'இன்னமும்
ஏன் நிற்கிறாய்'
எனக் கேட்டு
இடிபோல இராமன் –
கர்ஜித்தான்
அணுவளவும்
அசையாது நிற்கும்
அவனைக் கண்டு
ஆத்திரம் கொண்டு –
அர்ச்சித்தான்....!

முகஞ்சிவந்து நின்ற
இலக்குவனுக்கு
அண்ணனின் ஆணை
இடியாக –
இறங்கியது
அந்தப்
பொல்லாதவளின்
முகத்தில்
இனியும் விழிப்பதில்லை
என்று
இருந்தவனின் உள்ளம்
பொடிப்பொடியாக –
நொறுங்கியது....!

பகை கொண்டு
போனவன்
பரிதாபமாய் நிற்பதைக்
கண்டு
நகை கொண்டு
நிற்கிறது அந்த
நயவஞ்சக –
நரி
இறுமாப்போடு
சிரிக்கும்
அவள் முகத்தில்
எப்படியும் பூச வேண்டும் –
கரி
இப்போதைக்கு
அண்ணனின் ஆணையை
ஏற்பதுபோல்
நடிப்பதுதான் –
சரி
எனப்
பணிவதுபோல் நடித்தான் –
தம்பி
அதைப் பார்த்துப்
பரந்தாமனும் மகிழ்ந்தான் –
நம்பி....!

தடம் மாறி நிற்கும்
தங்கையைக் கண்டு
தடுமாறி நின்றாள் –
சீதை
அடம்பிடித்து நிற்கும்
கோலத்தில்
அவளை ஒருபோதும்
அவள் –
பார்த்ததில்லை
ஆணவத்தை
கர்வத்தை
அணுவளவும் தன்னுள்
அவள் –
சேர்த்ததில்லை....
பின்
எதற்காக இப்படி –
நடிக்கிறாள்

ஏனின்று கண்ணீர் –
வடிக்கிறாள்
எனச்
சீதையின் உள்ளம் –
சிடுசிடுத்தது
தன்
இளையவளின்
துயர்கண்டு-
தழுதழுத்தது....

இலக்குவன்
ஊர்மிளையை
இளக்காரக் கண்களோடு –
ஏறிட்டான்
'அடியே.. ஊர்மிளை
என் அண்ணனும்
அண்ணியும்
இதயமில்லாது திரியும்
உன் போன்ற
தப்பானவர்கள்-
அல்ல
அந்த
உமையவளுக்கும்
சிவனுக்கும் –
ஒப்பானவர்கள்...
ஆகவே
நான்
ஆரண்யம் சென்றுவர
உன்னிடம்
அனுமதி –
கோருகிறேன்
அகம்பாவங்கொண்டு
நீ
இவ்வுலகில் எனக்கு
அணைபோட நினைத்தால்
என்
ஆவியைத் துறந்து
அவ்வுலகம் –
சேருகிறேன்......!'

– ஊர்மிளை வருவாள் ■

ஆய்வு

தொடர் - 5

• கடையநல்லூர் பென்ஸி

# கீழடி – தமிழின் தாய்மடி





தமிழகத்தில் இதுவரை நடந்த தொல்லியல் ஆய்வுகளைப் பார்ப்போம்.

1. வரிசை எண், 2. தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இடம், 3. மாவட்டம், 4. வருடம்.

1 ஆனைமலை, கோயம்புத்தூர் 1969 – 1970
2 திருத்தங்கல், விருதுநகர் 1994 – 1995
3 கோவலன் பொட்டல், மதுரை 1980 – 1981
4 மாங்குடி, திருநெல்வேலி 2001 – 2002
5 வசவசமுத்திரம், காஞ்சிபுரம் 1969 – 1970
6 கரூர், கரூர் 1973 – 1979, 1994 – 1995
7 அழகன்குளம், ராமநாதபுரம் 1986 – 1987, 1990 – 1991, 1993 – 1994, 1995 – 1996, 1996 – 1997, 1997 – 1998, 2014 – 2015
8 கொற்கை, தூத்துக்குடி 1968 – 1969
9 தொண்டி, ராமநாதபுரம் 1980 – 1981
10 பல்லவமேடு, காஞ்சிபுரம் 1970 – 1971
11 பனையக்குளம், தர்மபுரி 1979 – 1980
12 பூம்புகார், நாகப்பட்டினம் 1994 – 1995, 1997 – 1998
13 திருக்கோயிலூர், விழுப்புரம் 1992 – 1993
14 மாளிகைமேடு, கடலூர் 1999 – 2000
15 பேரூர், கோயம்புத்தூர் 2001 –2002
16 குறும்பன்மேடு, தஞ்சாவூர் 1984 – 1985
17 கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் 1980 – 1981, 1986 – 1987, 2008 – 2009
18 கண்ணனூர், திருச்சிராப்பள்ளி 1982 – 1983
19 பழையாறை, தஞ்சாவூர் 1984 – 1985
20 பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி 1968 – 1969
21 சேத்தமங்கலம், விழுப்புரம் 1992 – 1993, 1994 – 1995
22 படைவேடு, திருவண்ணாமலை 1992 – 1993
23 தேரிருவேலி, இராமநாதபுரம்
24 கொடுமணல், ஈரோடு
25 போளுவாம்பட்டி, கோயம்புத்தூர்
26 தரங்கம்பாடி, நாகப்பட்டினம் 2008 – 2009
27 ராஜாக்கள்மங்கலம், திருநெல்வேலி 2009 – 2010
28 ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி 2013 – 2014 , 2014 – 2015
29 தலைச்சங்காடு, நாகப்பட்டினம் 2010 – 2011
30 ஆலம்பரை, காஞ்சிபுரம் 2011 – 2012
31 பட்டறைப் பெரும்புதூர், திருவள்ளூர் 2015 – 2016
32 கீழடி, சிவகங்கை 2017 – 2018, 2018 – 2019
33 மாங்குளம், மதுரை 2006–07
34 செம்பியன்கண்டியூர், நாகப்பட்டினம் 2007–08
35 உக்கிரன்கோட்டை, திருநெல்வேலி 2014–15
36 நெடுங்கூர், கரூர் 2006–07
37 பரிக்குளம், திருவள்ளூர் 2005–06
38 மரக்காணம், விழுப்புரம் 2005–06
39 மோதூர், தருமபுரி 2004 – 2005
40 ஆண்டிப்பட்டி, திருவண்ணமலை 2004 – 2005.

• • •

இனி கீழடி இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகளுக்குப் பயணிக்கிறோம். பண்டைய தமிழகத்தின் நகர நாகரீகம் பற்றிச் சங்க இலக்கியத்தில் மட்டுமே நாம் படித்திருந்த நிலையில் இரண்டாம் கட்ட அகழாய்வின் முடிவுகள் அதனை மெய்ப்பிக்கத் தொடங்கின.

மொத்தம் 110 ஏக்கர் பரப்பளவின் தொல்லியல் மேட்டில் 5300 தொல்லியல் பொருட்கள் கிடைத்தன.

தொல்லியல் அகழ் ஆய்வுகளில் முதன் முறையாக நகர நாகரீகத்தைப் பறைசாற்றும் பத்துக்கும் மேற்பட்ட சங்ககாலக் கட்டிடங்கள் கிடைத்துள்ளன. இந்தப் பத்துக் கட்டிடங்கள் 53 அகழ் ஆய்வுக் குழிகளிலிருந்து மட்டுமே கண்டறியப்பட்டுள்ளன.

குழிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பல அதிசயங்கள் திறக்கவிருக்கின்றன. அனைத்தும் ஹரப்பா நாகரிகம் போன்று கழிவு நீர்க் கால்வாய் வசதியுடைய கட்டிட அமைப்புகள் என்பதும் தெரியவருகின்றன.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பல அறநெறிகளை வகுத்து உலகுக்கு வழங்கியது தமிழ் மண். அதன் தனித் தொன்மை, பழமைக்கால நகர நாகரீகம் இன்னும் முழுமையாக ஆராயப்படவேண்டும் என்ற தமிழ் அறிஞர்களின் கவலை உண்மையாகும் காலம் கனியத் தொடங்கியது. அரிக்கமேடு, காவிரிபூம்பட்டினம், திருக்காங்குடி, காஞ்சிபுரம் உள்ளிட்ட இடங்களில் கிடைத்த கட்டிடப் பகுதிகள் எல்லாமே சிறிய அளவிலானவை. பெரிய அளவில் கட்டிடப் பகுதிகள் இதுவரை நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைக்கவில்லை. செங்கல் பயன்பாட்டுக் கட்டிடங்கள்தான் ஓர் இடம் நகரப் பகுதி எனத் தீர்மானிக்கும். கிராமப்புறப் பகுதிகளில் செங்கற்களால் ஆன கட்டிடத் தொகுதிகள் கிடைக்காது. மக்கள் வாழ்விடப் பகுதியும் அந்த வாழ்விடப் பகுதியில் செங்கற்களால் ஆன விரிவான கட்டிட அமைப்புகளும் அகழாய்வில் கிடைத்திருக்கின்றன. மக்கள் வளமையாக வாழ்ந்ததற்கான ஆதாரங்கள்தான் இந்தத் தொல்பொருட்கள். கீழடியில் கிடைத்த அனைத்துப் பொருட்களும் முழுமைபெற்ற பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கால மக்கள் பயன்படுத்திய சுடுமண் முத்திரைக் கட்டைகள், எழுத்தாணிகள், அம்புகள், இரும்பு, செம்பு ஆயுதங்கள், அரிய வகை அணிகலன்கள், 18 தமிழ் பிராமி எழுத்துகளையுடைய மட்பாண்ட ஓடுகள் உட்பட 3,000க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

மேலும் உறைகிணறுகள், செங்கற்சுவர்கள், கூரை ஓடுகள், மண்பாண்டங்கள், மிளிர்கல் அணிகலன்கள், எலும்புக் கருவிகள், இரும்பு வேல், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானையோடுகள் எனப் பல்வேறு தொல்லெச்சங்கள் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. இலக்கியத்தில் குறிப்பிடப் படும் பாண்டியர்களின் தொல்நகரான "பெருமணலூர்" இதுவாக இருக்கலாம் என்றும் கருதுதப்படுகிறது

அகழ்வாய்வில் கிடைத்த செங்கற்சுவர் கட்டிட அமைப்புகள் போன்றவை கீழடி ஒரு வளர்ச்சியடைந்த நகரமாகத் திகழ்ந்ததற்கு வலுவான சான்றாக உள்ளன. சங்க காலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழ்வாய்வு மாற்றியமைத்துள்ளது.

சுடுமண் குழாய், கழிவுநீர் தொகுதிகள், தொகுநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் நாகரிக வளர்ச்சியின் முக்கிய மைல்கல்களாகக் கருதுதப்படுவன. கீழடியில் சுடுமண் குழாய் மூலம் உருவாக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய் வசதியுடன் கட்டிடங்கள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளன.

'ஆதன்', 'உதிரன்', 'திசன்' போன்ற தனிநபர்களின் பெயர்களைக் குறிப்பிடும் தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இங்கு சூதுபவளம், பளிங்கு, அகேட் மணிகள், பச்சை, மஞ்சள், நீல நிறக் கண்ணாடி மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. யானைத் தந்தத்தினாலான தாயக்கட்டைகள், தாமிரத்தாலான கண் மை தீட்டும் கம்பி ஆகியவையும் கிடைத்துள்ளன. இரும்பாலான அம்பு முனைகள், எழுத்தாணி, சுடுமண் முத்திரைக் கட்டைகள், தந்தத்தால் ஆன தாயக் கட்டைகள், சுடுமண் பொம்மைகள் உட்பட்ட பல்வேறு அரிய தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

– தொடர்ந்து அகழ் ஆய்வோம் உண்மைகளை ■

• ஸ்ரீகா

# சற்றே பெரிய நிலக்கரித் துண்டு – ஒரு பார்வை






காதலாலும் அது சார்ந்த உணர்வுகளாலும் கொட்டிக்கிடக்கும் இன்றைய இலக்கியச் சமூகத்திடையேதான் தான் வாழும் நிலத்தின் பிரச்சினையைக் காத்திரமாக எழுத முன்வந்திருக்கிறார் கவிஞர் சூ.சிவராமன்.

நிலம் கைவிட்டுப் போனதால் கரித்துண்டாகிப் போனவன் அந்நிலத்தில் புதைக்கும்/எரிக்கும் அளவிற்குச் 'சற்றே பெரிய நிலக்கரித் துண்டானவன்' கதையைத்தான் இந்நிலமெங்கும் சிந்தி இருப்பதாகத் தொகுப்பு முழுக்க விரவவிட்டிருக்கிறார்.

"தாகத்தின் கோப்பைகளை நிரப்பிய ஊர்க் கிணறும் கொல்லைக் கிணறும் ஊற்றுக் கண்களை மூடிக் கொண்டன"

"குடிசையின் கீழ் ஓடும் கெயில் குழாய்கள்"

இதைப் பார்த்த நம் புலன்களையும் நாம் அடைத்துக்கொள்கிறோம், உள்ளே சென்ற காற்று வெளிவராமல்.

துரத்தும் நிலக் காட்சிகளில் மருதத்தைப் பல வகைகளிலும் பதிவுசெய்கிறார்.

கண்களை அரிய காட்சிக்கும் இட்டுச் செல்கிறார்.

'ஆடுடைத்த எருக்கில் வடியும் பால்'

'பசு ஒன்று எக்கியுடைத்த ஒதியங்கிளை'

'வெயிலை நிறுத்த வாலசைக்கும் அணில்கள்'

'வெட்டுக்கிளியைப் பிடிக்க பாயும் கரிச்சான்கள்'

'எறும்புகள் ஏறி இறங்கும் மரச்சரிவுகள்'

செம்போத்துகள், ஓந்திகள், கொண்டலாத்திகள், நறுவல்லிப் பழங்கள், பீக்களாத்திச் செடிகள் என்று இந்தத் தலைமுறையே அறியா வழக்கொழிந்த செடிகளையும் பழங்களையும் மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் அதனதன் இயல்புகளில் உலவவிட்டுப் பதிவுசெய்திருக்கிறார் எழுத்தில். இனி இவற்றைக் காலங்கள் அழித்தாலும் எழுத்துக்களில் எஞ்சியிருக்கும் அடுத்த தலைமுறைக்கு.

வாகனங்களின் பேரிரைச்சல் பொருந்திய நம் செவிகளைக் கிராமத்தின் அமைதிக்குக் கொடுக்க வைக்கிறார்.

ஆனால் அந்த அமைதியைக் குக்கூக்களற்ற காற்றின் இரைச்சல் என்கிறார்.

அவர்களின் மகிழ்ச்சி, இசை எல்லாம் காற்றில் தந்தி இல்லாமல் நேரில் பரவும் பறவைகளின் ஒலியாகவே இருக்கிறது.

அதே கிராமத்தில்தான் முன்னொரு காலத்தில் வாழ்ந்தவன் விழுந்து சாக ஒரு நதி இருந்தது. அதற்குக் கூட இப்போது வழி இல்லை என்பதற்கு வருந்துமிவர் இன்னொரு கவிதையில் மணலில் துள்ளும் கெண்டைகளை எழுதி நம்மையும் துடிக்கவைக்கிறார்.

சுலைமான் நானாவின் கனவுகள் மூன்றும் நெய்தல் நிலப் பாட்டையும், நனவு ஒன்று அந்நிலத்தின் முடிவையும் சொல்வதைப்போல் நான்கிலும் கடலாடியிருக்கிறார் மிக அழகாக.

"எரிய மறுத்த நெஞ்சுக் கூட்டின் மேல் கொட்டிய சீனி

அவ்வுடல் அன்றுதான் ருசித்தது

அவ்வளவு இனிப்பையும்'

என்று இடுகாட்டில் உணர்வோடு சுவையைக் கொட்டியவர்;

இஸ்லாத்திலும்,

"புதைமேட்டில் இடுப்பளவு வளர்ந்திருக்கும் புற்களை

விரல்களால் அலைந்தேன் அது லாத்தாவின் கூந்தலைப் போல் அத்தனை மிருதுவாக இல்லை" என்று சமரசம் உலாவும் இடங்களையும் பேதமற்று உரைக்கிறார்.

நாகூர்காரரான கவிஞர் பல கவிதைகளில் அவர்களின் வாழ்வியலையும் முன்னிருத்துகிறார். ஒரு கவிதையில் அவர்கள் வழக்கப்படி உணவு சமைத்துத் தந்திருக்கும் இவர் கறி தின்பது தேசத் துரோகமா என்ற கேள்வியையும் முன்வைக்கத் தவறவில்லை.

ஊதுபத்தி ஏற்றி இரண்டு கவிதைகளை மணக்க வைக்கும் இவரேதான் இரண்டு கவிதைகளில் மதுக்கடைகளைத் திறந்து வைத்துப் பொங்கியும் இருக்கிறார்.

போர் மூளும் சூழலில் அரசுக்குச் சிறு விண்ணப்பம் வைக்கிறார். "போரைத் துவங்குங்கள் கொஞ்சமே கொஞ்சம் பேர் இரைப்பைகளோடு இருக்கிறோம்" என்று.

வாங்கிய கடனை முழுதாய் விழுங்கும் பெரு முதலைகளை விட்டு வராக் கடனை வசூலிக்க விவசாயிகளைச் சுருக்கிட்டுத் தொங்கவிட்ட வங்கி மேலாளருக்கு "நீங்கள் அழைக்கும் வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு அப்பால் உள்ளார்" என்று சொல்கிறார்.

"தானியக் குதிரின் கதகதப்பிற்குள் முளைவிடத் துடிக்கும் உழவனின் உயிரணுக்கள்"

"விடலைகள் அணையாத காளைகளோ ஆண்மை இழந்து விட்டன"

"துருவேறிய மண்வெட்டி"

"கைவிடப்பட்ட தானியக் குதிர்'" என்று உழவனின் வலிகளை உணராத நம்மிடமும் காலத்திடமும் சொல்லிச் செல்கிறார்.

அரசியல், அதிகாரம், நிலம், இயற்கை, விவசாயம், மணல் கடத்தல், மதுக்கடை எனச் சமூகத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் கையில் எடுத்தவர் உப்புச் சொல் என்ற ஒற்றைக் கவிதையில் காதலையும் சொல்கிறார்.

சிரிப்பு மரம் கவிதையில் "பூத்துக் காய்த்த சிரிப்பெல்லாம் கூடி நின்று துன்புறுத்துகின்றன அழச்சொல்லி" என்கிறார்.

இது காதல், உறவு, நட்பு என்று எதன் பிரிவாகவும் இருக்கலாம். அச்சிரிப்பு மரம் போதியாக இருக்கும் பட்சத்தில் பூக்களும் காய்களும் கனிந்து விழத்தான் என்றுணர்ந்தால் அழாமலும் இருக்கலாம்.

உலர்ந்த தேனடையில் பிழிந்த சொட்டுக் களைச் சப்புக்கொட்டியபடியே கரிக்கோடுகளால் மனிதரில்லா ஒரு பெருங்காட்டின் சித்திரத்தைத் தீட்டுகிறார். இக்கவிதையினூடே ஒரு அரசியலையும் பிணைத்திருக்கிறார்.

அந்தக் கோட்டைக் கூட கரிக்கோடாகவே பயன்படுத்தி இருக்கிறார். பல இடங்களில் கரியைப் பறக்கவிடும் இவர் அதனால் பலமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவே உணர முடியுகிறது.

தான்வாழும் நிலம் சார்ந்த மனிதர்களின் வாழ்வியலை எல்லாவற்றின் வாயிலாகவும் பேசும் கவிஞராகவே இவரை இத்தொகுப்பில் நிலைத்துவிட்டுச்சென்றிருக்கிறார்.

சற்றே பெரிய நிலக்கரித்துண்டு இச்சமூகத்தின் எழுதப்படாத சொல்ல மறந்த சோகங்கள். ■

கட்டுரை

தொடர் - 7

• கரிகாலன்

# தேநீர் சாலை



**திராவிட சிசு!**

மாணவர்கள் குறும்புக்கு அளவே இல்லை.

ஒரு பள்ளி. அங்கு அண்ணாமலை என்றொரு ஆசிரியர். மாணவர்கள் அவர் பெயரை அண்ணா'மு'லை ஆக்கியிருந்தார்கள். இதை அந்த ஆசிரிய நண்பரே சொல்லிச் சிரித்தார்.

'உண்ணாமுலை அறிவோம். அண்ணா முலையா நீங்கள்?' அவரைக் கேலி செய்தேன்.

திருவண்ணாமலை சிவனை அண்ணாமலை என்பார்கள். அண்ணுதல் என்றால் அருகில். அண்ணா என்றால் அணுகமுடியாதவர். அடியைத் தேடிய திருமாலாலும் முடியைத் தேடிய பிரம்மாவாலும் அணுகமுடியவில்லை என்பதால் அண்ணாமலையானார்!

இந்த அண்ணாமலையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது திருஞானசம்பந்தர், 'உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்' எனப் பாடுகிறார்.

இங்குதான் எனக்குக் குழப்பம்.

உண்ணா முலை என்றால் பாலருந்தப்படாத முலை எனப் பொருள்.

நான் சீர்காழியில் படித்தவன். அங்கிருக்கும் சிவனுடைய ஆலயத்திற்கும் சென்றிருக்கிறேன்.

தேவாரம் பாடிய ஞானசம்பந்தன் மூன்று வயதுக் குழந்தை. ஒருநாள் அவரது தந்தை சிவபாத இருதயர், ஞானசம்பந்தனை அழைத்துக்கொண்டு இந்தக் கோவிலருகே உள்ள குளத்துக்கு நீராடவருகிறார்.

கரையில் வீற்றிருக்கும் குழந்தைக்குப் பசி. 'அம்மா அப்பா பசிக்கிறது!' என வானத்தைப் பார்த்துக் குழந்தை அழுகிறது. பார்வதி தேவி இறங்கி வருகிறார். குழந்தையை அள்ளித் தன் முலையமுதை ஊட்டுகிறார்.

ஆனால் அதே திருஞானசம்பந்தர்தான் உமையை உண்ணாமுலை என்கிறார்.

இப்படி, பெண்தெய்வத்திடமே பாலருந்திய தாலோ என்னவோ பெண்கள் மீது கரிசனம் ஞானசம்பந்தருக்கு.

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்

எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை

கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.'

பெண்களைப் போற்றும் இவரது பாடல் இன்றளவும் சைவர்கள் இல்ல மன்றல் நிகழ்வில் பாடப்படுகிறது.

ஞானசம்பந்தர் தமிழில் கலக்கத்தை, அச்சத்தைக் காணமுடியாது. 'நாளும் கோளும் என்ன செய்யும்' எனப் பகுத்தறிவு பேசும் பக்தி இவருடையது.

ஆகையால்தான் ஞானசம்பந்தனை ஆதிசங்கரர் 'திராவிட சிசு' என்கிறார். பக்திக்காக இல்லாவிடினும் தமிழ்ச்சுவை அனுபவிக்கவாவது பக்தி இலக்கியங்களைத் தமிழர் படிக்கவேண்டும்!

•

**'மூன்றாம் பாலினம்' சரியான சொற்பதமா?**

சமீபமாகத் தமிழக அரசு ஒரு விருது விண்ணப்பத்தில் திருநங்கை என்கிற சொல்லை அடித்துவிட்டுப் பேனாவால் மூன்றாம் பாலினம் என எழுதியிருப்பது சர்ச்சையை உருவாக்கி யுள்ளது!

மூன்றாம் பாலினம் என்றால் இயல்பாகவே, 'முதல்/ இரண்டாம்' பாலினம் யார்? என்கிற கேள்வி தோன்றுவது தவிர்க்க இயலாததாகிறது!

ஆண்/ பெண் என்கிற இலக்கணத்துக்கு வெளியே நிற்பவர்களைக் குறிப்பிட Trans (மாற்று) என்கிற சொல் பயன்பாட்டில் இருக்கிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இத்தகைய மாற்றுப்பாலினத்தோர் குறித்து விழிப்புணர்வோ, இவர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்போ இல்லை.

2016ஆம் ஆண்டு பிப்ரவரி 26ஆம் தேதி மக்களவையில் 'மாற்றுப் பாலினத்தவர்களின் உரிமைப் பாதுகாப்பு மசோதா 2016' ஐத் தாக்கல் செய்தது அரசு.

இம்மசோதா அளிக்கும் விளக்கத்தின்படி

1. திருநங்கை என்பவர் ஒரு நபர்.

2. முழுமையான ஆண் (அ) முழுமையான பெண்.

3. ஆண் (அ) பெண் கலவை. பெண் (அ) ஆண் கலவை.

4. ஆண், பெண் என்று ஒதுக்க முடியாத பாலினம்.

5. இதில் திருநங்கைகள், திருநம்பிகள், இடையிலிங்கர் (Intersex Persons) மனிதர்களும் அடங்குவர்.

இப்படி மூன்று பிரிவினரையும் ஒரே வரிசையில் அடக்குவது இவர்களுக்கிடையேயான நுணுக்கமான இடைவெளியை அடையாளம் காணத் தவறும் செயலாகத் திருநங்கை, திருநம்பி, இடையிலிங்கர் என மூன்று பிரிவினருமே கருதுகின்றனர்.

இது தொடர்பான சில நுட்பங்களை நாம் அறிந்துகொள்வது இத்தகைய அடையாளம் உடையவர்களை மதித்து நடக்க வசதியாக இருக்கும்.

முதலில் மாற்றுப்பாலினர் (Transgender) எனப்படுவோர் யார்? என்பதைப் பார்ப்போம். இவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பாலின வாழ்க்கை அனுபவம் உள்ளவர்கள். இப்பிரிவில் தங்களை மாற்றுப் பாலியலாளராக அடையாளம் காண்போர், பெண் அல்லது ஆண் என்ற பிரிவுக்கு வெளியில் வாழ்பவர்களை உள்ளடக்கலாம்.

இன்னொரு பிரிவு மாற்றுப் பாலியலாளர் (Transsexual). பிறப்பால் ஒரு பாலினமாக அடையாளம் காணப்பட்டவர்கள் உணர்வால் தங்களை வேறாக அடையாளம் காண்போர். சிகிச்சைகள் வாயிலாகப் பாலை வேறாக மாற்றிக் கொள்பவர்கள். அல்லது வேறு ஏதாவது வகையில் தங்களுடைய உடல்களைச் சீரமைத்துக் கொள்பவர்கள்.

மற்றொரு பிரிவு இருபாலியலாளர் (அ) இடையிலிங்கர் (Intersex). பிறப்பின்போதோ அல்லது பருவமடைந்த பின்போ, அவர்களுடைய உடல் சிறப்பியல்புகளிலிருந்து, ஆண் அல்லது பெண் என எளிதாகப் பாகுபடுத்த முடியாதோர். இது hermaphrodite என்னும் சொல்லைப் பிரதி செய்வதாக அமைந்திருக்கிறது.

மாற்றுப்பாலின உடை உடுப்பவர் (Crossdresser) என்றும் ஒரு வகையினர் உள்ளனர். உணர்வுரீதியாக, உளவியல்ரீதியாக, எதிர் பாலினருக்குரிய உடைகளை அணிபவர்.

இவர்களிடத்துப் பாகுபாடும், தொந்தரவும் காட்டாத வகையில் நமது சமூகம் நாகரீகம் அடைய வேண்டியிருக்கிறது.

காவல் நிலையங்களில், வேலைத்தலங்களில், கல்விப்புலங்களில், கழிப்பிடங்களில் இவர்களது அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். இவர்கள் கண்ணியத்தோடு நடத்தப்படவேண்டும்.

செக்ஸ் எனும் வகைப்பாட்டில் ஆணுக்கு M, பெண்ணுக்கு F குறிப்பதுபோல், இவர்களை அறிவியல்பூர்வமாக அடையாளப்படுத்த T(ransgender) எனக் குறிப்பது ஓரளவு பொருத்தமானதாக இருக்கும்.

இவர்களுக்கான இட ஒதுக்கீடு, சட்டப் பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்ய, மத்திய/மாநில அரசுகள் தொடரச்சியான நடவடிக்கை களை மேற்கொள்வது அவசியம்!

•

**ஒரு ஆசிரியை மாணவியான தருணம்!**

ஒருவர் வாழ்வில் மறக்க முடியாத இடமாக இருப்பது அவர் பயின்ற தொடக்கப் பள்ளி. அதில் பணியாற்றிய ஆசிரியர்கள், கூடப் படித்த பால்ய கால ஸ்நேகிதிகள், ஸ்நேகிதர்கள், பள்ளிக் காலத்தில் சென்ற சுற்றுலாத் தலங்கள்! இவையனைத்தும் மறக்க முடியாதவை.

சிறிய கிராமத்திலிருந்து கனவோடு புறப்பட்டு, பிரம்மாண்டமாக எழுந்து வந்து கால் நனைத்த கடல் அலை, புராதன வாசமும் எண்ணெய்ப் பிசுக்கும் கற்சிற்பங்களும் வானுயர்ந்த கோபுரமும் கூடிய ஆலயங்கள், விலங்குகள் குதித்து ஓடும் சரணாலயங்கள் எனச் சிறுவயது கண்களால் பார்த்த காட்சிகள், நினைவின் ஆல்பங்களில் அழிவதேயில்லை.

இத்தகைய அனுபவங்களை வழங்க வேண்டி, தமிழ் தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு சுற்றுலா சென்றார்.

வேதாரண்யம் வழியாகக் கோடியக்கரை, அகத்தியம்பள்ளி, வேளாங்கன்னி செல்லத் திட்டமிட்டிருந்தார்.

தமிழ் வேதாரண்யத்தில் உள்ள கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்தில்தான் படித்தார். இது ஒரு புகழ்பெற்ற நிறுவனம். சர்தர் வேதரத்தினம் அவர்களால் நிறுவப்பட்டது.

வேதரத்தினம் தீவரமான காங்கிரஸ்காரர். அவரது தந்தை அப்பாக்குட்டி பெரிய செல்வந்தர். இவர்கள் தாயுமானவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். காந்தியின் தலைமையை ஏற்றுச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வேதரத்தினத்தை ஆங்கில அரசு கைது செய்தது. அவரது தந்தையிடம், 'உன் மகனை மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கச்சொல். விட்டுவிடுகிறோம். இல்லையென்றால் அவரைக் கைது செய்வதோடு உங்கள் சொத்துக்களையும் பறிமுதல் செய்வோம்!' என மிரட்டியது ஆங்கில அரசு.

'என் மகன் ஒரு கோழையைப் போல் மன்னிப்பு கேட்க மாட்டான். நீங்கள் அவனைத் தாராளமாகச் சிறையில் அடைக்கலாம். சொத்துக்களையும் பறிமுதல் செய்யலாம்' என வீரத்தோடு பதிலளித்தார் அப்பாகுட்டி.

இத்தகைய தியாகப் பின்னணி கொண்ட வேதரத்தினம் அவர்கள் நிறுவியதுதான் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம். சர்தர் வேதரத்தினம் அவர்களது ஒருங்கிணைப்பில், ராஜாஜி தலைமையில் நடைபெற்றதே வேதாரண்யம் உப்புசத்தியாகிரகப் போராட்டம்!

இதில் கலந்துகொண்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியைப் புளிய மிளாரால் அடித்து முட்புதரில் தூக்கி வீசியது போலீஸ்! என்பதெல்லாம் சரித்திரம்.

கைவிலங்கு மாட்டி வேதரத்தினத்தைத் தெருவில் இழுத்துப்போனது போலீஸ். இந்தக் காட்சியைப் பார்த்த அந்த ஊர் நாவிதர் இனி போலீஸ்காரர்களுக்கு சவரம் செய்வதில்லை என உறுதி எடுத்திருந்தார்.

ஒருமுறை சாதாரண உடையிலிருந்த ஒருவருக்கு முகத்தில் சோப் தடவி சவரத்தைத் தொடங்கினார் அந்த நாவிதர். உட்கார்ந்திருப்பவர் போலீஸ்காரர் எனத் தெரியவந்தது. சவரத்தை முடிக்காமல் பாதியில் எழுந்து விட்டார்.

வழக்கு நீதிமன்றம் போனது. நீதிபதி போலீஸ்காரருக்கு சவரம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். நாவிதர் தனது ஆயுதங்கள் அடங்கிய பெட்டியை நீதிபதி முன்னால் வைத்தார்.

'நாட்டு விடுதலைக்குப் போராடிய எங்கள் அய்யாவை, கைகளில் விலங்கு மாட்டி அழைத்துச் சென்ற போலீசுக்கு என்னால் முகம் திருத்த முடியாது! வேண்டுமானால் நீங்கள் செய்யுங்கள்!' என்றார்.

கடுகடுவென முகம் சிவந்தார் நீதிபதி. இப்படி வாழும் காலத்தில் வரலாறான சான்றோர் எழுப்பிய குருகுலம் அது.

அந்தப் பள்ளியின் நூலகத்தில் படித்த புத்தகங்களே, பின்னாளில் நாவல் எழுதத் தன்னைத் தூண்டியது என அளம் நாவலின் முன்னுரையில் எழுதியிருப்பார் தமிழ்.

இப்போது குருகுலத்தை நிர்வகிப்பவர் சர்தர் வேதரத்தினம் அவர்களின் பெயரன். அவர் பெயரும் வேதரத்தினம். தமிழ் வேதைக்குச் சுற்றுலா வருவதை அறிந்த கம்யூனிஸ்ட் தோழரும் கவிஞருமான வீரமணி வேதரத்தினம் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்.

வேதரத்தினம் தமிழின் நாவல்களை வாசித்திருக்கிறார். தன்னுடைய குருகுலத்தில் பயின்ற மாணவி, இன்று தமிழ் இலக்கிய உலகில் ஒரு பிரபலமான எழுத்தாளராக விளங்குவதில் மகிழ்ந்திருக்கிறார்.

சுற்றுலா சென்றபோது தமிழை, தமிழ்ப் பள்ளி மாணவர்களை, குருகுலத்துக்கு அழைத்து வெஜிடெபிள் பிரியாணி, தயிர் சோறு என விருந்தளித்து மகிழ்ந்திருக்கிறார்.

இந்த உலகத்தில் விலைமதிப்பற்ற சில விசயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று நாம் படித்த பள்ளியிலேயே கௌரவிக்கப்படுவது!

சர்வோதயத் தலைவர் வினோபாஜி, மக்களவையின் முதல் சபாநாயகர் ஜி.வி.மாவ்லங்கர், கர்ம வீரர் காமராசர், ராஜாஜி, கக்கன் எனப் பல பெரிய மனிதர்கள் புழங்கிய இடம் அந்தக் குருகுலம்.

ஒரு கிராமத்துச் சிறுமியான தமிழை எழுத்தாளராக உயர்த்திய இடம்.

சுற்றுலா நிறைவடைந்து நள்ளிரவு வீடு திரும்பினார் தமிழ். கதவைத் திறந்தேன். ஆசிரியராகச் சென்று ஒரு மாணவியாகத் திரும்பிய தமிழ் முகத்தில் பெருமிதம்.

தூங்கத் தோன்றவில்லை. பேசிக் கொண்டிருந்தோம். இருள் மெல்ல கலைந்தபடி இருந்தது! ■

• ஜின்னா அஸ்மி

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல்-17



உனது சாபங்களால்தான்
என் காதல் பரிசுத்தமாகிறது...
இப்பொழுது இன்னும் என்னை முழுமையாகச் சபித்து விடு....

• • •

என் அழுகையை ஏற்றுக்கொள்
அது உனது சன்னதியில் என் கண்கள் ஏற்றும் தீபம்...
வெளிச்சம் வேண்டாமெனில்
ஊதி அணைத்து விடு

• • •

தரிசனமே தேவையில்லை...
என் பிரார்த்தனையெல்லாம்
உன்னை அடைவது அல்ல....
உன்னிடம் சரணடைவது...

• • •

எல்லாவற்றுக்கும்
கோடுதான் எல்லை...
காதலுக்கு மட்டும்தான்
எல்லைக்கோடு கூட இல்லை

• • •

நாம் நினைக்காதவரை
எல்லாவற்றிலும் காதல் நிறைந்திருக்கிறது
விரும்பும்போதுதான்
வெளியேறிவிடுகிறது

• • •

பார்வையின் வழியே காதலைக் கடத்துகிறாய்...
இதில் பாரபட்சம் என்னவென்றால்
தண்டனை கண்களுக்கில்லை

• • •

என் மரணத்தைப்
பாடு
அதுதான்
விடுதலைக்கான சிறகுகள்

• • •

நீதான் கடவுள்
வரமும் தண்டனையும்
யார் தருவார்..
உனைத் தவிர்த்து. ■

சென்றேன் வென்றேன்

மாணவர் பக்கம்

# கலைகளின் மகள்

• செ.வினோதினி

பரதநாட்டியப் பட்டயப் படிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், திருச்சி கிளை.



வானுயர்ந்த பெருமை கொண்ட சோழர்களால் கட்டப்பட்ட பெருமைமிகு கங்கை கொண்ட சோழபுரம் எழுந்தருளியிருக்கக்கூடிய அரியலூர் மாவட்டத்தில் உள்ள காட்டாத்தூர் என்னும் சிறிய கிராமத்தில் பிறந்தேன். சமூகச் சிந்தனையும், சேவை மனப்பான்மையும் கொண்ட என் பெற்றோர்களுக்கு நான் இரண்டாவது பெண் குழந்தையாகப் பிறந்தேன். ஓரிரவில் ஓர் விபத்தில் என் குடும்ப உறவுகள் அத்தனையையும் இழந்தேன். நானும் என் தந்தையும் மட்டும் உயிர் பிழைத்தோம்.

சிறு வயதிலிருந்தே எனக்கு விளையாட்டு, நடனம், இசை, பேச்சு, கவிதை என்று எல்லாவற்றிலும் ஆர்வம் உண்டு. கொடூரமான இந்த இழப்பினால் அனைத்தையும் மறந்தே போனேன்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு நான் சிரித்தேன் என்றால் அது என் கல்லூரி வாழ்க்கையில் மட்டும்தான். நான் தனலட்சுமி சீனிவாசன் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி. ஏ. ஆங்கிலம் சேர்ந்து படித்தேன். ஒருநாள் வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஒரு அழகிய குடும்பத்தைப் பற்றிய கதையை நடத்திக்கொண்டிருந்தார். எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. என் குடும்பம் எனக்கு நினைவிற்கு வந்துவிட்டது.

கதறிக் கத்தி அழ வேண்டும் என்று தோன்றியது. அப்பொழுது தான் மூத்த மாணவர்கள் சிலர் என் வகுப்பிற்கு வந்து நடனப்போட்டி நடக்கவிருக்கிறது, நடனமாட விரும்புபவர்கள் வரலாம் என்று கூறினார்கள். உடனடியாக எழுந்தேன். நடனத்தில் சேர வேண்டும் என்று நான் செல்லவில்லை. நன்றாக அழ வேண்டும் என்றுதான் சென்றேன். அங்கு மூத்த மாணவர்கள் சிலர் பாடலைப் போட்டு நகைச்சுவையாக ஆடிக்கொண்டிருந்தனர். அதனைப் பார்த்த எனக்குச் சிரிப்பு தாங்கவில்லை. என்னையே மறந்து நான் சிரித்தேன்.

இனி என் வாழ்க்கையின் மகிழ்ச்சி என்ன என்று நான் அறிந்துகொண்டேன். அன்று முதல் நான் என் சிறுவயது ஆர்வங்களில் கவனம் செலுத்தத் தொடங்கினேன். கையுந்து பந்து போட்டியில் மாநில வீராங்கனைக்காக விளையாடியுள்ளேன். தமிழகப் பாரம்பரிய, நடனங்களான பரதம், கும்மி, கரகம், ஒயிலாட்டம் மயிலாட்டம், குதிரையாட்டம், புலியாட்டம், கொக்கலியாட்டம் என்று பல கலைகளைக் கற்றறிந்து பல பரிசுகளை வென்றுள்ளேன். பதினெட்டுக்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று பல போட்டிகளில் பங்கெடுத்து வெற்றி பெற்றுள்ளேன்.

22 வயதிலேயே என் திருமணமும் முடிந்தது. அனைவரையும் என்னிடமிருந்து பிரித்தது என் வாழ்க்கை. அவர்கள் அனைவரும் ஒரே உருவமாக என் கணவரின் உருவில் மீண்டும் வந்து சேர்ந்தனர். என் பயணத்தைத் தொடர்ந்தேன். பல பட்டிமன்றங்களிலும் பேசிக் கருத்துகள் பலவற்றைப் பலரின் மனதில் பதித்துள்ளேன்.

நான் காந்தியடிகளை பற்றி எழுதிய 'அண்ணலே' என்ற கவிதைக்காகத் தஞ்சாவூரில் உள்ள ஔவை தமிழ்ப் பீடம் எனக்குக் 'காந்தியடிகள் விருது' வழங்கிச் சிறப்பித்தது. நான் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்களைப் பற்றி எழுதிய கவிதைக்காக, இராமேஸ்வரத்தில் உள்ள 'கவிஞர் கண்ணதாசன் இலக்கியப் பேரவை' எனக்குக் 'கலாம் சமூகக் கவிச்சிற்பி விருது' வழங்கிச் சிறப்பித்தது. புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்காக நான் எழுதிய 'இராணுவனே' என்ற கவிதையைப் பாராட்டித் தமிழ் கலை இலக்கிய அறக்கட்டளை எனக்கு நா.முத்துக்குமார் விருதினை வழங்கிச் சிறப்பித்தது. நான் ஆங்கில இலக்கியத்திலும் ஒரு இலக்கிய ஆய்வு நூல் வெளியிட்டுள்ளேன்.

கலைகளின் மீது கொண்ட பேராசையினால் நான் இப்பொழுது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியத்தில் ஒரு வருடப் பட்டயப்படிப்பினை படித்துக்கொண்டுவருகிறேன்.

கஷ்ட காலங்களில் மீண்டு வர வேண்டும் என்று எண்ணாமல் இருப்பதை விட, மாண்டு போகவேண்டும் என்ற எண்ணம் முதலில் எரிக்கப்பட்ட வேண்டும். ■





ISSN : 2582-4015